# இலங்கையின் பொதுக் கல்வியை நிலைமாற்றம்

2025



கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

**பின்வரும் நிறுவனங்கள் ஒன்றிணைந்து தயாரிக்கப்பட்டுள்ளது:**

தேசிய கல்வி ஆணைக்குழு
கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
தேசிய கல்வி நிறுவகம்
பரீட்சைகள் திணைக்களம்
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு

# முகப்புரை

இலங்கை அரசாங்கம் கல்வியை ஒரு அடிப்படை உரிமையாகவும், தேசிய அபிவிருத்தியின் ஒரு மூலக்கல்லாகவும் அங்கீகரிக்கிறது. உணர்வு ரீதியாக அறிவுள்ள, சமூகப் பொறுப்புள்ள, சமூக மற்றும் கலாச்சார விழிப்புணர்வுள்ள, அரசியல் கல்வியறிவு பெற்ற, விமர்சன ரீதியாக சிந்திக்கும் திறன் கொண்ட ஒரு பிரஜையின் விருத்தியானது, சம நியாயமான, விளைதிறனுடன் கூடிய, உட்படுத்தப்பட்ட, எதிர்காலம் சார்ந்த மற்றும் தேசிய முன்னுரிமைகள் மற்றும் சர்வதேச போக்குகளுக்கு ஏற்ப பதிலளிக்கக்கூடிய ஒரு வலுவான கல்வி முறையைப் பொறுத்ததாகும். ஆகையால், மிகவும் மேம்பட்ட கல்வி முறைமையொன்றினூடாக மாத்திரமே நாட்டின் அமைதி, சமூக நல்லிணக்கம், நல்லாட்சி, பொருளாதார செழிப்பு மற்றும் நிலைபேறுடன் கூடிய அபிவிருத்தியை உறுதி செய்ய முடியும்.

இந்தச் சூழ்நிலையின், பொதுக் கல்விக்கான விரிவான மறுசீரமைப்பு நிகழ்ச்சி நிரலை அரசாங்கம் ஆரம்பித்துள்ளது. முதல் கட்டமாக 2026 முதல் தரம் 1 மற்றும் தரம் 6 இற்கான திருத்தப்பட்ட கலைத்திட்டங்கள் மூலம் இது நடைமுறைப்படுத்தப்படவுள்ளது. இந்த மறுசீரமைப்புக்கள் கல்வியின் தரம், சமத்துவம் மற்றும் பொருத்தத்தை வலுப்படுத்துவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன, கற்பவர்கள் வேகமாக மாறிவரும் உலகில் செழிக்கத் தேவையான அறிவு, திறன்கள் மற்றும் பெறுமதிகளைக் கொண்டிருப்பவர்களாக இருப்பதை உறுதி செய்வதோடு மாத்திரமல்லாமல், ஒரு நெறிமுறை ரீதியான, உள்ளடக்கப்பட்ட, நீதியான, பன்மைத்துவ, நிலைபேறுடன் கூடிய மற்றும் பொறுப்பான சமூகத்தை உருவாக்குவதற்கான தொலைநோக்குத் தலைமையை வழங்குவதையும் உறுதி செய்கின்றன.

இந்தக் கொள்கை கட்டமைப்பானது முன்மொழியப்பட்ட நிலைமாற்றத்திற்கான அடித்தளத்தை வழங்குகிறது. மறுசீரமைப்பின் முக்கிய பரிமாணங்களை ஒன்றாக வெளிப்படுத்தும் **ஐந்து மூலோபாயத் தூண்களைச்** சார்ந்து இது கட்டமைக்கப்பட்டுள்ளது.

1. **கலைத்திட்ட அபிவிருத்தி** - வளர்ந்து வரும் அறிவு, எதிர்கால திறன்கள் மற்றும் சமூக முன்னுரிமைகளுடன் அபிவிருத்தி மற்றும் சீரமைப்பு.
2. **மனித வள அபிவிருத்தி** - கல்வியியலாளர்கள் மற்றும் நிர்வாகிகளின் வாண்மைத்துவ விருத்தி மற்றும் இயலளவு விருத்தி
3. **உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் கல்வி நிர்வாக மறுசீரமைப்பு**–வினைத்திறனுடன் கூடிய, வெளிப்படையான மற்றும் பொறுப்புடைமையுடன் கூடிய நவீன உட்கட்டமைப்பு மற்றும் நிர்வாக முறைமைகளில் முதலீடு செய்தல்.
4. **கணிப்பீடு மற்றும் மதிப்பீடு** – நியாயத்தன்மை மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்தை உறுதி செய்யும் திறன் அடிப்படையிலான மற்றும் வெளிப்படையான மதிப்பீட்டு வழிமுறைகள்
5. **பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் மேம்பாடு** – மறுசீரமைப்பில் பங்குதாரர் ஈடுபாடு, தொடர்பாடல் மற்றும் கூட்டு உரிமையை வலுப்படுத்துதல்

இந்தக் கல்விக் கொள்கை ஆவணமானது, ஒவ்வொரு தூணின் கீழும் பின்பற்றப்பட வேண்டிய மூலோபாய நடவடிக்கைகள் மற்றும் தலையீடுகளை கோடிட்டுக் காட்டுகிறது, இது கல்வி முறைமை முழுவதும் ஒருங்கிணைந்த நடைமுறைப்படுத்தலுக்கான ஒரு வரைபடமாக செயற்படுகிறது. இந்த ஆவணத்தை உருவாக்குவதற்காக பல முக்கிய பங்குதாரர்கள், அரச உத்தியோகத்தர்கள், கல்வியியலாளர்கள், பெற்றோர்கள், சிவில் சமூகம் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் இணைந்து பணியாற்றியுள்ளனர்.

இந்த முன்மொழியப்பட்ட கல்வி மறுசீரமைப்புக்களூடாக தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கம் மிக உயர்ந்த தரமான இலவச மற்றும் சமமான கல்வியை வழங்குவதற்கான அதன் அசைக்க முடியாத உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்துகிறது. முன்மொழியப்பட்ட மறுசீரமைப்புக்கள், தேசிய கல்வித் நியமங்களை வலுப்படுத்துவது மாத்திரமல்லாமல், இலங்கையர்களின் எதிர்கால சந்ததியினர் சமாதானமாகவும் சகவாழ்வுடனும் வாழ்வதற்கும், நன்கு செயற்படக்கூடிய மற்றும் நீதியான ஜனநாயகத்திற்குள் ஒரு தார்மீக மற்றும் நெறிமுறைகளுடன் கூடிய சமூகத்தை கூட்டாகக் கட்டியெழுப்புவதையும், தயார்படுத்துவதையும்ம் தயார்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன.

# பொருளடக்கம்


அட்டவணைகளின் பட்டியல் ........................................................................................ i

**பகுதி 1: அறிமுகம்........................................................................................ 1**

1.1 பின்னணி ........................................................................................ 1

1.2 உத்தேச கல்வி நிலைமாற்றத்தின் தூரநோக்கு, இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள்....... 2

1.2.1 தூரநோக்கு ........................................................................................ 2

1.2.2 தேசிய கல்வி இலக்குகள் (NEGகள்) ........................................................................................ 2

1.2.3 இலங்கையில் கல்வி மறுசீரமைப்பின் குறிக்கோள்கள் ........................................................................................ 4

1.3 கல்வி மறுசீரமைப்புக்களைப் புரிந்துகொள்ளல் ........................................................................................ 5

1.3.1 கல்வி மறுசீரமைப்புக்கள், எதிர். கலைத்திட்ட திருத்தங்கள்........................................................................................ 5

1.3.2 **இலங்கை கல்வி மறுசீரமைப்பில் வரலாற்று மைல்கற்கள்** ........................................................................................ 6

1.3.3 விளைதிறன் மிக்க கல்வி நிலைமாற்றத்திற்கான கோட்பாடுகள் ........................................................................................ 7

1.4 **முன்மொழியப்பட்ட கல்வி மறுசீரமைப்புக்களுக்கான காரணம்**........................................................................................ 8

1.5 **முன்மொழியப்பட்ட கல்வி** நிலைமாற்றத்தின் **முக்கிய கூறுகள்** ........................................................................................10

**பகுதி 2: முன்மொழியப்பட்டுள்ள மறுசீரமைப்புக்கள் ........................................................................................ 12**

2.1 கலைத்திட்ட விருத்தி ........................................................................................12

2.1.1 கலைத்திட்ட திருத்தத்திற்கான குறிக்கோள் ........................................................................................ 12

2.1.2 இலங்கையில் கல்வியின் பரம்பல்........................................................................................ 12

2.1.3 பரந்த கற்றல் துறைகள் ........................................................................................ 13

2.1.4 வசனங்களுக்கான வரைவிலக்கணம் ........................................................................................ 18

2.1.5 **முன்மொழியப்பட்ட** கலைத்திட்ட நிலைமாற்றத்தின் **முக்கிய அம்சங்கள்**........................................................................................ 19

2.1.6 கல்விப் பருவங்கள் ........................................................................................ 22

2.1.7 முன் பிள்ளைப் பருவக் கல்வி........................................................................................ 22

2.1.8 ஆரம்பக் கல்வி (தரம் 1 – 5) ........................................................................................ 22

2.1.9 கனிஷ்ட இடைநிலைப் பருவம் (தரம் 6-9) ........................................................................................ 24

2.1.10 சிரேஷ்ட இடைநிலைப் பருவம் (தரம் 10 முதல் 13 வரை) ........................................................................................ 27

சிரேஷ்ட இடைநிலைப் பருவம் - கட்டம் 1 (தரம் 10 மற்றும் 11) ........................................................................................ 27

சிரேஷ்ட இடைநிலைப் பருவம் - கட்டம் 2 (தரம் 12 மற்றும் 13) ........................................................................................ 33

2.2 மனித வள அபிவிருத்தி........................................................................................35

2.3 உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் கல்வி நிர்வாக மறுசீரமைப்பு.....37

2.3.1 உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் ........................................................................................ 37

2.3.2 கல்வி நிர்வாக மறுசீரமைப்பு ........................................................................................ 37

2.4 கணிப்பீடு மற்றும் மதிப்பீடு........................................................................................38

2.4.1 பொதுக் கோட்பாடு ........................................................................................ 38

2.4.2 தேசிய மட்ட மதிப்பீடுகள்........................................................................................ 39

2.4.3 பாடசாலை மட்ட கணிப்பீடு ........................................................................................ 39

2.4.4 சான்றுப்படுத்தல் முறைமை ........................................................................................ 41

2.5 **பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் மேம்பாடு**........................................................................................41

**பகுதி 3: கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் மீளாய்வு ........................................................................................ 42**

**பின்னிணைப்பு 1: இலங்கையின் கல்வி முறையில் முன்னேற்றப் பாதைகள் .................. 43**

**பின்னிணைப்பு 2: பொதுக் கல்விக்கான கலைத்திட்ட சட்டகம்................................ 44**

**இணைப்பு 3: பங்களிப்பாளர்களின் பட்டியல் ........................................................... 46**

**அட்டவணைகளின் பட்டியல்**


அட்டவணை 0.1 தேசிய கல்வி இலக்குகள் (NEG) .......................................................... 2

அட்டவணை 0.2 NEG **களுடன் பொருந்தும் வகையில் முன்மொழியப்பட்டுள்ள திறன்சார் துறைகள்**.......................................................................................... 4

அட்டவணை 0.1 பொதுக் கல்வியின் பருவங்கள் ..........................................................22

அட்டவணை 0.2 ஆரம்பக் கல்விப் பருவத்தின் கற்றல் துறைகளுக்காக நேர ஒதுக்கீடு (தரம் 1-5) (உத்தேச)...........................................................................24

அட்டவணை 0.3 கனிஷ்ட இடைநிலைப் பருவத்திற்குரிய பாடங்கள் மற்றும் மொடியுல்கள் (தரம் 6-9)..........................................................................25

அட்டவணை 0.4 சிரேஷ்ட இடைநிலைப் பருவத்திற்கான பிரதான கலைத்திட்டம் - கட்டம் 1 (தரம் 10-11)...........................................................................28

அட்டவணை 0.5 சிரேஷ்ட இடைநிலைப் பருவம் கட்டம் 1 இற்குரிய பாடங்களுக்கான மேலதிக கற்றல் மொடியுல்கள் (**தரம்** 10-11)....................................................29

அட்டவணை 0.6 சிரேஷ்ட இடைநிலைப் பருவம் – கட்டம் 1 இற்கான நிலைமாற்றுத் திறன்கள் (தரம் 10-11)...........................................................................31

அட்டவணை 0.7 சிரேஷ்ட இடைநிலைக் பருவத்தில் மேலதிக கற்றல் மொடியுல்களை தெரிவுசெய்வதற்கான நிபந்தனைகள் - கட்டம் 1 (தரம் 10 - 11)........................31

**அட்டவணை** 0.8 **சிரேஷ்ட இடைநிலை பருவம் - கட்டம்** 1 (**தரம்** 10 - 11) **க்கான கலைத்திட்டத்தின் அடிப்படையில் மேலதிக கற்றல் மொடியுல்களை தேர்ந்தெடுப்பதற்கான முறை**. ........................................................................32

அட்டவணை 0.9 சிரேஷ்ட இடைநிலைப் பருவம் – கட்டம் 2 இற்கான உத்தேச பாடங்கள் (தரம் 12 மற்றும் 13) .........................................................................33

அட்டவணை 0.10 தரப்படுத்தல் முறைமை..................................................................40

# பகுதி 1: அறிமுகம்

## 1.1 பின்னணி

பல நூற்றாண்டுகளாக கல்விக்கு வலுவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்திய நாடான இலங்கை, கல்வியில் கவனமாக வடிவமைக்கப்பட்ட நிலைமாற்றச் செயன்முறை மூலம் அதன் எதிர்காலத்தை வடிவமைக்கத் தயாராக இருப்பதால், அதன் வரலாற்றில் ஒரு முக்கியமான கட்டத்தில் உள்ளது. மிகவும் ஒதுக்கப்பட்ட மற்றும் பின்தங்கிய சமூகக் குழுக்களுக்குக் கூட, சமூக சமத்துவமின்மையைக் குறைத்து, மேல்நோக்கிய சமூக இயக்கத்தை செயல்படுத்துவதன் மூலம், பொதுக் கல்வி நேர்மறையான சமூக மாற்றத்திற்கு நேரடியாகப் பங்களித்துள்ளது என்பதை அங்கீகரித்து, இத்தகைய நிலைமாற்றத்திற்கான முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. போருக்குப் பிந்தைய, தொற்றுநோய்க்குப் பிந்தைய மற்றும் "அரகல" போராட்டத்திற்கு பிந்தைய காலகட்டத்தில் இலங்கையின் எதிர்காலத்தைக் கற்பனை செய்வதில், நாட்டின் பொதுக் கல்வி முறையை மாற்றுவதற்கு ஒரு விரிவான, முறையான மற்றும் எதிர்கால அணுகுமுறை தேவைப்படுகிறது. இந்தத் தேவையை உணர்ந்து, தேசிய மக்கள் சக்தி (NPP) அரசாங்கம், நேர்மறையான குணாம்சங்களைக் கொண்ட புதிய தலைமுறைப் பிரஜைகளை உருவாக்குவது மட்டுமல்லாமல், தரமான கல்வியைப் பெறுவதில் உள்ள ஏற்றத்தாழ்வுகளை நீக்குவதையும் நோக்கமாகக் கொண்ட ஒரு கல்வி முறையை அறிமுகப்படுத்துகிறது.

முன்மொழியப்பட்டுள்ள மறுசீரமைப்புக்கள், இனம், மதம், பால் நிலை, இயலாமை மற்றும் வேறுபாட்டின் பிற பகுதிகளின் அடிப்படையில், தங்களைச் சுற்றி காணும் பல்வகைமையை மதிக்கும் மற்றும் பாராட்டும் பகுத்தறிவு உணர்வு கொண்ட பிரஜைகளை உருவாக்கும். இலங்கையின் இலவசக் கல்வி பாரம்பரியத்தைக் கட்டியெழுப்புவதன் மூலம், முன்மொழியப்பட்டுள்ள கல்வி மறுசீரமைப்புக்கள் கல்வியை மேலும் ஜனநாயகமயப்படுத்துகின்றன, இதனால் நமது சமூகத்தின் விளிம்பு நிலைகளில் உள்ளவர்களுக்கு அதனை இலகுவில் அணுகக்கூடியதாக இருக்கும். அத்தகைய கல்வி முறைமையானது, வசதி குறைந்த பின்னணியைச் சேர்ந்தவர்கள் உட்பட, அதன் அனைத்து பிரஜைகளதும் பொருளாதார மற்றும் சமூக இயக்கத்தை செயற்படுத்தும்.

முன்மொழியப்பட்ட மறுசீரமைப்புக்களின் முக்கிய அம்சங்களில் ஒன்று, பொதுக் கல்விக் கொள்கையின் ஒரு பகுதியாக தொழிற்கல்வியை பிரதான கல்வி நீரோட்டத்துடன் சேர்ப்பதாகும். அத்தகைய நடவடிக்கையானது, தொழிற் கல்வியை ஒரு சாத்தியமான மற்றும் மரியாதைக்குரிய மூன்றாம் நிலை கல்விக்கான வழியாகவும், சமூக மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்கு வழிவகுக்கும் ஒரு வாழ்க்கைப் பாதையாகவும் உரிய அங்கீகாரத்தை வழங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 1.2 உத்தேச கல்வி நிலைமாற்றத்தின் தூரநோக்கு, இலக்குகள் மற்றும் குறிக்கோள்கள்

### 1.2.1 தூரநோக்கு

இலங்கைக்கு முன்மொழியப்பட்ட கல்வி நிலைமாற்றத்தின் தூரநோக்கு மற்றும் இலக்குகள், தேசிய கல்விக் கொள்கை முன்மொழிவுகள் (2022) மற்றும் அதன் முன்னோடிகள் மற்றும் NPP அரசாங்கத்தின் கொள்கை அறிக்கையைச் சார்ந்து அமைந்துள்ளன.

**முன்மொழியப்பட்டுள்ள கல்வி நிலைமாற்றத்தின் தூரநோக்கு**

சமத்துவம், உட்படுத்தல், சமாதானம், செழிப்பு, நீதி, நிலைபேறுடன் கூடிய தன்மை மற்றும் உலகளாவிய குடியுரிமைக்காக பாடுபடும் நெறிமுறை, சமூகப் பொறுப்புணர்வு, புதுமையான மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்பவர்களை வளர்ப்பதற்காக கல்வியை நிலைமாற்றம் செய்தல்.

இந்த தூரநோக்கினை நனவாக்கும் பொருட்டு, தேசிய கல்வி ஆணைக்குழுவின் (NEC) அறிக்கையானது தேசிய கல்வி இலக்குகளை அடையாளம் கண்டுள்ளது.

### 1.2.2 தேசிய கல்வி இலக்குகள் (NEGகள்)

1991 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கல்வி ஆணைக்குழுச் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்ட NEC ஆனது, நாட்டின் கல்வி மறுசீரமைப்புக்களை வழிநடாத்துவதற்காக 1992 ஆம் ஆண்டில் தேசிய கல்வி இலக்குகளை (NEGs) ஆரம்பித்தது. 2022 ஆம் ஆண்டில் NEC ஆல் வெளியிடப்பட்ட தேசிய கல்விக் கொள்கை சட்டகமானது (2020-2030), எட்டு NEGகளை அறிமுகம் செய்துள்ளது (அட்டவணை 1.1).

**அட்டவணை 0.1 தேசிய கல்வி இலக்குகள் (NEG)**

| NEG இலக்கம் | தேசிய கல்வி இலக்குகள் | சுருக்க வடிவம் |
|---|---|---|
| NEG 1 | மனித விழுமியங்களை மதிப்பதன் அடிப்படையில், ஆரோக்கியமான மற்றும் மகிழ்ச்சியான வாழ்க்கை முறைக்குத் தேவையான தனிநபர்களின் உடல், மன, ஆன்மீக, சமூக, உணர்ச்சி மற்றும் சுற்றுச்சூழல் நல்வாழ்வை மேம்படுத்துதல். | மகிழ்ச்சி மற்றும் ஆரோக்கியமான மனிதன் |
| NEG 2 | தேசியத் தேவைகள் மற்றும் உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப, தொழில்நுட்ப, சமூக-பொருளாதார மற்றும் கலாச்சார முன்னேற்றத்திற்கான அறிவு, திறன்கள், அணுகுமுறைகள் மற்றும் மனித குணாம்சங்களை விருத்தி செய்தல் | உற்பத்தித் திறன் மற்றும் மனிதாபிமான தனிநபர்கள் |

| | | |
|---|---|---|
| NEG 3 | ஆர்வம், விமர்சன ரீதியான சிந்தனை, சிக்கல் தீர்க்கும் திறன், படைப்பாற்றல் மற்றும் புதுமை ஆகியவற்றைக் கொண்ட உற்பத்தித் திறன் கொண்ட நபர்களை உருவாக்குதல் | முன்னோடியான கற்போன் |
| NEG 4 | சமூக நீதி மற்றும் ஜனநாயக வாழ்க்கை முறையின் விதிமுறைகளுக்கு ஏற்ப பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றும் அதே வேளையில், நாட்டின் மனித உரிமைகள் மற்றும் சட்டங்களை மதிக்க ஊக்குவித்தல். | மரியாதை மற்றும் நம்பிக்கையான நபர் |
| NEG 5 | மாற்றத்தை முகாமை செய்வதற்கும், சிக்கலான மற்றும் எதிர்பாராத சூழ்நிலைகளைச் சமாளிக்கவும் கூடிய தனிநபர்களை உருவாக்குதல். | மீள் திறனுடன் கூடிய தனிநபர் |
| NEG 6 | உள்ளூர் மற்றும் உலகளாவிய சவால்களுக்கு பதிலளிக்கும் அதே வேளையில், நாட்டின் கலாச்சார மற்றும் சுற்றுச்சூழல் பாரம்பரியத்தை நிலைநிறுத்துதல். | கலாசார ரீதியில் வேரூன்றிய தூதுவர் |
| NEG 7 | கற்றல் திறனை மேம்படுத்துவதற்காக, உள விழிப்புணர்வும், சுய உணர்வும் கொண்ட கற்போர்களை ஊக்குவித்தல். | பிரதிபலிப்புடன் கூடிய கற்போன் |
| NEG 8 | கலாச்சாரப் பல்வகைமையை மதிக்கும் அதே வேளையில், தேசிய நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாடு மற்றும் தேசிய ஒற்றுமையை வளர்க்கும் தேசபக்தியுடன் கூடிய இலங்கைப் பிரஜைகளை உருவாக்குதல். | நாட்டுப் பற்றுள்ள பிரஜை |

பாடசாலைப் பருவத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் கல்வி அனுபவம், சுதந்திரமான, மகிழ்ச்சியான மற்றும் உணர்ச்சி ரீதியாக சமநிலையான பிரஜைகளை உருவாக்குவது மாத்திரமல்லாவல், நாட்டின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் பூர்த்தி செய்யும் திறன் கொண்டவர்களாகவும் இருக்க வேண்டும். நாட்டின் கல்வி முறைமையின் தரத்தை உறுதி செய்வதற்கு, அந்த முறைமையை உருவாக்க விரும்பும் பிரஜைகளுக்கு அவற்றை விவரிப்பது அவசியம். பொதுக் கல்வி மூலம் வழங்கப்படும் முக்கிய திறன்களை அடையாளம் காண்பது இந்த குறிக்கோளை அடைவதற்கான ஒரு வழியாகும்.

அறிவாற்றல் திறன்கள் அல்லது அறிவுசார் திறன்கள் (பகுப்பாய்வு அல்லது விமர்சன ரீதியான சிந்தனை திறன்கள், முடிவெடுக்கும் திறன்கள் மற்றும் பொதுவான சிக்கல் தீர்க்கும் திறன்கள் போன்றவை) மற்றும் அறிவுத் தளம் ஆகியவை திறமையான செயல்திறனுக்காகத் திரட்டப்பட வேண்டிய முக்கியமான அறிவுசார் வளங்களை உருவாக்குகின்றன என்பது பரவலாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. மேலும், ஒரு தேவையை பூர்த்தி செய்வதற்கு அல்லது ஒரு இலக்கை அடைவதற்கு, ஊக்குவிப்பு, உணர்ச்சி கட்டுப்பாடு, மீள்தன்மை போன்ற சமூக, நடத்தை மற்றும் உணர்ச்சி அம்சங்களை அணிதிரட்டுவதும், மதிப்புகள் மற்றும் நெறிமுறைகளுக்கான அர்ப்பணிப்பும் தேவை என்பதை நிபுணர்கள் பரவலாக ஒப்புக்கொள்கிறார்கள். எனவே, கலைத்திட்டமானது அறிவு, திறன்கள் மற்றும் மனநிலைகளை விருத்தி செய்வதோடு மதிப்புகளைப் புகுத்தி உணர்ச்சிசார் நுண்ணறிவை விருத்தி செய்யும் வகையில் இருக்க வேண்டும்.

மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்த நிலைமாற்றத்தின் மூலம், பின்வரும் திறன்சார் துறைகளால் வலுவூட்டப்பட்ட ஒரு தலைமுறை கற்பவர்களை இலங்கை கற்பனை செய்கிறது (அட்டவணை 1.2).

**அட்டவணை 0.2 NEG களுடன் பொருந்தும் வகையில் முன்மொழியப்பட்டுள்ள திறன்சார் துறைகள்**

| | |
|---|---|
| **அடிப்படை அறிவு:** எழுத்தறிவு, எண் கணித அறிவு, விஞ்ஞான அறிவு, கல்விசார் அறிவு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவு, ஊடகம் மற்றும் தகவலறிவு, கலாசார மற்றும் அழகியல் அறிவு, நிதியியல் மற்றும் முயற்சியாண்மைசார் அறிவு | **டிஜிட்டல் மற்றும் எதிர்காலத் திறன்கள்:** டிஜிட்டல் ஆற்றல், குறியீட்டு முறை (கோடிங்), செயற்கை அறிவுசார் விழிப்புணர்வு, தரவுசார் சறிவு மற்றும் நிகழ்நிலைப் பாதுகாப்பு |
| **21ம் நூற்றாண்டிற்குரிய திறன்கள்:** விமர்சன ரீதியான சிந்தனை, படைப்பாற்றல், கூட்டிணைப்பு, தொடர்பாடல், சிக்கல்களைத் தீர்த்தல் | **பசுமை மற்றும் நிலைபேறுடன் கூடிய திறன்கள்:** காலநிலை சார் அறிவு, வளங்களின் வினைத்திறன், நிலைபேறுடன் கூடிய நுகர்வு மற்றும் சுழற்சி பொருளாதார நடைமுறைகள் |
| **குடியியல் மற்றும் உலகளாவிய தேர்ச்சிகள்:** உலகளாவிய குடியுரிமை, கலாச்சார விழிப்புணர்வு, சமூகப் பொறுப்பு, நெறிமுறை பகுத்தறிவு, கூட்டுப் பொறுப்பு | **முயற்சியாண்மை மற்றும் தொழில் தயார் நிலைத் திறன்கள்:** முன்முயற்சி, புதுமை, தகவமைப்பு, உற்பத்தித்திறன் |
| **தனிப்பட்ட மற்றும் ஆளிடைத் திறன்கள்:** ஜனநாயக மற்றும் பன்முக கலாச்சார விழுமியங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு நல்லிணக்க சமூகத்தில் நிலையான அமைதி. இசைவாக்கம், மீள்தன்மை, சுய விழிப்புணர்வு, தலைமைத்துவம், ஒத்துணர்வு, சமூக-மனவெழுச்சிசார் கற்றல் | **21ம் நூற்றாண்டிற்குரிய திறன்களுக்கு அப்பால்:** அமைப்பு ரீதியான சிந்தனை, எதிர்கால சிந்தனை, வாழ்நாள் முழுவதும் கற்றல், மெட்டா அறிவு, ஞானம் & தீர்ப்பு |

இலங்கைக்கு முன்மொழியப்பட்டுள்ள பொதுக் கல்வி முறையின் இறுதி இலக்கை பின்வருவனவற்றை உருவாக்குவனவாக அடையாளம் காணலாம்:

- ஆரோக்கியமான, நெறிமுறை ரீதியான மற்றும் சமூகப் பொறுப்புடன் கூடிய சமூக அங்கத்தவர்
- மனவெழுச்சி சமநிலை மற்றும் சுய விழிப்புணர்வுடன் கூடிய சமூக அங்கத்தவர்
- 21 ஆம் நூற்றாண்டின் மற்றும் அதற்கு அப்பால் உள்ள சவால்களை எதிர்கொள்ளும்போது, நாட்டிற்கு உள்ளேயும் வெளியேயும் பாரம்பரியம், கலாச்சாரம் மற்றும் பன்முகத்தன்மையை மதிக்கும் ஒரு சமூகம்,
- நிலைபேறுடன் கூடிய தேசிய அபிவிருத்தி, மற்றும்
- ஜனநாயக மற்றும் பன்முக கலாச்சார விழுமியங்களின் அடிப்படையில் கட்டமைக்கப்பட்ட ஒரு நல்லிணக்க சமூகத்தில் நிலைபேறுடன் கூடிய சமாதானம்.

### 1.2.3 இலங்கையில் கல்வி மறுசீரமைப்பின் குறிக்கோள்கள்

முன்மொழியப்பட்டுள்ள கல்வி மறுசீரமைப்பினூடாக எதிர்பார்க்கப்படுவன:

- நெறிமுறை, உட்படுத்தப்பட்ட மற்றும் சமூகப் பொறுப்புள்ள குடிமக்களை வளர்த்தல்.
- சமூக, பொருளாதார, பிராந்திய அல்லது கலாச்சார பின்னணியைப்

பொருட்படுத்தாமல், ஒவ்வொரு பிள்ளையும் கல்வி வளங்கள் மற்றும் வாய்ப்புகளுக்கு நியாயமான மற்றும் சமமான அணுகலைப் பெறும் ஒரு அமைப்பை உருவாக்குதல்.

- குறைபாடுகள் உள்ள மாணவர்களுக்கு நியாயமான மற்றும் சமமான அணுகல் மற்றும் வாய்ப்புகளை வழங்கும் மற்றும் அனைவரும் உட்படுத்தப்பட்ட கல்வி முறையை வளர்த்தல்.
- தேசிய அபிவிருத்தி முன்னுரிமைகள், நிலைபேறுடன் கூடிய அபிவிருத்தி இலக்குகள் மற்றும் உலகளாவிய குடியுரிமைக்குத் தேவையான பண்புகளுடன் பொதுக் கல்வியை சீரமைத்தல்.
- வளர்ந்து வரும் அறிவு, புதிய தொழில்நுட்பங்கள் மற்றும் உலகளாவிய சிறந்த நடைமுறைகளை ஒருங்கிணைத்து, விமர்சன ரீதியான சிந்தனை திறன்கள் மற்றும் படைப்பாற்றலை இணைத்து கலைத்திட்டத்தை திருத்தியமைத்தல்.
- கற்பித்தல்-கற்றல் கலாச்சாரத்தின் ஒரு பகுதியாக மாணவர்களை மையமாகக் கொண்ட கூட்டு கற்றல் மற்றும் உரையாடலை ஊக்குவித்தல்.
- பரீட்சையை மையமாகக் கொண்ட மனப்பாடக் கற்றலுக்கு அப்பால் செல்லும் நியாயமான, வெளிப்படையான, திறன் அடிப்படையிலான, கற்பவரை மையமாகக் கொண்ட மதிப்பீட்டு முறைகளை நடைமுறைப்படுத்துதல்
- வெளிப்படைத் தன்மையுடன் கூடிய, பொறுப்புணர்வு மற்றும் வினைத்திறன் மிக்க நிர்வாகத்தால் ஆதரிக்கப்படும் உட்படுத்தப்பட்ட, சூழலுக்கு ஏற்ற, மற்றும் நன்கு வளப்படுத்தப்பட்ட பௌதீக உட்கட்டமைப்பை விருத்தி செய்தல்.
- கல்வியியலாளர்கள் மற்றும் நிர்வாகிகளின் வாண்மைத்துவ இயலுமையை வலுப்படுத்துதல் மற்றும் உள்ளூர் தேவைகள் மற்றும் உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப தொடர்ச்சியான வாண்மைத்துவ விருத்திக்கான வாய்ப்புக்களை ஏற்படுத்துதல்.
- ஆசிரியர் கல்வியியலாளர்களுக்கு தொழில் முன்னேற்றம், நியாயமான நிதி ஊதியம் மற்றும் பாதுகாப்பான மற்றும் வளர்ப்பு பணிச்சூழலுக்கான வாய்ப்புகள் வழங்கப்படும் ஒரு தொழில்முறை கலாச்சாரத்தை உருவாக்குதல்.

## 1.3 கல்வி மறுசீரமைப்புக்களைப் புரிந்துகொள்ளல்

### 1.3.1 கல்வி மறுசீரமைப்புக்கள், எதிர். கலைத்திட்ட திருத்தங்கள்

இலங்கை சூழலில், கல்வி மறுசீரமைப்புக்கள் என்ற கருத்து பெரும்பாலும் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, கலைத்திட்ட திருத்தங்கள் என்ற கருத்துடன் குழப்பமடைகிறது, இதனால் இரண்டு சொற்களும் ஒன்றுக்கொன்று மாற்றாகப் பயன்படுத்தப்படுகின்றன. முழுமையான கல்வி மறுசீரமைப்பு செயன்முறை என்பது நாட்டின் கல்வி முறையின் அனைத்து அம்சங்கள் மற்றும் நிலைகளின் முழுமையான மறுசீரமைப்பை உள்ளடக்கிய கவனமாக வடிவமைக்கப்பட்ட மற்றும் சிக்கலான செயல்முறையாகும், அதேசமயம் கலைத்திட்ட திருத்தம் என்பது கலைத்திட்டத்தில் செய்யப்படும் அவ்வப்போது ஏற்படும் மாற்றங்களைக் குறிக்கிறது, இதனால் அவை தேசிய மற்றும் உலகளவில் நிகழும் விரைவான மாற்றங்களை பிரதிபலிக்கும் மற்றும் பதிலளிக்கக்கூடியவை. கலைத்திட்ட திருத்தமானது ஒரு முழுமையான கல்வி மறுசீரமைப்பு செயன்முறையின் ஒரு முக்கிய பகுதியாகும், ஆனால் அந்த செயன்முறையானது உட்கட்டமைப்பு அபிவிருத்தி, ஆசிரியர் பயிற்சி மற்றும் இலங்கையில் கல்வி நடவடிக்கைகள் நடைபெறும் அடிப்படை யதார்த்தங்களால் தெரிவிக்கப்பட்ட அர்த்தமுள்ள கற்பித்தல் நடைமுறைகளை அறிமுகப்படுத்துதல் போன்ற பல முக்கிய பரிசீலனைகளையும் உள்ளடக்கியது.

முன்மொழியப்பட்ட கலைத்திட்ட திருத்தங்கள், அடிப்படை மாற்றங்கள் மூலம் பாடசாலைக் கலைத்திட்டத்தையும் பொதுக் கல்விக்கான கட்டமைப்பையும் புதுப்பிப்பதற்கான உள்நாட்டு பங்குதாரர்களின் கோரிக்கைகளுக்கான பதில்களாகும்.

முன்மொழியப்பட்ட நிலைமாற்றமானது, விரும்பத்தக்கதாகக் கருதப்படும் தேசிய முன்னுரிமைகள் மற்றும் உலகளாவிய போக்குகளுக்கு ஏற்ப முழு கல்வி முறைமையையும் மறுபரிசீலனை செய்து வலுப்படுத்த முயல்கிறது. இந்த நிலைமாற்றமானது பின்வரும் **ஐந்து மூலோபாயத் தூண்கள்** மூலம் முன்னெடுக்கப்படும், இவை ஒன்றாக நிலைபேறுடன் கூடிய மற்றும் உட்படுத்தப்பட்ட கல்வி

மறுசீரமைப்புக்கான அடித்தளத்தை உருவாக்குகின்றன:

**தூண் 1: கலைத்திட்ட அபிவிருத்தி** வளர்ந்து வரும் அறிவுப் பரிமாணங்கள் மற்றும் திறன்கள் மற்றும் சமூக முன்னுரிமைகளை பிரதிபலிக்கும் வகையில், உள்ளூர் மற்றும் உலகளாவிய தேவைகளுக்குப் பொருத்தமான, உட்படுத்தப்பட்ட மற்றும் பதிலளிக்கும் தன்மையை உறுதி செய்யும் வகையில் கலைத்திட்டம் இற்றைப்படுத்தப்படும்.

**தூண் 2: மனித வள அபிவிருத்தி**

தொடர்ச்சியான வாண்மைத்துவ விருத்தி மூலம் கல்வியியலாளர்கள், நிர்வாகிகள் மற்றும் உதவிப் பணியாளர்களின் வாண்மைத்துவ இயலளவு விருத்தி செய்யப்படும்.

**தூண் 3: உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி மற்றும் கல்வி நிர்வாக மறுசீரமைப்பு:**

கல்வி நிர்வாகத்தில் பொறுப்புக்கூறல், வெளிப்படைத்தன்மை, உட்படுத்தல் மற்றும் புத்தாக்கத்தை வளர்க்கும் திறமையான நிர்வாக முறைமைகளை அறிமுகப்படுத்துவதோடு, பௌதீக, டிஜிட்டல் மற்றும் தொழில்நுட்ப உட்கட்டமைப்பினை மேம்படுத்துவதை நோக்கி முதலீடுகள் வழிப்படுத்தப்படும்.

**தூண் 4: கணிப்பீடு மற்றும் மதிப்பீடு**

மதிப்பீட்டு முறைகள் நியாயத்தன்மை, வெளிப்படைத்தன்மை, சமத்துவம் மற்றும் திறன் அடிப்படையிலான அணுகுமுறைகளை உறுதி செய்யும், மேலும் தர உறுதிப்பாடு மற்றும் தொடர்ச்சியான முன்னேற்றத்தை உறுதி செய்வதற்காக நிறுவன கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டிற்கான வலுவான வழிமுறைகளால் பூர்த்தி செய்யப்படும்.

**தூண் 5: பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் மேம்பாடு**

அனைத்து மட்டங்களிலும் பங்குதாரர்களை ஈடுபடுத்தவும், மறுசீரமைப்பு குறித்த பரவலான புரிதலை ஊக்குவிக்கவும், கல்வி மறுசீரமைப்பு செயன்முறையின் பகிரப்பட்ட பொறுப்பு மற்றும் உரிமையை ஊக்குவிப்பதற்கும் மூலோபாய ரீதியான தொடர்பாடல் மற்றும் விழிப்புணர்வு முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

இந்தக் கொள்கை ஆவணம், இந்த மூலோபாயத் தூண்கள் ஒவ்வொன்றின் கீழும் முன்மொழியப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தலையீடுகளை விரிவாகக் கூறுகிறது, இது விரிவான கல்வி மறுசீரமைப்புக்கான கட்டமைக்கப்பட்ட பாதையை வழங்குகிறது.

### 1.3.2 இலங்கை கல்வி மறுசீரமைப்பில் வரலாற்று மைல்கற்கள்

இலங்கையின் அண்மைய வரலாற்றில், 1972, 1981 மற்றும் 1999 ஆம் ஆண்டுகளில் பொதுக் கல்வியில் அறிமுகப்படுத்தப்பட்ட நிலைமாற்றங்கள் கல்வி மறுசீரமைப்புக்களுக்கான உதாரணங்களாகும். 1999 இன் பின்னர், கலைத்திட்ட திருத்தம் இரண்டு முறை மேற்கொள்ளப்பட்டது: 2007 இல் (1999 திருத்தங்களை முன்னோக்கி கொண்டு செல்லும் வகையில்) மற்றும் 2015 இல், எட்டு ஆண்டு கலைத்திட்ட சுழற்சி கொள்கையின்படி (NIE & MOE, 2000).

இலங்கையில் தற்போது நடைமுறையில் உள்ள கல்வி முறைமையின் பரிணாம வளர்ச்சியை, 1999 ஆம் ஆண்டு தேசிய கல்வி ஆணைக்குழுவின் 1997ம் ஆண்டு அறிக்கையை அடிப்படையாகக் கொண்ட கல்வி மறசீரமைப்புக்களைக் காணலாம். 1999 ஆம் ஆண்டு இந்த முறைமையினுள் அறிமுகப்படுத்தப்பட்ட கலைத்திட்டத்தின் சில சிறப்பம்சங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- ஆரம்பக் கல்வி பருவத்தில் தேர்ச்சி மைய கல்வி அணுகுமுறையை அறிமுகப்படுத்துதல்
- கல்வியின் முதன்மை நிலையானது மூன்று முக்கிய நிலைகளாகப் பிரிக்கப்பட்டது (K): 1 மற்றும் 2 ஆம் தரங்கள் K1 ஆகவும், 3 மற்றும் 4 ஆம் தரங்கள் K2 ஆகவும், 5 ஆம் தரம் K3 ஆகவும் பிரிக்கப்பட்டது.
- 3 ஆம் தரம் (K2) முதல் மேல்நோக்கி ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாக

(ESL) முறையாகக் கற்க மாணவர்களைத் தயார்படுத்துவதற்காக, முதன்மைக் கட்டத்தில் செயற்பாட்டு அடிப்படையிலான வாய்மொழி மூலமான ஆங்கிலத்தை அறிமுகப்படுத்துதல்.

- க.பொ.த (சா/த) கற்றல் இரண்டு ஆண்டுகளுக்கு (தரம் 10 மற்றும் 11) மட்டுப்படுத்துதல்
- க.பொ.த (உ/த) இல் பாடங்களின் எண்ணிக்கையை நான்கிலிருந்து மூன்றாகக் குறைத்தல்.
- க.பொ.த (உ/த) பரீட்சையில் பொதுத் அறிவுப் பரீட்சையின் அறிமுகம்.

முன்னர் குறிப்பிட்டது போல, இவ்வாறு மறுசீரமைக்கப்பட்ட கல்வி முறையானது, கல்வி அமைச்சின் எட்டு ஆண்டு கலைத்திட்ட திருத்தக் கொள்கைக்கு ஏற்ப 2007 இல் மேலும் மாற்றங்களுக்கு உட்பட்டது. திறன் அடிப்படையிலான அணுகுமுறை 2007 இல் இடைநிலைக் கல்வியில் அறிமுகப்படுத்தப்பட்டது. 2015 இல், நிலைமாற்றத்திற்குப் பதிலாக ஒரு கலைத்திட்ட நியாயப்படுத்துகைக்குரிய செயன்முறையொன்று மேற்கொள்ளப்பட்டது.

மேற்கண்ட முயற்சிகளை அடிப்படையாகக் கொண்டு, தற்போதைய கல்வி மறுசீரமைப்பு செயன்முறையானது செயல்முறை பின்வரும் கொள்கைகளின் அடிப்படையில் ஒரு கல்வி முறையை வழங்க முயற்சி செய்கின்றது:

### 1.3.3 விளைதிறன் மிக்க கல்வி நிலைமாற்றத்திற்கான கோட்பாடுகள்

கலைத்திட்ட திருத்தம் அல்லது கல்வி முறையை முழுமையாக நிலைமாற்றம் செய்வதை நோக்கமாகக் கொண்ட எந்தவொரு முயற்சியும், மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வி நிர்வாகிகள், கல்வித்துறை ஆராய்ச்சியாளர்கள், தொழில் வழங்குநர்கள் மற்றும் பரந்த பிரஜைகள் உள்ளிட்ட பல்வேறு பங்குதாரர்களின் ஜனநாயக பங்கேற்பை உறுதி செய்ய வேண்டும். அத்தகைய செயன்முறையானது ஆதாரங்களை அடிப்படையாகக் கொண்டு தீர்மானமெடுப்பதை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். ஒரு நாட்டின் கல்வி முறைமையின் விரிவான நிலைமாற்றம் என்பது உள்ளார்ந்த முறையில் சிக்கலான செயன்முறையொன்றாகும், இதற்கு கவனமாக திட்டமிட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. அத்தகைய நிலைமாற்ற செயற்பாட்டிற்குரிய முக்கிய பரிசீலனைகள் பின்வருமாறு:

1. தற்போதைய முறைமையின் பலங்கள் மற்றும் பலவீனங்கள்
2. சமகால உள்ளூர் மற்றும் உலகளாவிய சமூக, புவிசார் அரசியல் மற்றும் பொருளாதார சூழல்கள்
3. நாட்டின் தேசிய அபிவிருத்திக் கொள்கை
4. செழிப்பு, நல்வாழ்வு, சமத்துவம் மற்றும் நல்லாட்சி தொடர்பாக நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகள்

தற்போதுள்ள கல்வி முறைமையின் பலம் மற்றும் பலவீனங்களை முழுமையாக பகுப்பாய்வு செய்வது, தக்கவைக்கப்பட வேண்டிய கூறுகளையும், அவற்றின் நிரூபிக்கப்பட்ட செயற்றிறனின் அடிப்படையில் மறுசீரமைக்கப்பட வேண்டிய அல்லது நிறுத்தப்பட வேண்டிய கூறுகளையும் அடையாளம் காண்பதற்கு மிக முக்கியமானது. அத்தகைய பகுப்பாய்வு, வலுவான மற்றும் நன்கு செயல்படும் கல்வி முறைமையை உருவாக்கும் மிகவும் விளைதிறன் மிக்க முறைகளின் விருத்திக்கும் வழிவகுக்கும். கல்வி மறுசீரமைப்பு செயற்பாட்டின் போது ஆராய்ச்சி முடிவுகள், துறைசார் நிபுணர்களின் கருத்துக்கள் மற்றும், விமர்சன ரீதியாக, பொதுமக்களின் கருத்துக்கள் ஆகியவை கருத்தில் கொள்ளப்படுவது கட்டாயமாகும். மேலதிகமாக, காலப்போக்கில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களின் செயலாற்றுகையை மதிப்பிடுவது, தற்போதுள்ள அமைப்பின் பலம் மற்றும் பலவீனங்கள் குறித்த முக்கிய தகவல்களையும் வழங்கும்.

உலகளாவிய அளவில், பொதுக் கல்வி, அதிவேகமாக நிகழும் விரைவான சமூக, பொருளாதார, தொழில்நுட்ப மற்றும் கலாச்சார நிலைமாற்றங்களை பிரதிபலிக்கும் வகையில் நிலைமாற்றத்திற்கு உட்பட்டுள்ளது. ஐக்கிய

நாடுகள் சபையின் (UN) நிறுவனங்கள், குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபையின் கல்வி, விஞ்ஞானம் மற்றும் கலாச்சார அமைப்பு (UNESCO) மற்றும் பிற உலகளாவிய மேம்பாட்டு பங்குதாரர்கள், கடந்த பல ஆண்டுகளாக இந்த தலைப்பில் தீவிர கலந்துரையாடலில் ஈடுபட்டு வருகின்றனர். நாட்டின் கல்வி முறைமையை மாற்றியமைக்கும் போது, நிலைபேறுடன் கூடிய அபிவிருத்தி இலக்குகளை (SDGs) அடைதல் மற்றும் குறுக்குவெட்டு திறன்கள் மற்றும் சமூக-மனவெழுச்சிசார் கற்றல் (SEL) ஆகியவற்றை ஊக்குவித்தல் போன்ற உலகளாவிய முன்னுரிமைகளையும் கருத்தில் கொள்வது அவசியம்.

உலகளாவிய போக்குகள் தொடர்ந்து கவலையை ஏற்படுத்துகின்றன. உதாரணமாக, உலகின் பல பகுதிகளில் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்திற்கான நிதிவழங்களை குறைப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தத் துறைகள் பொருளாதார மற்றும் நடைமுறைக்கு பெறுமதியற்றனவாக காணப்படுகின்றன. உலகெங்கிலும் உள்ள கல்வி முறைமைகளில் சந்தை அடிப்படையிலான கோட்பாடுகளின் ஆதிக்கம் அதிகரித்து வருவது இந்தத் துறைகளின் கடுமையான அலட்சியத்திற்கு வழிவகுத்துள்ளது. உள்ளூர், தேசிய மற்றும் உலகளாவிய ரீதியில் நாம் காணும் சமூக-பொருளாதார பிளவுகள் மற்றும் ஏற்றத்தாழ்வுகளை ஒழிக்க உதவும் அறிவை உருவாக்குவதற்காக, இலங்கை பாடசாலை மட்டத்திலிருந்து ஆரம்பித்து மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத் துறைகளில் அதிக முதலீடு செய்ய வேண்டும். கலைத்திட்ட மறுசீரமைப்பில் இந்த துறைகளை வலுப்படுத்த சிறப்பு முயற்சிகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கையின் கல்விக் கொள்கையை அதன் தேசிய அபிவிருத்திக் கொள்கையிலிருந்து பிரிக்க முடியாது. இலங்கை நாட்டின் எதிர்காலத்தை நிர்ணயிக்கும் முக்கிய காரணியாக கல்வி இருப்பதால், கல்வியில் ஏற்படும் நிலைமாற்றத்தை தேசிய கொள்கை முன்னுரிமைகளுடன் இணைப்பது ஒரு முக்கிய கருத்தாகும். கலைத்திட்டங்கள், நிர்வாக மற்றும் ஏனைய கட்டமைப்புகள், கற்பித்தல், கணிப்பீடு மற்றும் மதிப்பீடு போன்ற முழுமையான நிலைமாற்றத்தின் நாட்டின் அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணைக்கப்பட வேண்டும்.

எல்லாவற்றிற்கும் மேலாக, மறுசீரமைக்கப்பட்ட கல்வி முறைமையில் முதன்மையான பங்கேற்பாளர்களாகவும் பயனாளிகளாகவும் நாட்டு மக்களின் எதிர்பார்ப்புகள் கருத்தில் கொள்ளப்படுவது மிக முக்கியமானது. எனவே, கல்வியில் நிலைமாற்றத்தை திட்டமிடுவதில் கல்வி முறைமை குறித்த பொதுமக்களின் கருத்தும், முன்மொழியப்பட்ட மாற்றங்களின் மீதான பொதுமக்களின் எதிர்பார்ப்புகளும் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

இந்தப் பின்னணியில், இலங்கையில் தற்போதுள்ள கல்வி முறைமை ஆராயப்பட்டு, தற்போதைய முன்மொழிவுகளுக்கான அடிப்படையை உருவாக்குகிறது.

## 1.4 முன்மொழியப்பட்ட கல்வி மறுசீரமைப்புக்களுக்கான காரணம்

தற்போதுள்ள பொதுக் கல்வி முறைமை, குறிப்பாக கலைத்திட்டம் மற்றும் மதிப்பீட்டு கட்டமைப்புகள், தற்போதைய உள்ளூர் மற்றும் உலகளாவிய சூழல்களுக்குத் தேவையான திறன்கள் மற்றும் தேர்ச்சிகளை கொண்டு இலங்கை மாணவர்களை போஷிக்க முடியாது என்பது தெளிவாகிறது. தற்போதுள்ள ஆராய்ச்சி மற்றும் நிபுணர் கருத்துக்களால் முன்னிலைப்படுத்தப்பட்ட சில பொருத்தமான கருத்துக்கள் கீழே தரப்பட்டுள்ளன.

**கலைத்திட்டம்:** கலைதிட்டமானது மிகவும் உள்ளடக்கம் நிறைந்ததாகவும், கோட்பாடுகள் ரீதியாகவும், இலக்கு சார்ந்ததாகவும் உள்ளது. இது மனப்பாடம் செய்வதிலும் கவனம் செலுத்துவதுடன் விசாரணை அடிப்படையிலான அணுகுமுறையைக்

கொண்டிருக்கவில்லை. மேலும், உண்மையான வாழ்க்கை சூழல்களில், குறிப்பாக விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) போன்ற பாடங்களில் நடைமுறைப் பயன்பாட்டில் இது பலவீனமாக உள்ளது. இது தற்போதைய மாணவர்களின் திறன்களுக்கும், தனிநபர்களாகவும் ஒரு சமூகமாகவும் சமகால சமூக-பொருளாதார சவால்களை எதிர்கொண்டு சமாளிக்கத் தேவையான திறன்களுக்கும் இடையில் பொருந்தாத தன்மையை ஏற்படுத்துகிறது. மேலும், சமூக விஞ்ஞானம் மற்றும் மானுடவியல் பாடங்களை STEM பாடத்தில் அறிமுகப்படுத்துவதற்கான வாய்ப்புகள் போதுமானதாக இல்லை. மாணவர்களிடம் சமூக உணர்வு, அரசியல்சார் அறிவு மற்றும் முழுமையான ஆளுமையை விருத்தி செய்வதற்கு இத்தகைய மாற்றம் அவசியமாகும்

**மதிப்பீடு**: அதிக பரீட்சைகளைக் கொண்ட மதிப்பீட்டு முறையானது, கோட்பாட்டுத் திறன்களை மனப்பாடம் செய்து கற்றுக்கொள்வதற்கு வழிவகுக்கின்றது. சர்வதேச அளவில் வரையறுக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் இலங்கை மாணவர்களின் செயலாற்றுகையை மதிப்பிடுவதற்கு இது போதுமான நம்பகமானதாக இல்லை. இதன் விளைவாக, கொள்கை வகுப்பாளர்கள் யதார்த்தமான மதிப்பீட்டின் அடிப்படையில் முடிவுகளை எடுப்பது கடினம். மேலும், தற்போது நடைமுறையில் உள்ள மதிப்பீட்டு முறை மாணவருக்கு அதிகப்படியான மன அழுத்தத்தை ஏற்படுத்துகிறது, இது இறுதியில் சோர்விற்கு வழிவகுக்கிறது. கற்பவர்களின் பல்வேறு திறன்கள் மற்றும் இயலுமைகளைக் கருத்தில் கொண்டு, தற்போதுள்ள மதிப்பீட்டு முறைமையும் திருத்தம் செய்யப்பட வேண்டும்.

**கல்வியின் தரம் போதாமை:** கற்பித்தல் மற்றும் கல்வித் தலைமைத்துவத்தின் தரம் போதுமானதாக இல்லை, மேலும் கற்றல் விளைவுகள் மோசமாக உள்ளன. போதுமான பாட அறிவு (குறிப்பாக சில பாடங்களில்) உள்ள ஆசிரியர்கள் பற்றாக்குறையாக உள்ளனர், எனவே சில ஆசிரியர்கள் கற்பிக்கத் தகுதியற்ற பாடங்களைக் கற்பிக்கிறார்கள், இது பயனற்றது.

**“பரீட்சைக்காக கற்பித்தல்”:** ஆசிரியர் வாண்மைத்துவ விருத்திக்கான முயற்சிகள், பரீட்சைகளில் சித்தி சதவீதத்தை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட உள்ளடக்க அறிவை வழங்குவதில் அதிக கவனம் செலுத்துகின்றன. எனவே, ஆசிரியர்கள் பெரும்பாலும் விசாரணை அடிப்படையிலான கற்றலை வளர்ப்பதற்குப் பதிலாக "பரீட்சைகளுக்காக கற்பிக்கிறார்கள்".

**விஞ்ஞானத் துறைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அணுகல்:** மொத்தப் பாடசாலைகளில் 28% மட்டுமே தரம் 11 இற்கு மேல் வகுப்புகளைக் கொண்டுள்ளன, அவற்றில் 36% மட்டுமே - "1AB பாடசாலைகள்" என்று அழைக்கப்படுகின்றன - நான்கு முக்கிய பாடத் துறைகளை (விஞ்ஞானம், வணிகம், கலை மற்றும் தொழில்நுட்பம்) கொண்டுள்ளன. இருப்பினும், உண்மையில், அனைத்து "1AB பாடசாலைகளும்" தொழில்நுட்பப் பாடத்துறையினைக் கொண்டிருக்கவில்லை. எனவே, நான்கையும் வழங்கும் 1AB பாடசாலைகள் அனைத்து பாடசாலைகளின் வெறும் 10% மாத்திரமேயாகும். எனவே, கலை மற்றும் வணிகப் பாடத் துறைகளை மாத்திரம் வழங்கும் ஏனைய வகைப் பாடசாலைகளை நோக்கிச் சார்ந்துள்ளனர்.

**ஆசிரியர்களின் பணியமர்த்தலில் ஏற்றத்தாழ்வு:** மோசமான பயன்பாட்டு நடைமுறைகள் காரணமாக, சில பாடங்களுக்கு தகுதியான ஆசிரியர்களின் பற்றாக்குறை உள்ளது. நகர்ப்புற பாடசாலைகளை நோக்கி பயிற்சி நடைமுறைகள் நீண்ட காலமாக நகர்ந்து வருவதால், நகர்ப்புற மாணவர்கள் அல்லாத மாணவர்கள் STEM பாடங்களை அணுகுவது கடினமாக இருப்பதால், இது STEM பாடங்களில் விசேடமாக கவனம் செலுத்தப்பட்டுள்ளது. இதன் விளைவாக, மேலதிக வகுப்பறைகள் மற்றும் ஆய்வுகூடங்களை வழங்குவதன் மூலம் மாகாண மற்றும் கிராமப்புறங்களில் STEM அணுகலை அதிகரிக்க அரசாங்கம் மேற்கொண்ட முயற்சிகள் எதிர்பார்த்த

பலன்களை அளிக்கவில்லை. ஆகையால், தெரிவுகள் இல்லாத காரணத்தால், கிராமப்புறங்களில் உயர்தர பாடசாலைகளில் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பாடங்களை சார்ந்தே காணப்படுகின்றன.

**விஞ்ஞானப் பாடத்துறையில் குறைவான அடைவுமட்டம்:** விஞ்ஞானப் பாடத்துறையில் குறைவான அடைவுமட்டமானது மாணவர்களை அதைரியப்படுத்துகின்றது. உயிரியல் விஞ்ஞானப் பாடத்துறையில் சித்தி சதவீதம் (58.15%) மற்றும் பௌதீக விஞ்ஞானப் பாடத்துறையில் சித்தி சதவீதம் (57.84%) ஆகியன கலைப் பாடத்துறையில் சித்தி சதவீதத்தை (66.78%) விட குறைவாக இருந்தது.

**சில மூன்றாம் நிலைக் கல்விப் பாடநெறிகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட வாய்ப்புக்கள்:** மூன்றாம் நிலை STEM நிகழ்ச்சித்திட்டங்களுக்கான வரையறுக்கப்பட்ட அணுகல் குறித்த கவலைகள், பல்கலைக்கழகத்தில் நுழைவதற்கான வாய்ப்புகளை அதிகரித்துக் கொள்வதற்காக சிரேஷ்ட இடைநிலை மாணவர்கள் கலைப் பாடத்துறையினைத் தெரிவு செய்யத் தூண்டுகின்றனர். 2022 ஆம் ஆண்டில், கலை, சட்டம், முகாமைத்துவம் மற்றும் வணிகம் ஆகியவை மொத்த இளமாணி பாடநெறிகளில் 47% ஆகவும், விஞ்ஞானம், பொறியியல், கட்டிடக்கலை மற்றும் கணினி விஞ்ஞானம் ஆகியவை 27% ஆகவும் இருந்தன. மேலும், மூன்றாம் நிலை அளவில் பல்வேறு திறன்களைக் கொண்ட மாணவர்களுக்கு வாய்ப்புகள் குறைவாகவே உள்ளன.

**விசேட தேவைகள் உள்ள மாணவர்களை அணுகுவதில் சமத்துவமின்மை மற்றும் உணர்திறன் இல்லாமை.**
தற்போதுள்ள கல்வி முறைமையினால் விசேட தேவைகள் உள்ள மாணவர்களை முறையாகப் பராமரிக்க முடியவில்லை. தற்போது, இதுபோன்ற சுகாதார நிலைமைகளைக் கொண்ட மாணவர்களின் கல்வி குறித்து எந்தக் கொள்கையும் இல்லை, மேலும் அத்தகைய மாணவர்களை நிர்வகிக்கவும் சேவை செய்யவும் மனித வளங்கள், பயிற்சி மற்றும் பௌதீக வளங்கள் ஆகியன பாடசாலைகளில் போதுமானதாக இல்லை.

மேற்கூறிய குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு கட்டமைக்கப்பட்ட மற்றும் நன்கு திட்டமிடப்பட்ட விளைவுகளை அடிப்படையாகக் கொண்ட கல்வி முறைமை மிகவும் பயனுள்ள வழிமுறையாகும் என்று நம்பப்படுகிறது.

அத்தகைய கல்வி முறைமையானது, உணர்ச்சி ரீதியாக புத்திகூர்மையுடையவர், சமூகப் பொறுப்புள்ள, சமூக மற்றும் கலாச்சார விழிப்புணர்வுள்ள, அரசியல் கல்வியறிவு பெற்ற, விமர்சன ரீதியாக சிந்திக்கும் திறன் கொண்ட பிரஜைகளை உருவாக்கும், மேலும் அவர்கள் நாட்டின் பொருளாதார செழிப்பு மற்றும் நிலையான வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்வார்கள்.

## 1.5 முன்மொழியப்பட்ட கல்வி நிலைமாற்றத்தின் முக்கிய கூறுகள்

இலங்கை கல்வி முறைமையின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவெனில், இலவசக் கல்வியை வழங்குவதற்கான அரசின் உறுதிப்பாடாகும். நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பே 1944 ஆம் ஆண்டு சட்டமன்றத்தில் இலவசக் கல்விக் கட்டளைச் சட்டம் நிறைவேற்றப்பட்டது, மேலும் அரச பாடசாலைகளில் சேரும் அனைத்து மாணவர்களுக்கும், அரச பல்கலைக்கழகங்களில் இளமானிப் பாடநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட அனைத்து மாணவர்களுக்கும் இலவசப் பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து வழங்குவதில் தேசிய மக்கள் கட்சி அரசாங்கம் உறுதியாக உள்ளது. இந்தக் தொலைநோக்குப் பார்வை, "வளரும் தேசம்: ஒரு அழகான வாழ்க்கை" என்ற கொள்கை அறிக்கையில் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது, இது கல்வியை ஒரு அடிப்படை உரிமையாகவும், உள்ளடக்கிய வளர்ச்சியின் முக்கிய உந்துதலாகவும் அடையாளம் காட்டுகிறது.

இலவசக் கல்வி என்பது தனிநபர்களை மேம்படுத்துவதற்கான ஒரு வழிமுறையாக மட்டுமல்லாமல், தேசிய மதிப்புகள் மற்றும் அடையாளங்களைப் பாதுகாக்கும் அதே வேளையில், உலகளாவிய அழுத்தங்களுக்கு மீள்தன்மையுடன் பதிலளிக்கும் திறன் கொண்ட அறிவு சார்ந்த பொருளாதாரத்தை உருவாக்குவதில் நீண்டகால முதலீடாகும். மேலும், தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கையிலான மாணவர்களுக்கு தொழில்நுட்ப மற்றும் தொழிற்கல்வி நிறுவனங்களிலும் இலவசக் கல்வி வழங்கப்படுகிறது. நாட்டின் அனைத்துப் பிள்ளைகளுக்கும் அவர்களின் உடல், அறிவாற்றல் மற்றும் உணர்ச்சித் தேவைகளைக் கருத்தில் கொண்டு, சமமான மற்றும் நியாயமான கல்வி அணுகலை வழங்குவதற்கும் அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது.

வரலாறு முழுவதும், மத நிறுவனங்கள், இலாப நோக்கற்ற நிறுவனங்கள் மற்றும் தனியார் துறை நிறுவனங்கள் போன்ற பிற பங்குதாரர்களும் நாட்டின் கல்வி முறையை வளர்ப்பதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கியுள்ளனர், தொடர்ந்து ஆற்றி வருகின்றனர் என்பதையும் தற்போதைய அரசாங்கம் பாராட்டுகிறது.

இந்த சூழலில், முன்மொழியப்பட்ட கல்வி மறுசீரமைப்புக்கள், தேசிய முன்னுரிமைகளை அடைவதை நோக்கிய உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட கற்பித்தல் கொள்கைகளின் அடிப்படையில் நிறுவப்பட்ட ஒரு புதிய கல்வி முறைமை மற்றும் கலாச்சாரத்தை உருவாக்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளன. எனவே, கல்வி மறுசீரமைப்புக்கள் தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படைக் கொள்கைகளால் வழிநடத்தப்படுகின்றன, அணுகல் மற்றும் சமத்துவத்தை உறுதி செய்தல், பண்புத் தரம் மற்றும் பொருத்தப்பாட்டினைப் பராமரித்தல், உட்படுத்தலை விருத்தி செய்தல் மற்றும் பொறுப்புக்கூறல் மற்றும் புத்தாக்கங்களை ஊக்குவித்தல், இதனால் கல்வி தனிப்பட்ட முன்னேற்றத்திற்கும் கூட்டு செழிப்புக்கும் அடித்தளமாக தொடர்ந்து செயல்படும்.

தேசிய கல்விக் கொள்கையை வழிநடத்தும் கோட்பாடுகள்

- இலவசக் கல்வி மற்றும் சமமான மற்றும் சம நியாயம் மிக்க அனுகல்
- மனித அபிவிருத்தி மற்றும் வேலை வாய்ப்புடன் தொடர்புடைமை
- அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்படல்
- பொறுப்புடைமையுடன் கூடிய சமூகத்திற்கு வகைகூறும் பிரஜைகள்
- நிலைபேறுடன் கூடிய தன்மை மற்றும் புத்தாக்கம்
- வாழ்நாள் முழுவதும் கற்றல்

# பகுதி 2: முன்மொழியப்பட்டுள்ள மறுசீரமைப்புக்கள்

## 2.1 கலைத்திட்ட விருத்தி

21 ஆம் நூற்றாண்டின் சவால்களுக்கும் அதற்கு அப்பாலும் தயாராக இருக்கும் ஒரு பிரஜையை உருவாக்குவதற்கான அடித்தளத்தை அமைப்பதும், நாட்டில் நிலைபேறுடன் கூடிய தேசிய அபிவிருத்தி மற்றும் அமைதிக்கான செயன்முறைக்கு பங்களிப்பதும் கலைத்திட்ட திருத்தத்தின் ஒட்டுமொத்த இலக்காகும்.

### 2.1.1 கலைத்திட்ட திருத்தத்திற்கான குறிக்கோள்

திருத்தம் செய்யப்பட்ட கலைத்திட்டமானது பின்வரும் விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்துகின்றது.

- கற்றல் விளைபேறுகளை மேம்படுத்துவதற்காக கலைத்திட்டத்தின் பொருத்தப்பாட்டையும் தரத்தையும் மேம்படுத்துதல்.
- கல்வியின் அத்தியாவசிய கூறுகளாக விமர்சன ரீதியான சிந்தனை மற்றும் உரையாடலை வலியுறுத்துதல்.
- பல நுண்ணறிவுகளை ஊக்குவித்தல்
- உணர்ச்சி சார் நுண்ணறிவின் பெறுமதியை அங்கீகரித்தல்
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பிரிவுகளில் மாணவர்கள் சேருவதற்கான வாய்ப்புகளை அதிகரித்தல் மற்றும் பன்முகப்படுத்துதல்.
- மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் சமூக மற்றும் அரசியல் மதிப்பைப் பற்றிய ஆழமான புரிதலை ஊக்குவித்தல்.
- நிலைபேறுடன் கூடிய அபிவிருத்தி இலக்குகள் (SDGs) மற்றும் குடியுரிமை கல்வியை ஊக்குவித்தல்.
- சமத்துவம், உட்படுத்தல் மற்றும் சமூக நீதி போன்ற முக்கிய மதிப்புகளை உட்பொதித்தல்.
- பாடசாலை-சமூக உறவுகளை வலுப்படுத்துதல்
- சமூக விழிப்புணர்வால் வளப்படுத்தப்பட்ட முயற்சியாண்மையாளர் கண்ணோட்டத்தை ஊக்குவித்தல்.

### 2.1.2 இலங்கையில் கல்வியின் பரம்பல்

தேசிய கல்விக் கொள்கைச் சட்டகத்தின் (2020-2030) படி, இலங்கையின் கல்வியின் பரம்பலை இவ்வாறு அடையாளம் காணலாம்

- முன் பிள்ளைப் பருவ அரவணைப்பு மற்றும் கல்வி (ECCE)
- பொதுக் கல்வி
- உயர் கல்வி
- தொழில்நுட்ப மற்றும் தொழிற் கல்வி

மேற்கூறியவற்றில், ECCE காலமானது அண்ணளவாக இரண்டு ஆண்டுகள் ஆகும், மேலும் இது கொள்கை வகுப்பாளர்கள் மற்றும் பயிற்சியாளர்களால் அதிக கவனம் செலுத்த வேண்டிய காலமாக அடையாளம் காணப்பட்டுள்ளது. ECCE ஐ செயல்படுத்தும் பொறுப்பு மாகாண சபைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும், சமீபத்திய முன்னேற்றங்களின் விளைவாக, தேசிய கல்வி நிறுவனத்திற்கு (NIE) ECCE க்கான கலைத்திட்டத்தை உருவாக்கும் அதிகாரம் கையளிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த கட்டம் இப்போது நாட்டின் பொதுக் கல்வி முறையின் ஒருங்கிணைந்த பகுதியாக சேர்க்கப்பட்டுள்ளது.

ஒரு பிள்ளை பாடசாலையில் செலவிட எதிர்பார்க்கப்படும் 13 ஆண்டு காலம் (பாடசாலைக் காலம்) இலங்கையில் பொதுக் கல்விக் காலமாகக் கருதப்படுகிறது. 13 ஆண்டு பொதுக் கல்விக் காலம் மூன்று முக்கிய பருவங்களாக பிரிக்கப்படும்:

- ஆரம்ப பருவம் (5 வருடங்கள், தரம் 1-5 வரை)
- கனிஷ்ட இடைநிலைப் பருவம் (4 வருடங்கள், தரம் 6-9)
- சிரேஷ்ட இடைநிலைப் பருவம் (4 வருடங்கள், தரம் 10-13)
    - சிரேஷ்ட இடைநிலை கட்டம் 1
    - சிரேஷ்ட இடைநிலை கட்டம் 2

ஒரு மாணவர் 5 வயதை எட்டியதும் பாடசாலையில் சேர்ந்து 18 வயது அல்லது அதனை அண்மித்த வயது வரை தொடர்கிறார். இந்த முறையை யுனெஸ்கோவின் சர்வதேச கல்வி தர வகைப்பாடு (ISCED) உடன் ஒப்பிடும் போது, இது கல்வித் திட்டங்கள் மற்றும் தொடர்புடைய தகுதிகளை அங்கீகரிப்பதற்கான ஒரு சர்வதேச வகைப்பாடு ஆகும், இலங்கையின் பொதுக் கல்வி முறை ISCED இன் முதல் மூன்று நிலைகளுக்குள் இருப்பதைக் காணலாம்.

### 2.1.3 பரந்த கற்றல் துறைகள்

ஒரு நாட்டின் பொதுக் கல்விக் கலைத்திட்டத்தில் அடையாளம் காணப்பட்ட பரந்த கற்றல் பகுதிகள், தொடர்ந்து மாறிவரும் உலகில் நிலைபேறுடன் கூடிய அபிவிருத்தி மற்றும் வளர்ச்சியை அடைவதற்கான சவால்களுக்கு முகங்கொடுப்பதற்கும், பதிலளிக்கவும் கூடிய பிரஜைகளை உருவாக்குவதற்கான அந்த நாட்டின் விருப்பத்தை பிரதிபலிக்கின்றன. அத்தகைய பிரஜைகள், தாங்கள் தெரிவு செய்த துறைகள் மற்றும் தொழில்களில் நிபுணத்துவ அறிவைப் பெற்றிருந்தாலும், தேவைப்படும்போது, சமூக நல்லிணக்கம் மற்றும் பன்முக கலாச்சார சகவாழ்வுக்கு அச்சுறுத்தலாக இருக்கும் மேலாதிக்க, பிளவுபடுத்தும் சக்திகளை எதிர்த்துப் பதிலளிக்கும் திறனையும் கொண்டிருக்க வேண்டும். இலங்கை பொதுக் கல்வி முறைமையில் அடையாளம் காணப்பட்ட கற்றல் துறைகள், கடந்த சில தசாப்தங்களாக, பல ஆண்டுகளாக ஏற்பட்டுள்ள பாரிய மாற்றங்கள் மற்றும் முன்னேற்றங்களைப் பொருட்படுத்தாமல், அதிகமாகவோ அல்லது குறைவாகவோ நிலையானதாகவே உள்ளன. சமகால கல்வியில் ஒரு அடிப்படைக் கருத்து என்னவென்றால், புதிய தலைமுறை குடிமக்கள் தங்களைச் சுற்றியுள்ள மாறிவரும் உலகத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்ளும் வகையில் இந்தக் கற்றல் பகுதிகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதே நேரத்தில், சமூகத்தின் சுற்றுப்புறங்களில் உள்ள சமூகங்களுக்கு சுரண்டல், பிரித்தெடுத்தல் மற்றும் தீங்கு விளைவிக்கும் உள்ளூர் மற்றும் உலகளாவிய செயல்முறைகளை அவர்கள் அடையாளம் கண்டு விமர்சிக்க முடியும். அதன்படி, பொதுக் கல்வி கலைத்திட்டத்திற்கு பின்வரும் பத்து கற்றல் துறைகள் முன்மொழியப்பட்டுள்ளன. இருப்பினும், அடையாளம் காணப்பட்ட பரந்த கற்றல் துறிஅகள் இலங்கையில் பொதுக் கல்விக்கு பரிந்துரைக்கப்பட்ட பாடங்களாகக் கருதப்படக்கூடாது என்பது வலியுறுத்தப்படுகிறது.

#### 1. மொழி மற்றும் எழுத்தறிவுக் கல்வி

எழுத்தறிவை அடைவது பொதுக் கல்வியின் முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். சமகால சூழலில், எழுத்தறிவு என்ற சொல் வாழ்க்கையின் பல்வேறு அம்சங்களில் தனிநபர்களின் திறன்களை விவரிக்கப் பயன்படுகிறது (உ+ம்:. தகவல் தொழில்நுட்ப எழுத்தறிவு, ஊடக எழுத்தறிவு மற்றும் கல்வி எழுத்தறிவு). இருப்பினும், எழுத்தறிவு அதன் மிக அடிப்படையான அர்த்தத்தில், அதாவது படிக்கவும் எழுதவும் திறன் என்று கருதப்படும்போது, எழுத்தறிவை அடைவதற்கான அடிப்படை வழிமுறையை மொழிக் கல்வி என்று அடையாளம் காணலாம். பன்மொழிப் பேச்சு வழக்கத்தில் உள்ள உலகில், பொதுக் கல்வி முறைமையில் மொழிக் கல்வியை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம்: வீட்டு மொழியைக் (தாய்மொழி) கற்றுக்கொள்வது மற்றும் பிற மொழிகளைக் கற்றுக்கொள்வது. இரண்டாவது மொழியான ஆங்கிலத்தைக் கற்கும் போது, தாய்மொழியில் புலமை பாதுகாக்கப்பட்டு வலுப்படுத்தப்படுவது அவசியம், ஏனெனில் கற்பவர்கள் தங்கள் வரலாறுகள், கலாச்சாரங்கள் மற்றும் சமூகங்களுடன் தாய்மொழி மூலம் தொடர்பு கொள்கிறார்கள்.

மேற்கூறியவற்றை அடைவதற்கு, கலைத்திட்ட வடிவமைப்பு செயல்முறை நாட்டின் தேசிய மொழிக் கொள்கையால் வழிநடத்தப்படுகிறது. இலங்கையில் மொழிக் கல்விக் கொள்கை நாட்டின் கலாச்சார பன்முகத்தன்மையில் ஆழமாக வேரூன்றியுள்ளது, அங்கு பன்மொழிப் பண்பாட்டை மதிப்பிடும் நீண்டகால பாரம்பரியம் உள்ளது. இலங்கையில் பெரும்பான்மையான மக்களால் பயன்படுத்தப்படும் இரண்டு அதிகாரப்பூர்வ மொழிகளான தமிழ் மற்றும் சிங்களம் மற்றும் சமகால சூழலில் மிகவும் அவசியமான சர்வதேச மொழியான ஆங்கிலம் ஆகியவை மொழி மற்றும்

எழுத்தறிவு கல்வியின் அடிப்படையில் பொதுக் கல்வி கலைத்திட்டத்தின் முதுகெலும்பாக அமைகின்றன. மேலும், முன்மொழியப்பட்ட மறுசீரமைப்புக்கள், சமரசம் மற்றும் சகவாழ்வுக்கான ஒரு முக்கியமான வழிமுறையாக, இரண்டாவது தேசிய மொழியான - சிங்களம் பேசும் மக்களுக்கு தமிழ் மற்றும் தமிழ் பேசும் மக்களுக்கு சிங்களம் - கற்றலை ஊக்குவிக்க முயல்கின்றன. இலங்கையின் குறைவாக அறியப்பட்ட மொழிகளைப் பேசுபவர்களைச் சேர்க்க, தாய்மொழி, முதல் மொழி, இரண்டாம் மொழி போன்றவற்றின் தற்போதைய வரையறைகளை விரிவுபடுத்துவதன் அவசியத்தையும் இந்தக் கொள்கை ஆவணம் ஒப்புக்கொள்கிறது மற்றும் கல்வித் துறையில் சைகை மொழிகளைப் பயன்படுத்துபவர்களின் மொழியியல் அபிலாஷைகளை அங்கீகரிக்கிறது.

பாடசாலை மட்டத்தில் கற்பிக்கப்படும் மற்ற அனைத்து மொழிகளும், பொதுக் கல்வியிலிருந்து எதிர்பார்க்கப்படும் 21 ஆம் நூற்றாண்டின் குடிமக்களுக்கு மதிப்பு கூட்டல்களாகவும், மாணவர்களின் குறிப்பிட்ட ஆர்வங்கள் மற்றும் விருப்பங்களைப் பூர்த்தி செய்யும் விதமாகவும் பார்க்கப்படுகின்றன.

பாடசாலை முறைமையினுள் உள்ள அனைத்து மொழி கற்றல் முயற்சிகளும் உள்ளூர் மற்றும் உலகளாவிய சூழல்களில் திறம்பட தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு குடிமகனை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டிருக்க வேண்டும். எனவே, மொழி கற்பித்தல் என்பது, மொழியைப் பற்றி கற்பிப்பதற்கு மாறாக, உள்ளூர் மற்றும் உலகளாவிய தொடர்புக்கான பயனுள்ள கருவிகளாக கற்றல் மொழிகளைப் பயன்படுத்துவதற்கு கற்பிப்பவரை அதிகாரம் அளிக்கும் ஒரு செயல்முறையாக இருக்க வேண்டும், இது முற்றிலும் கல்வி முயற்சியாகும். இலங்கையில் பொதுக் கல்வி சூழலில் மொழி கல்வி இரண்டு முக்கிய நோக்கங்களைக் கொண்டிருக்கும்:

(அ) மாணவர்கள் தங்கள் தாய்மொழி மற்றும் பிற மொழிகளை அடிப்படையான தனிப்பட்ட தொடர்புக்கு எவ்வாறு பயன்படுத்த வேண்டும் என்பதைக் கற்பித்தல், இதன் மூலம் அவர்கள் கருத்துக்களை நம்பிக்கையுடன் தெரிவிக்கவும், கேள்விகள் கேட்கவும், நியாயப்படுத்தவும், நிலைப்பாடுகளை எடுத்து பாதுகாக்கவும், நல்லிணக்கத்தை வளர்க்கும் ஆர்வத்தில் பிற மொழிகளைப் பேசுபவர்களுடன் தொடர்பு கொள்ளவும் முடியும்.

(ஆ) மாணவர்கள் தாங்கள் விரும்பும் பயிற்றுவிப்பு மொழியில் பாட உள்ளடக்கத்தைக் கற்கத் தேவையான கல்வி மொழித் திறனைப் பெற உதவுதல்.

இலங்கையில் இருமொழிக் கல்விக்கான தேவை அதிகரித்து வருவதால், பொதுக் கல்வி சூழலில் கற்பித்தல் ஊடகத்தை ஒழுங்குபடுத்தும் ஒரு விரிவான கொள்கை உருவாக்கப்பட்டு வருகிறது. அத்தகைய கொள்கை இருமொழிக் கல்வியின் அனைத்து அம்சங்களையும் நியாயமான, சமமான மற்றும் உள்ளடக்கிய முறையில் சிறப்பாக செயல்படுத்த உதவும்.

### 2. விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) கல்வி

இன்றைய பன்முகத்தன்மை வாய்ந்த மற்றும் சிக்கலான உலகில் எந்தவொரு சமூகமும் முன்னேற விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் கணிதம் (STEM) கல்வி ஒருங்கிணைவை வழங்குகிறது. முக்கியமாக விஞ்ஞானக் கல்வி மூலம் மாணவர்கள் தங்களைச் சுற்றியுள்ள பௌதீக உலகத்தையும் இயற்கை சூழலையும் அர்த்தமுள்ள வகையில் புரிந்துகொண்டு அனுபவிக்கும் திறனைப் பெறுகிறார்கள். தங்களைச் சுற்றியுள்ள உலகத்தைப் பற்றிய சரியான விஞ்ஞான ரீதியான விழிப்புணர்வு கொண்ட குடிமக்கள், நாம் வாழும் உலகத்திற்கு அதிக உணர்திறன் உடையவர்களாக இருக்கிறார்கள், இதனால் மனித வாழ்க்கைக்கு அதை ஒரு பாதுகாப்பான, நிலையான மற்றும் வசதியான இடமாக மாற்றுவதற்கு சிறப்பாக பங்களிக்க முடியும்.

பாடசாலை முறைமையினுள் STEM கல்வி இரண்டு முக்கிய நோக்கங்களை நிறைவேற்றும் என்று எதிர்பார்க்கப்படுகிறது: a) நாட்டின் நிலையான வளர்ச்சிக்கு பங்களிப்பது, b) இந்தத் துறைகளில் உயர்கல்விக்கு மாணவர்களை ஊக்குவித்து வழிநடத்துவது மற்றும்

புதுமையான மற்றும் படைப்பாற்றல் மிக்க சிந்தனையாளர்களாக இருப்பது.

தொடர்பாடலை எளிதாக்குவதில் கணிதம் மொழிகளைப் போலவே முக்கியமானது. கணிதக் கல்வி தர்க்கரீதியான மற்றும் விமர்சன சிந்தனையை வளர்ப்பதற்கு பங்களிக்கிறது, இது ஒரு நபர் உண்மை வாழ்க்கையில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு சிறந்த தீர்வுகளைக் கண்டறிய முடிவுகளை எடுக்க உதவுகிறது. எனவே, அனைத்து மாணவர்களுக்கும் ஒரு நல்ல கணிதக் கல்வி வழங்கப்படுவது கட்டாயமாகும், இது விமர்சன மற்றும் ஆக்கப்பூர்வமான சிந்தனையை எளிதாக்கும், மேலும் அவர்கள் தங்கள் கல்வியைத் தொடர உதவும்.

தொழில்நுட்ப முன்னேற்றத்தால் ஏற்படும் அறிவின் விரைவான விரிவாக்கம் மற்றும் அறிவின் மாறிவரும் தன்மையால் ஏற்படும் சவால்களைச் சமாளிக்க தொழில்நுட்பம் மற்றும் பொறியியலில் விரிவான பயிற்சியும் மிக முக்கியமானது.

STEM என்பது ஒரு பரந்த கற்றல் துறையாகும், இது புவி வெப்பமடைதல் மற்றும் புதுப்பிக்க முடியாத வளங்களின் குறைவு காரணமாக மனித இருப்பு எதிர்கொள்ளும் சவால்களைச் சமாளிக்க விஞ்ஞான ரீதியான விசாரணையைப் பயன்படுத்த கற்பவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது. அறிவு மற்றும் திறன்களின் சிறந்த கலவையின் மூலம் மட்டுமே STEM கல்வியை அர்த்தமுள்ளதாக மாற்ற முடியும்.

### 3. அழகியல் கல்வி

பொதுக் கல்வி கலைத்திட்டத்தில் கொண்டாடப்படும் மிக முக்கியமான பரந்த கற்றல் துறையில் அழகியல் ஒன்றாகும். அழகியல் கல்வியுடன் இணைக்கப்பட்ட மிக முக்கியமான முக்கிய திறன் வாழ்க்கையைப் பாராட்டுவதாகும். மேலும், தொழில்நுட்ப முன்னேற்றத்தின் தற்போதைய உலகில், பரந்த கற்றல் துறையாக அழகியல் கல்வி, அவர்களின் படைப்பாற்றல், புதுமை மற்றும் முற்போக்கான சமூக மாற்றத்திற்கான ஆர்வத்துடன் பரந்த சமூகத்தை மகிழ்விக்கும் மற்றும் கல்வி கற்பிக்கும் திறன் கொண்ட பிரஜைகளை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிக்கிறது.. மேலும், அழகியல் கல்வி என்பது கற்பவர்களை ஒரு சமூகத்தின் கலாச்சார வாழ்க்கையைப் பாராட்டும் சிந்தனையாளர்களாகவும் படைப்பாளர்களாகவும் மாற்றுவதற்கு மிகவும் முக்கியமானது. அழகியல் கல்வி என்பது ஒரு பரந்த கற்றல் துறை என்றும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, இது ஒருவருக்கொருவர் மற்றும் தனிப்பட்டவர்களுக்கு இடையேயான உணர்ச்சி நுண்ணறிவுக்கு வழிவகுக்கிறது, இது சுய விழிப்புணர்வு, மீள்தன்மை மற்றும் ஒத்துணர்வு கொண்ட பிரஜைகளை உருவாக்குவதில் ஒரு முக்கியமான பங்களிப்புச் செய்கின்றது.

தேசிய கலைத்திட்டம் முழுவதும், அழகியல் கல்வியை வழங்குவது பாடசாலைக் கல்வியின் ஒவ்வொரு கட்டத்தின் முக்கிய நோக்கங்களையும் கருத்தில் கொண்டு வெவ்வேறு வழிகளில் செய்யப்படும். இது மிகவும் நடைமுறை நோக்குநிலையை எடுக்கும், இது கற்பவர்களுக்கு அழகியல் கல்வியை மிகவும் அர்த்தமுள்ளதாக மாற்றும். மாணவர்களின் மகிழ்ச்சி, தளர்வு மற்றும் உணர்ச்சி சமநிலைக்கு பல்வேறு வகையான அழகியலைப் பயிற்சி செய்வதற்கும் அனுபவிப்பதற்கும் முக்கியத்துவம் அளிப்பது முக்கியம்.

### 4. சுகாதாரம் மற்றும் உடற் கல்வி

பொதுக் கல்வியின் முக்கிய அங்கமாக சுகாதாரம் மற்றும் உடற்கல்வியை மாற்றுவதன் முக்கியத்துவத்தை மிகைப்படுத்த முடியாது. நாட்டின் பொதுக் கல்வி முறைமையினுள் ஒரு பரந்த கற்றல் பகுதியாக சுகாதாரம் மற்றும் உடற்கல்வி ஒரு வலுவான மற்றும் ஆரோக்கியமான தேசத்தை உருவாக்குவதற்கான அடித்தளத்தை வழங்கும். மனிதர்களின் ஆரோக்கியமற்ற வாழ்க்கை முறைகள் கடுமையான கவலையை ஏற்படுத்தும் உலகில், தேசிய கலைத்திட்டத்தில் சுகாதாரம் மற்றும் உடற்கல்விக்கு ஒரு பரந்த கற்றல் பகுதியாக முக்கியத்துவம் கொடுப்பது அவசியம், ஏனெனில் இது மாணவர்கள் உடல் ரீதியாகவும் உணர்ச்சி ரீதியாகவும் ஆரோக்கியமான வாழ்க்கை முறையைப் புரிந்துகொள்ளவும், மதிக்கவும், பயிற்சி செய்யவும் உதவும்.

## 5. பொருளியல், வணிகம் மற்றும் முயற்சியாண்மைக் கல்வி

பொருளாதாரம், வணிகம் மற்றும் முயற்சியாண்மைக் கல்வி ஆகியவை நிலைபேறுடன் கூடிய தேசிய அபிவிருத்திக்கும் வெற்றிகரமான வாழ்க்கைக்கும் பங்களிக்கக்கூடிய ஒரு முக்கிய பரந்த கற்றல் துறையாக அடையாளம் காணப்பட்டுள்ளன. பொருளாதாரம், பொருளாதார மற்றும் சமூக மேம்பாடு, சமூக பொருளாதார வேறுபாடு மற்றும் சமத்துவமின்மை ஆகியவற்றில் அடிப்படை அறிவைப் புகுத்துவது பயனுள்ள சிந்தனையாளர்களையும் பொறுப்புள்ள குடிமக்களையும் உருவாக்குவதற்கு இன்றியமையாதது. மேலும், வணிக மற்றும் நிர்வாகத் திறன்களை விருத்தி செய்தல், தொழிற் திறன்கள், பொறுப்பான மற்றும் நெறிமுறை சார்ந்த ஒரு முயற்சியாண்மையாளர் கண்ணோட்டம் மற்றும் நிலையற்ற உலகில் சவால்களை சமாளிக்க மீள்தன்மையை விருத்தி செய்தல் ஆகியவை புதிய கலைத்திட்டத்தில் கையாளப்படுகின்றன. பொருளாதார தன்னிறைவை அடைவதற்கு அவசியமான வளப் பகிர்வு, இலாப விநியோகம், தொழிலாளர் உரிமைகள் மற்றும் பாதுகாப்புகள் மற்றும் சிறு மற்றும் நடுத்தர தொழில்களை வலுப்படுத்துதல் ஆகியவற்றை வலியுறுத்தும் கூட்டுறவு முயற்சியாண்மையாளர் மாதிரிகளை இந்த கலைத்திட்டம் ஆராயும்.

நவீன வாழ்க்கையின் பொருளாதாரக் கண்ணோட்டங்கள் தொடர்ந்து மாறிக்கொண்டே இருக்கின்றன. நிதி பயன்பாடு, பொருட்கள் மற்றும் சேவைகளை விற்பனை செய்தல் மற்றும் கொள்வனவு மற்றும் வேலைவாய்ப்பின் தன்மை ஆகியவற்றில் புதிய போக்குகள் உள்ளன. டிஜிட்டல் நாணயங்கள் மற்றும் டிஜிட்டல் பரிவர்த்தனைகளின் பயன்பாடு மற்றும் இலத்திரனியல் வணிகம் ஆகியவை புதிய உலக ஒழுங்காக மாறி வருகின்றன. எனவே, அடுத்த தலைமுறை பிரஜைகளை இந்த முன்னேற்றங்களின் திறமையான, பயனுள்ள, பொறுப்பான மற்றும் நெறிமுறை பயனர்களாக தயார்படுத்துவது கட்டாயமாகும்.

## 6. மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கிளை

மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கல்வியின் நோக்கம், சமூக தொடர்பு, வரலாறு, கலாச்சாரம், அரசியல், வர்த்தகம் மற்றும் பரிமாற்றம் மற்றும் கலைகள் போன்ற மனித அனுபவத்தின் பல்வேறு அம்சங்கள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதாகும். எனவே, மானுடவியக் மற்றும் சமூக விஞ்ஞானக் கல்வி பொதுக் கல்வி கலைத்திட்டத்தின் ஒரு முக்கிய துறையாகும். இந்தக் கற்றல் துறையை, உள்ளடக்கிய கண்ணோட்டத்தை ஊக்குவிப்பதன் மூலம், அவர்கள் வாழும் உலகத்தைப் பற்றிய நேர்மறையான மற்றும் விமர்சன மனப்பான்மை கொண்ட ஒரு பிரஜைகளை உருவாக்குவதற்கான வலுவான அடித்தளத்தை உருவாக்குகிறது. மேலும், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பாடநெறிகளை கற்பவர்கள் தனிமைப்படுத்தலுக்கு அப்பால் பார்க்கவும் சுய சேவை செய்யவும் உதவும்.

மாணவர்கள் தங்கள் அண்மித்த சமூகங்கள் மற்றும் தேசத்தில் தங்கள் பங்கைப் பற்றிய விழிப்புணர்வைப் பெற, பல்வேறு வகையான அடையாளங்களை வளர்த்துக் கொள்ளவும், அவற்றை விமர்சிக்கவும் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கல்வி மிக முக்கியமானது. இத்தகைய விழிப்புணர்வு, அமைதி மற்றும் நல்லிணக்கத்திற்குத் தேவையான ஜனநாயகம் மற்றும் சமூகங்களுக்கு இடையேயான உரையாடலை வலுப்படுத்த பங்களிக்க அவர்களை அனுமதிக்கும்.. மேலும், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தின் வலுவான அடித்தளம், சாதி, இயலாமை, பாலினம் மற்றும் சமூக அடுக்கின் பிற அம்சங்கள் தொடர்பான சமத்துவம் மற்றும் சமூக நீதிக்கு வழிவகுக்கும். இந்த துறைகள் கற்பவர்கள் தங்கள் நாட்டின் அபிவிருத்தியில் பங்கேற்கவும், உலகளாவிய பிரஜைகளாக தங்கள் பங்கையும் பொறுப்பையும் பாராட்டவும் உதவும். உள்முக மட்டத்தில், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத்தின் அடித்தளம் அதிக சுய விழிப்புணர்வு மற்றும் ஒத்துணர்விற்கு வழிவகுக்கும், மேலும் சிக்கலான

உணர்ச்சிகளைப் புரிந்துகொண்டு ஈடுபடும் திறனை மேம்படுத்தும்.

### 7. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT)

தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் நான்காவது கைத்தொழிற்துறைப் புரட்சியின் அடித்தளமாகக் கருதப்படுகிறது, எனவே, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப அறிவை பெறுவதற்குத் தேவையான திறன்களுடன் தேசத்தை மேம்படுத்துவது நாட்டின் புதிய கல்வி மறுசீரமைப்புக்களில் முக்கிய பணிகளில் ஒன்றாகும். தற்போதைய கலைத்திட்ட மறுசீரமைப்பு மாணவர்களை தொழில்நுட்ப ரீதியாக திறமையானவர்களாகவும், புரிந்துகொள்வதற்கு மட்டுமல்லாமல், பெருகிய முறையில் தொழில்நுட்ப ரீதியாக மாற்றமடைந்து வரும் உலகில் திறம்பட மற்றும் நெறிமுறை ரீதியாக பங்கேற்கவும் தயார்படுத்த வேண்டும். உதாரணமாக, வீடு, பாடசாலை மற்றும் சமூகம் முழுவதும் அன்றாட வாழ்வில் பயன்படுத்தக்கூடிய தொழில்நுட்பம் மற்றும் அதன் கருவிகள் குறித்த விழிப்புணர்வை உருவாக்குவதே இதன் நோக்கங்களாக இருக்க வேண்டும். கூடுதலாக, அத்தகைய கலைத்திட்டம் மாணவர்களுக்கு ICT சாதனங்கள் பற்றிய அடிப்படை அறிவை வழங்குவதோடு, அடிப்படை கணினி அறிவு மற்றும் திறன்களையும் கற்பிக்கும். தொழில்நுட்பத்தின் சுரண்டல், சட்டவிரோத மற்றும் நெறிமுறையற்ற பயன்பாட்டை எவ்வாறு கண்டறிந்து பதிலளிப்பது என்பது குறித்த விழிப்புணர்வு இந்தக் கல்வியின் ஒரு முக்கிய பகுதியாக இருக்கும்.

### குறுக்கு கலைத்திட்ட கற்றல் துறைகள்

முன்மொழியப்பட்ட புதிய கலைத்திட்டமானது, பரந்த மற்றும் முழுமையான கண்ணோட்டத்துடன் ஒரு நவீன பிரஜையை உருவாக்குவதில் முக்கிய அம்சங்களாகக் கருதப்படும் பல குறுக்கு-கலைத்திட்ட கற்றல் துறைகளையும் அடையாளம் காட்டுகிறது. இந்த துறைகள் பல துறைகளின் சந்திப்பில் வைக்கப்படும் விதத்தால் வரையறுக்கப்படுகின்றன, எனவே அவை பல கற்றல் துறைகளில தகவல் மற்றும் செல்வாக்கு செலுத்தப்படுகின்றன.

### 8. பண்பு மற்றும் குடியுரிமைக் கல்வி

பண்புகள் மற்றும் குடியுரிமை கல்வி நாட்டில் ஒரு வலுவான சிவில் சமூகத்தை உருவாக்க பங்களிக்கிறது. ஒரு தேசத்திற்கு கல்வி கற்பித்தல் என்ற நோக்கத்திலிருந்து பயனடைய பிரஜைகளை வலுவூட்டுவதில் கல்வியின் மிக முக்கியமான அம்சமாக இந்தக் கற்றல் துறை இருக்கலாம். குறிப்பாக, நவீன சமூகத்தின் பன்முகத்தன்மையின் இயக்கவியலை புரிந்துகொள்வது, ஜனநாயக நடைமுறைகளை மதிப்பிடுவது, முடிவெடுப்பது மற்றும் மரியாதைக்குரிய மற்றும் அமைதியான சகவாழ்வு போன்ற ஒரு மாணவரிடம் விருத்தி செய்யப்படும் திறன்கள் எதிர்கால தேசத்தின் கட்டுமானத் தொகுதிகளாகக் கருதப்படும்.

### 9. சுற்றாடல் மற்றும் நிலைபேறுடன் கூடிய அபிவிருத்தி

இந்த உலகில் மனித வாழ்வின் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்காக, சமகால உலகில் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய பல வெளிப்படையான மற்றும் அவசரமான பிரச்சினைகள் உள்ளன. கடந்த சில நூற்றாண்டுகளாக மனித நடவடிக்கைகள் உலகின் சுற்றுச்சூழல் அமைப்புகளை உடையக்கூடியதாகவும், பாதிக்கப்படக்கூடியதாகவும், நிலைத்தன்மையற்றதாகவும் ஆக்கியுள்ளன. காலநிலை மாற்றங்கள், சுற்றுச்சூழல் மாசுபாடு, புவி வெப்பமடைதல் மற்றும் இயற்கை வளங்களின் குறைவு ஆகியவை உலகை எதிர்கால சந்ததியினருக்கு பாதுகாப்பான இடமாக மாற்ற உடனடி கவனம் தேவைப்படும் சில பிரச்சினைகள் ஆகும். ஒரு நாட்டின் கல்வி முறைமையானத், இந்தப் பிரச்சினைகளைத் தணிக்க நடைமுறைக்கு ஏற்ற மற்றும் நீடித்த தீர்வுகளைக் கண்டறிய அதன் மக்களுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப்பைக் கொண்டுள்ளது என்று நிபுணர்கள் கருதுகின்றனர். எனவே, புதிய மிலேனியத்தின் கலைத்திட்ட மறுசீரமைப்பு இயக்கங்கள், பொதுக் கல்வி மூலம் சுற்றுச்சூழல் மற்றும் நிலைபேறுடன் கூடிய அபிவிருத்தி தொடர்பான பிரச்சினைகளைத் தீர்க்க

குறிப்பிடத்தக்க முயற்சிகளை மேற்கொள்கின்றன, ஏனெனில் ஆரோக்கியமான, நிலையான மற்றும் சுற்றுச்சூழல் ரீதியாக பொறுப்பான வாழ்க்கை முறையின் கருத்தை வாழ்க்கையின் வளரும் ஆண்டுகளில் மிகவும் திறம்பட புகுத்த முடியும். இத்தகைய கலைத்திட்ட மறுசீரமைப்புகள் மூலம், மாணவர்கள் தங்கள் அண்மித்த சூழலுக்கான பொறுப்பை வளர்த்துக் கொள்ள முடியும், மேலும் உள்ளூர் மற்றும் உலகளாவிய ரீதியில் நிலையான வாழ்க்கையை உறுதி செய்வதற்காக அவர்களின் செயல்கள் மற்றும் நடத்தைகள் குறித்து தகவலறிந்த தீர்ப்புகளை வழங்க முடியும்.

### 10. வேலை உலகிற்கான கல்வி

அடுத்த தலைமுறையை வேலைக்குத் தயார்படுத்துவது கல்வியின் முக்கிய பொறுப்புகளில் ஒன்றாகும். இந்த விஷயத்தில் கல்வியின் முக்கிய அக்கறை, சம்பளம் பெறாத உழைப்பு உட்பட உழைப்பு ஒவ்வொரு பிரஜைகளாலும் மதிக்கப்பட்டு கொண்டாடப்படும் ஒரு கலாச்சாரத்தை உருவாக்குவதாகும். 4வது தொழில்துறை புரட்சியின் வருகையுடன், ஒரு நாடு அதன் மனித வளத் தேவைகளை விஞ்ஞான ரீதியாக மதிப்பிடுவதும், உலகப் பொருளாதாரத்தின் மாறிவரும் கோரிக்கைகளைப் பூர்த்தி செய்வதற்கும், வழிநடத்துவதற்கும், தேவைப்படும் இடங்களில் எதிர்ப்பதற்குமான அதன் பணிக் கல்வியை மீண்டும் சீரமைப்பதும் மிக முக்கியம். புதிய தொழில்களின் வருகையையும், புதிய தொழில்நுட்பங்களின் முன்னேற்றத்தால் சில தொழில்கள் வீழ்ச்சியடைவதையும் உலகம் கண்டு வருவதால், கல்வி முறைகள், மாறும் வேலை உலகில் ஏற்படும் மாற்றங்களை எதிர்கொள்ள மாணவர்களை தயார்படுத்த வேண்டும். இந்த விஷயத்தில், கலைத்திட்ட தலையீடுகள் மாணவர்களை மாற்றத்தை நிர்வகிக்கவும் அதற்கு பதிலளிக்கவும் தயார்படுத்துவது சமமாக முக்கியமானது.

### 2.1.4 வசனங்களுக்கான வரைவிலக்கணம்

முன்மொழியப்பட்ட கலைத்திட்ட சூழலில் பின்வரும் வரைவிலக்கணங்கள் பயன்படுத்தப்படுகின்றன.

**மொடியுல்**: ஒரு மொடியுல் என்பது ஒரு குறிப்பிட்ட தலைப்பு, திறன் அல்லது ஒரு பாடத்திற்குள் உள்ள கருப்பொருளை உள்ளடக்கிய ஒரு கவனம் செலுத்திய, தன்னிறைவான கற்றல் அலகு ஆகும். இது கட்டமைக்கப்பட்ட உள்ளடக்கம், செயற்பாடுகள் மற்றும் மதிப்பீடுகள் மூலம் வரையறுக்கப்பட்ட கற்றல் விளைவுகளை அடைவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பாடம்**: பாடசாலைப் பாடம் என்பது பாடசாலைக் கலைத்திட்டத்தின் ஒரு பகுதியாகக் கற்பிக்கப்படும் அறிவு அல்லது கற்றலின் ஒழுங்கமைக்கப்பட்ட பகுதியாகும். ஒவ்வொரு பாடமும் கணிதம், விஞ்ஞானம், மொழி, வரலாறு போன்ற ஒரு குறிப்பிட்ட கற்றல் துறையில் கவனம் செலுத்துகிறது, மேலும் அந்த குறிப்பிட்ட துறையில் மாணவர்கள் புரிந்துகொள்ளும் திறன்களையும் திறன்களையும் விருத்தி செய்ய உதவும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**மேலதிக கற்றல் மொடியுல்கள்**: மேலதிக கற்றல் மொடியுல்கள் என்பது ஒரு குறிப்பிட்ட பாடத்துடன் தொடர்புடைய துணை மொடியுல்கள் ஆகும், அவை நிலையான மொடியுல்களிலிருந்து பெறப்பட்ட அறிவை வளப்படுத்தவும் விரிவுபடுத்தவும் வடிவமைக்கப்பட்டுள்ளன. இந்த மொடியுல்கள் மாணவர்களின் புரிதலை ஆழப்படுத்துதல், ஆர்வத்தைத் தூண்டுதல் மற்றும் அதிக ஆர்வத்தை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்டுள்ளன, குறிப்பாக நடைமுறை பயன்பாடுகள், நேரடி அனுபவங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடத்தில் வளர்ந்து வரும் முன்னேற்றங்களை வெளிப்படுத்துதல் மூலம் இது இடம்பெறுகின்றது. இந்த மொடியுல்கள், பிரதான கலைத்திட்டத்திற்கு அப்பால் ஆய்வுகளை ஊக்குவிப்பதற்கும், மேம்பட்ட அல்லது குறிப்பிட்ட ஆர்வங்களைக் கொண்ட கற்பவர்களுக்கு உதவுவதற்கும், குறிப்பாக

உண்மை உலக சூழல்களிலும் பணி உலகிலும் தங்கள் அறிவைப் பயன்படுத்துவதில் குறிப்பாக பெறுமதி மிக்கவையாகும்..

**நிலைமாற்றுத் திறன் மொடியுல்கள்:** நிலைமாற்றுத் திறன் மொடியுல்கள் என்பது பாரம்பரிய பாட எல்லைகளை மீறும் கற்றல் அலகுகள், பல துறைகளில் பொருந்தக்கூடிய திறன்கள், அறிவு, சுயாட்சி மற்றும் பொறுப்பு ஆகியவற்றைக் கையாள்கின்றன. இந்த மொடியுல்கள், கல்வி கற்றலை உண்மை வாழ்க்கை சூழல்களுடன் இணைக்க உதவுவதன் மூலம் மாணவர்களின் முழுமையான விருத்தியை ஊக்குவிக்க வடிவமைக்கப்பட்டுள்ளன. மாற்றத்தக்க திறன்களையும் ஒருங்கிணைந்த அறிவையும் வளர்ப்பதன் மூலம், நிலைமாற்றுத் திறன் மொடியுல்கள் மாணவர்களை கல்வி வெற்றிக்கு மட்டுமல்ல, அன்றாட வாழ்க்கையிலும் வேலை உலகிலும் அர்த்தமுள்ள பங்கேற்பிற்கும் தயார்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

**வளப்படுத்தல் மொடியுல்கள்:** வளப்படுத்தல் மொடியுல்கள் என்பது மாணவர்கள் ஒரே பாடத்துறையிலிருந்து தெரிவு செய்யும் மொடியுல்களாகும், குறிப்பிட்ட பாடத் துறைக்கு அவசியமான முக்கிய பாடங்களைத் தவிர்த்து இதில் உள்ளடங்குகின்றது

**துறைகளுக்கு இடையேயான மொடியுல்கள்**: இந்த மொடியுல்கள் ஒரு மாணவரின் தெரிவு செய்யப்பட்ட பாடத்தின் முக்கிய அல்லது அத்தியாவசிய பாடத் தொகுதிகளுக்கு வெளியே இருப்பவையாகும். இருப்பினும், சிரேஷ்ட இடைநிலைக் கல்வியின் இரண்டாம் கட்டத்தின் போது வழங்கப்படும் பரந்த கற்றல் வாய்ப்புகளின் ஒரு துறையாக அவற்றை எடுத்துக் கொள்ளலாம், இதனால் மாணவர்கள் கூடுதல் ஆர்வங்களை ஆராய அல்லது நிரப்பு திறன்களைப் பெற முடியும்.

**பாடசாலை திறன் மட்டம்** (கிரெடிட்): பாடசாலை திறன் மட்டம் என்பது ஒவ்வொரு பாடத்திலும் அல்லது மொடியுலிலும் ஒரு மாணவர் அடைந்த கற்றலின் அளவை அளவிடும் ஒரு அளவீடு ஆகும். ஒரு திறன் மட்டம் என்பது மொத்த கற்றல் நேரத்தின் 10 மணித்தியாலங்களை ஒத்ததாகும் இதில் நேரடி கற்பித்தல், வழிகாட்டப்பட்ட கற்றல், செயற்பாடுகள், செயன்முறை ரீதியான வேலை மற்றும் சுயாதீன கற்றல் ஆகியவை அடங்கும்.

## 2.1.5 முன்மொழியப்பட்ட கலைத்திட்ட நிலைமாற்றத்தின் முக்கிய அம்சங்கள்

### ☛ தரம் 6 முதல் பாடசாலை திறன் மட்ட முறைமை (ஒரு தவணைக்கு 35 திறன் மட்டங்கள் /350 மணித்தியாலயங்கள்)

கனிஷ்ட இடைநிலையிலிருந்து அறிமுகப்படுத்தப்பட்ட பாடசாலை திறன்மட்ட அமைப்பு, ஒரு பிள்ளை ஒரு தவணையில் ஈடுபடும் கற்றலின் அளவை தீர்மானிக்க உதவுகிறது. இந்த முறையின்படி, திறன் மட்டத்தைப் பெற்றுக் கொள்வதற்கு, ஒரு மாணவர் 10 மணித்தியாலக் கற்றலை (600 நிமிடங்கள்) முடிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில், 500 நிமிடங்கள் (10 x 50 நிமிட காலங்கள்) பாடசாலை நேரத்திற்குள் வரும், மீதமுள்ளவை (100 நிமிடங்கள்) வகுப்பிற்கு வெளியே சுயமாக கற்றலுக்கு அர்ப்பணிக்கப்படுகின்றன. கலைத்திட்டங்களை உருவாக்குவதில், கலைத்திட்ட உருவாக்குநர்கள் ஒரு குறிப்பிட்ட பாடத்திற்கான கலைத்திட்டத்தை அர்த்தமுள்ள 10 மணித்தியால அலகுகளாகப் பிரிக்க வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இதனால் ஒரு மாணவர் அந்தக் கற்றல் அலகைக் கற்ற பிறகு ஒரு திறன் மட்டத்தை பெற முடியும். 10 மணித்தியாலக் கற்றல் அலகு பிரிவின் அடிப்படையில் கற்பித்தல் பொருட்கள் உருவாக்கப்படுவதால், கற்பித்தல் பொருட்கள் உருவாக்கும் செயல்முறையும் இந்த முறையைப் பின்பற்றுகிறது. இந்த வழியில், ஒரு மாணவரின் செயல்திறனை கால அடிப்படையிலோ அல்லது நிலை அடிப்படையிலோ தெரிவிக்கும்போது, ஒரு குறிப்பிட்ட பாடத்தில் மாணவர் பெற்றுள்ள திறன் மட்டங்களின் எண்ணிக்கை கற்றல் அளவைக் குறிக்கும் (உ+ம்., 3 திறன் மட்டங்கள் 30 மணித்தியாலக் கற்றலைக் குறிக்கின்றன).

### ☛ அமைப்பு மதிப்பீட்டிற்கு அதிக முக்கியத்துவம்

அமைப்பு மதிப்பீட்டை வலுப்படுத்துவது, ஆசிரியர் மற்றும் மாணவர் இருவரும் கற்றல்

செயல்முறையில் அதிக கவனம் செலுத்த உதவுகிறது, இது பொதுவாக சுருக்கமான பரீட்சைக்குப் பின்னர் பெறப்படும் தரமாகும். மேலதிகமாக, அமைப்பு மதிப்பீடுகள் தொடர்ச்சியான கருத்துக்களை வழங்குவதற்கான வாய்ப்புகளை வழங்குகின்றன, இது தனிப்பயனாக்கப்பட்ட கற்றல் நடைபெற உதவுகிறது, இதனால் ஒவ்வொரு மாணவரும் நோக்கம் கொண்ட அத்தியாவசிய கற்றல் விளைவுகளை அடைவதை உறுதி செய்கிறது. இந்தச் சூழலில்தான், புதிய மறுசீரமைப்பு கலைத்திட்டத்திலும், கற்பித்தல் சாதனங்களின் மேம்பாட்டுச் செயல்முறையிலும் வடிவ மதிப்பீட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன. புதிய மறுசீரமைப்புக்காளில், ஒவ்வொரு 10 மணித்தியால கற்றல் அலகும் அமைப்பு மதிப்பீட்டில் 70% எடையையும், மீதமுள்ளவை (30%) அலகு-இறுதி கூட்டு மதிப்பீட்டிலும் இருக்கும், இதனூடாக மாணவர் எதிர்பார்க்கப்படும் செயலாற்றுகை நிலையை அடைந்துவிட்டாரா என்பதை உறுதி செய்யும். உலகளவில், மாணவர்களின் முன்னெச்சரிக்கை ஈடுபாட்டின்மை மற்றும் அமைப்பு மதிப்பீடுகளின் அதிகப்படியான தத்துவார்த்த நோக்குநிலை போன்ற சிக்கல்களைத் தொடர்ந்து கண்காணித்து நிவர்த்தி செய்ய வடிவ மதிப்பீடுகள் உதவுவதால் அவை பயனுள்ளதாக இருக்கும் என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது, இவை பெரும்பாலும் மனப்பாடம் செய்வதையே சார்ந்துள்ளது. அமைப்பு மதிப்பீடுகள் கூட்டு கற்றல், விமர்சன கலந்துரையாடல் மற்றும் பெறுமதிகளின் உள்மயமாக்கலை ஊக்குவிக்கின்றன.

### ☛ தரம் 9 நிறைவில் நடைபெறவிருக்கும் தேசிய திறன் மதிப்பீடு

மாணவர்கள் கனிஷ்ட இடைநிலைக் கல்வியை நிறைவு செய்யும் வேளையில், புதிய மறுசீரமைப்புக்களின் கீழ் தரம் 9 முடிவில் தேசிய திறன் மதிப்பீட்டை நடத்த பரிந்துரைக்கின்றன. முன்மொழியப்பட்ட தேசிய திறன் மதிப்பீடு, மாணவர்கள் தங்கள் சிரேஷ்ட இடைநிலைக் கல்விக்கு முன்னேறத் தயாராக இருப்பதை மதிப்பிடுவதை நோக்கமாகக் கொண்டுள்ளது. இது மாணவர்களின் இயல்பான விருப்பங்கள் அல்லது போக்குகள் மற்றும் சிரேஷ்ட இடைநிலைக் கல்விக்கான சாத்தியமான மேலும் பாதைகள் பற்றிய நுண்ணறிவுகளை வழங்கும். தேசிய திறன் மதிப்பீடு இரண்டு முக்கிய கூறுகளைக் கொண்டுள்ளது: அ) எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் பரீட்சை, மற்றும் ஆ) தொழில் ஆர்வத் தேர்வு. எழுத்தறிவு மற்றும் எண்ணறிவுத் தேர்வு முறையான மதிப்பீட்டின் மூலம் பரிசோதிக்கப்படும், அதே நேரத்தில் தொழில் ஆர்வத் தேர்வு தேவைப்பட்டால் நேரடி விருப்பத்துடன் நிகழ்நிலை மூலம் வசதியளிக்கப்படும்.

### ☛ கற்றலை வெளிப்படுத்த மாணவர் செயலாற்றுகையை அறிக்கையிடல்

கல்வியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் மாணவர்களின் கற்றலை வெளிப்படுத்த, செல்லுபடியாகும் மற்றும் நம்பகமான முறையில் மாணவர் செயல்திறனைப் அறிக்கையிடுவது மாணவர்களுக்கும் அமைப்புக்கும் முக்கியமானது. இத்தகைய விரிவான அறிக்கையிடல் அமைப்பு கல்வி முறையின் தரத்தை வெளிப்படுத்துவது மட்டுமல்லாமல், முடிவெடுப்பதற்கும் அமைப்பின் குறைபாடுகளை மதிப்பிடுவதற்கும் உதவுகிறது. இந்தச் சூழலில்தான், ஒரு மாணவர் என்ன கற்றுக்கொண்டார், கற்றலின் அளவைக் காட்டும் விரிவான, அர்த்தமுள்ள, செல்லுபடியாகும் மற்றும் நம்பகமான அறிக்கையிடல் அமைப்பின் விருத்தி, மாற்றத்தின் முக்கிய அங்கமாக முன்வைக்கப்படுகிறது.

முன்னர் குறிப்பிட்டது போல, மாணவர்களின் செயல்திறனை மதிப்பிடுவதற்கு, அமைப்பு மற்றும் கூட்டு மதிப்பீடுகளின் கலவை பயன்படுத்தப்படும். 70% அளவு, அமைப்பு மதிப்பீட்டிற்கும், மீதமுள்ளவை (30%) அலகு-இறுதி கூட்டு மதிப்பீட்டிற்கும் ஒதுக்கப்படும்.

முன்மொழியப்பட்ட நிலைமாற்றத்தின் ஒரு குறிப்பிடத்தக்க அம்சம் என்னவென்றால், ஒவ்வொரு மொடியுல் மற்றும் பாடத்திற்கும் மாணவர் முன்னேற்றம் ஒரு தரப் புள்ளி மதிப்பாக (GPV) அறிவிக்கப்படும், இது மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்கள் சாதனைகளைக் கண்காணிக்கவும், ஏதேனும் கற்றல் இடைவெளிகளை உடனடியாக நிவர்த்தி செய்யவும் அனுமதிக்கிறது. ஒவ்வொரு

பாடத்திற்கும் தரப் புள்ளி சராசரி (GPA) பாடத்தில் ஒவ்வொரு மொடியுலுக்கும் பெறப்பட்ட தரப் புள்ளி மதிப்பின் (GPV) அடிப்படையில் கணக்கிடப்படும், மேலும் அனைத்து பாடங்களிலும் எடையிடப்பட்ட சராசரி மாணவரின் ஒட்டுமொத்த GPA ஆக இருக்கும்.

#### ☛ கலப்புக் கற்றல்

முன்மொழியப்பட்ட மறுசீரமைப்புக்கள், முடிந்த போதெல்லாம், கற்பித்தல் மற்றும் கற்றலுக்கான பாரம்பரிய வகுப்பறை அமைப்புடன் நிகழ்நிலைத் தளங்களைப் பயன்படுத்துவதை ஊக்குவிக்கின்றன. இணைய இணைப்பு இன்னும் ஒரு பிரச்சனையாக இருக்கும் இலங்கை சூழலில், ஆரம்பத்தில், சமூக பொருளாதார பின்னணி மற்றும் வளங்களுக்கான அணுகலைப் பொருட்படுத்தாமல், ஒவ்வொரு மாணவரும் சிறந்த, மிகவும் நடைமுறைக்குரிய மற்றும் உள்ளடக்கிய முறையில் கற்றல் அனுபவத்தைப் பெறும் வகையில் கற்பித்தல் செயல்முறை திட்டமிடப்பட வேண்டும். முழு நாட்டிற்கும் இணைய வசதிகளுக்கான அணுகலை விரிவுபடுத்துவதன் மூலம் நிகழ்நிலை வளங்களின் படிப்படியான அதிகரிப்பை எளிதாக்க அரசாங்கம் நடவடிக்கை எடுக்கும்.

#### ☛ மாணவர்கள் தங்கள் மேலதிக கல்விப் பாதைகளைத் தெரிவு ச்செய்ய வழிகாட்டும் சிறப்பு கற்றல் அலகுகள் (கல்வி அல்லது திறன் பாதைகள்)

மாணவர்கள் தங்கள் திறன்கள் மற்றும் ஆர்வங்களைப் பற்றிய தெளிவான புரிதலுடன் தங்கள் மேலும் கற்றல் பாதைகளைத் தெரிவு செய்யும் போது மனித மூலதன மேம்பாட்டு செயல்முறை திறமையாகவும் பயனுள்ளதாகவும் மாறும். எனவே, மாணவர்கள் தங்கள் மேலும் கற்றல் பாதைகளைத் தேர்ந்தெடுக்க உதவும் வகையில் ஆரம்ப ஆண்டுகளிலிருந்தே சிறப்பு கற்றல் அலகுகள் அறிமுகப்படுத்தப்படுகின்றன. இந்த சிறப்பு கற்றல் அலகுகள், மாணவர்கள் தாங்கள் அதிக திறன் கொண்ட அல்லது ஆர்வமுள்ள குறிப்பிட்ட பாடங்களில் மேலும் பயிற்சி பெற உதவுகின்றன, அதே நேரத்தில் கலைத்திட்டத்தில் வழங்கப்படும் பிற அத்தியாவசிய பாடங்களுக்கு அவர்களிடமிருந்து எதிர்பார்க்கப்படும் அத்தியாவசிய உள்ளடக்கத்தைக் கற்றுக்கொள்கின்றன. கனிஷ்ட இடைநிலையில், புதிய கலைத்திடம், ஒரு குறிப்பிட்ட பாடத்தில் சிறப்புத் திறனையோ அல்லது சிறப்பு ஆர்வத்தையோ வெளிப்படுத்தும் மாணவர்களுக்கு, பாடசாலைத் தவணையின் பருவத்தின் இறுதியில் கூடுதல் கற்றலாக சிறப்புப் பிரிவுகளை வழங்குகிறது.

#### ☛ பிராந்திய தேவைகள் மற்றும் சிறப்புத் தேவைகளை நிவர்த்தி செய்யும் தொழில்நுட்ப தொகுதிகள்

நாட்டின் பல்வேறு மாகாணங்களுக்கு (உ+ம். இரத்தினபுரி மாவட்டத்தின் இரத்தினக் கல்வித் தொழில்) குறிப்பிட்ட சிறப்பு அறிவு மற்றும் திறன்களை பொதுக் கல்வி கலைத்திட்டத் தை உள்ளடக்குவது கட்டாயமாகும். அவ்வாறு செய்வது மாணவர்களை வேலை உலகிற்குத் தயார்படுத்துவதோடு, நாடு முழுவதும் பரவியுள்ள பிராந்திய வளங்கள் மற்றும் நிபுணத்துவப் பகுதிகளைப் பயன்படுத்திக் கொண்டு நாட்டின் பொருளாதார அபிவிருத்தியை அதிகரிக்கும்.

#### ☛ புத்தாக்க ஆய்வுகூடங்களை அறிமுகம் செய்தல்

STEM/STEAM தொடர்பான கல்வியின் நடைமுறை அம்சங்களில் மாணவர்கள் நேரடி அனுபவத்தைப் பெறுவதற்காக புத்தாக்க ஆய்வுகூடங்கள் நிர்மாணிக்கப்படும். எதிர்கால கண்டுபிடிப்பாளர்கள் ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கங்களில் ஈடுபடுவதில் தங்கள் ஆரம்ப அனுபவத்தைப் பெறும் உந்துதலாக இவை இருக்க வேண்டும்.

#### ☛ ஆரம்பக் கல்விக்கு மாறுவதற்கான ஒரு வழியாக முன் பிள்ளைப் பருவக் கல்வியை வலுப்படுத்துதல்

பொதுக் கல்வியின் சிறந்த விளைவுகளை அடைய, வீட்டுச் சூழலில் இருந்து முறையான பாடசாலைக் கல்விக்கு ஒரு பிள்ளை சீராக மாறுவதை உறுதி செய்வது அவசியம். இந்த வகையில், பிள்ளைகாளின் சமூக மற்றும் மனவெழுச்சித் திறன்களை விருத்தி செய்வதற்கு ஒரு பயனுள்ள முன்பிள்ளைப் பருவக் கல்வி (ECE) முறைமை நிறுவுவது முன்மொழியப்பட்ட கல்வி மாற்றத்தில் ஒரு முக்கிய அங்கமாக இருக்கும்.

### 2.1.6 கல்விப் பருவங்கள்

அட்டவணை 2.1 இலங்கை பொதுக் கல்வி முறைமைக்கு முன்மொழியப்பட்ட கல்வியின் ஐந்து பருவங்களை முன்வைக்கிறது.

**அட்டவணை 0.1 பொதுக் கல்வியின் பருவங்கள்**

| பருவம் | காலம் | நோக்கம் | தரங்கள் | ISCED |
|---|---|---|---|---|
| முன் பிள்ளைப் பருவக் கல்வி | | வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான அடித்தளம் | - | 0 |
| ஆரம்பக் கல்வி | 5 வருடங்கள் | அடிப்படை வாழ்க்கைத் திறன்களுக்கான கல்வி | 1-5 | 1 |
| கனிஷ்ட இடைநிலைக் கல்வி | 4 வருடங்கள் | வாழ்க்கைக்கான அடித்தளம் | 6-9 | 2 |
| சிரேஷ்ட இடைநிலைக் கல்வி - கட்டம் 1 | 2 வருடங்கள் | தொழில் தயார் நிலைக்கான அடித்தளம் | 10-11 | 3 |
| சிரேஷ்ட இடைநிலைக் கல்வி - கட்டம் 2 | 2 வருடங்கள் | கல்வி மற்றும் தொழில் வாழ்க்கைக்கான அடித்தளம் | 12-13 | 3 |

### 2.1.7 முன் பிள்ளைப் பருவக் கல்வி

**நோக்கம்: வாழ்நாள் முழுவதும் கற்றலுக்கான அடித்தளம்**

ஒரு நாட்டின் கல்வி முறைமையில் முன்பிள்ளைப் பருவக் கல்வி (ECE) மிக முக்கியமான கல்விக் கட்டமொன்றாகும்.. இலங்கையில், 1978 அரசியலமைப்பின் 13வது திருத்தத்தின் கீழ், முன் பிள்ளைப் பருவக் கல்வி (ECE) ஒரு பரவலாக்கம் செய்யப்பட்ட விடயமொன்றாகும். எனவே, ECE இன் பொறுப்பானது மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் அந்தந்த மாகாண அமைச்சுக்களிடையே பகிரப்படுகின்றன. எனவே, இந்த நிறுவனங்கள் அனைத்தும் இலங்கையில் முன்பிள்ளைப் பருவக் கல்வியை ஒழுங்குபடுத்துவதற்கு இணைந்து செயல்படுகின்றன, அதே நேரத்தில் தேசிய கல்வி நிறுவகம்ம் அதற்கான தேசிய கலைத்திட்ட சட்டகத்தை உருவாக்குவதன் மூலம் ECE க்கான தர நியமங்களை அமைப்பதற்கு பொறுப்பாக செயற்படுகின்றது.

### 2.1.8 ஆரம்பக் கல்வி (தரம் 1 – 5)

**நோக்கம்: அடிப்படை வாழ்க்கைத் திறன்களுக்கான கல்வி**

Sஇலங்கையின் ஆரம்பக் கல்வி (PE) செயல்முறை, நிலைபேறுடன் கூடிய அபிவிருத்தி இலக்குகளின் இலக்கு 4.1 ஐ அடைவதற்கான நாட்டின் உறுதிப்பாட்டை நிரூபிக்கிறது: "அனைவருக்கும் தரமான ஆரம்ப மற்றும் இடைநிலைக் கல்வியை உறுதி செய்தல்". முறையான பாடசாலைக் கல்வி முறைமையினூடாக வழங்கப்படும் ஆரம்பக் கல்விக் கலைத்திட்டமானது, தரம் ஒன்றிலிருந்து ஆரம்பித்து ஐந்து ஆண்டுகள் தொடரும், உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறுவர் விருத்தி நடைமுறைகளின் அடிப்படையில், 1999 முதல் தொடரும் மூன்று நிலைகளைக் கொண்ட முதன்மை நிலை கட்டமைப்பைத் தக்க வைத்துக் கொள்கிறது.

முதன்மை நிலை 1 – தரம் 1 மற்றும் 2
முதன்மை நிலை 2 – தரம் 3 மற்றும் 4
முதன்மை நிலை 3 – தரம் 5

இலங்கையின் ஆரம்பக் கல்வியில் உயர் நிறைவு விகிதங்கள் வெளிக்காட்டப்பட்டுள்ளன, ஏனெனில் மொத்த ஆரம்பக் கல்விக்கு நுழைவுக் குழுவும் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக இடைநிலைக் கல்வியைத் தொடர்ந்துள்ளது. இந்த வலுவான நிலைப்பாட்டைக் கட்டியெழுப்புவதற்காக ஆரம்பக் கல்வி முறைமையானது இடைநிலைக் கல்வியைத் தொடரத் தேவையான அடிப்படைத் திறன்களை வழங்குவதை உறுதி செய்ய வேண்டும்.. இக்

காலப்பகுதியிலேயெ, எதிர்காலத்தின் நிச்சயமற்ற தன்மைகள் மற்றும் சிக்கல்களை எதிர்கொள்ளத் தேவையான அடிப்படைத் திறன்களில் உறுதியான அடித்தளத்துடன் மாணவர்கள் வலுப்படுத்தப்படுகின்றனர்..

etc. "அடிப்படை வாழ்க்கைத் திறன்களுக்கான கல்வி" என்பது புதிய கல்வி மறுசீரமைப்பின் கீழ் ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவமாகும். PE கட்டத்தில், மாணவர்கள் எழுத்தறிவு, எண் அறிவு, தொடர்பாடல், அடிப்படை விஞ்ஞானம் மற்றும் சுற்றாடல் சார் விழிப்புணர்வு மற்றும் திறன்கள், வாழ்க்கை இரசணை, அழகியல் திறன்கள் மூலம் படைப்பாற்றல், சமயம் மற்றும் விழுமியக் கல்வி, சுகாதாரம், போஷாக்கு மற்றும் உடல் பயிற்சி, அடிப்படை வாழ்க்கைத் திறன்கள், நிதிசார் அறிவின் அடிப்படைகள் போன்ற பல்வேறு துறைகளில் வெளிப்படுகிறார்கள்.

புதிய மறுசீரமைப்புக்கள் கலைத்திட்டத்தில் சிக்கல் தீர்க்கும் கற்பித்தல் அணுகுமுறையில் வழங்கும், இது விளைவு மற்றும் செயல்பாடு சார்ந்தது. 1998 மற்றும் 2007 கலைத்திட்ட மறுசீரமைப்புக்களின் கீழ் ஊக்குவிக்கப்பட்ட, பரிந்துரைக்கப்பட்ட மற்றும் தொடரப்பட்ட "அதிக செயல்பாடுகள் மற்றும் குறைவான மேசை வேலை" என்ற கருத்து வரவிருக்கும் கலைத்திட்டத்தூடாக கட்டாயம் செயற்படுத்தப்படும். பாடப்புத்தகங்களுக்குப் பதிலாக செயற்பாட்டு அடிப்படையிலான ஒருங்கிணைந்த கலைத்திட்டம் பயன்படுத்தப்படும்.

ஆரம்பக் கல்விப் பருவம் நிறைவடைந்ததும், மாணவர் பின்வருவனவற்றை விருத்தி செய்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

- அவர்களின் அண்மித்த வீட்டு சமூகத்தைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் புரிதல், தேசிய மற்றும் உலகளாவிய சூழல்கள் மற்றும் அவர்கள் எதிர்கொள்ளும் முறையான சவால்களைப் புரிந்துகொள்ள படிப்படியாக வழிவகுக்கிறது.
- கலாச்சார, சமூக, பௌதீகவியல், உயிரியல், சுற்றாடல், சூழலியல் மற்றும் புவியியல் பன்முகத்தன்மையைப் புரிந்துகொள்ளல்.
- மாணவரை வாழ்க்கைக்குத் தயார்படுத்தத் தேவையான எழுத்தறிவு, எண் அறிவு மற்றும் சமூக, கலாச்சார மற்றும் உணர்ச்சித் திறன்கள்.
- ஆரோக்கியமான வாழ்க்கை முறை, குணாம்சம் மற்றும் குடியுரிமை தொடர்பான அடிப்படை வாழ்க்கைத் திறன்களைப் புரிந்துகொள்ளல், மேலும் 21 ஆம் நூற்றாண்டுக்குத் தயாராக இருக்கும் பிரஜையை உருவாக்க உதவும் நிதிசார் அறிவின் அடிப்படைகளைப் புரிந்துகொள்ளல்.
- ஒத்துணர்வு மற்றும் பிற சமூக-மனவெழுச்சுசார் திறன்கள் மற்றும் பலதரப்பட்ட நுண்ணறிவுகளால் வளப்படுத்தப்பட்ட சமநிலையான ஆளுமைக்கான அடித்தளம்.

**ஆரம்பக் கல்வியில் வழங்கப்பட்டுள்ள கற்றல் துறைகள்**

1. தாய் மொழி
2. ஆங்கில மொழி
3. இரண்டாம் தேசிய மொழி
4. கணிதம்
5. அடிப்படை விஞ்ஞானம் மற்றும் சுற்றாடல் சார் செயற்பாடுகள்
6. சமயம் மற்றும் விழுமியக் கல்வி
7. அழகியல் கல்வி
8. சுகாதாரம் மற்றும் உடற் கல்வி
9. இணைப் பாடவிதான செயற்பாடுகள்

### நேர ஒதுக்கீடு

ஆரம்பக் கல்விப் பருவத்தில் பல்வேறு கற்றல் துறைகளுக்கான வாராந்த நேர ஒதுக்கீடுகள் அட்டவணை 2.2 இல் தரப்பட்டுள்ளது.

**அட்டவணை 0.2 ஆரம்பக் கல்விப் பருவத்தின் கற்றல் துறைகளுக்காக நேர ஒதுக்கீடு (தரம் 1-5)**

**(உத்தேச)**

| **கற்றல் துறைகள்** | **ஒரு வாரத்திற்கான நேரம் (மணித்தியாலங்கள்)** | | |
|---|---|---|---|
| | **முதன்மைப் பருவம் 1** | **முதன்மைப் பருவம் 2** | **முதன்மைப் பருவம் 3** |
| தாய் மொழி | 5.00 | 5.00 | 5.00 |
| ஆங்கில மொழி | 0.50 | 3.00 | 3.30 |
| இரண்டாம் தேசிய மொழி | 0.30 | 1.00 | 1.00 |
| கணிதம் | 3.30 | 5.00 | 5.00 |
| சமயம் மற்றும் விழுமியக் கல்வி | 1.30 | 2.00 | 2.00 |
| அடிப்படை விஞ்ஞானம் மற்றும் சுற்றாடல் சார் செயற்பாடுகள் (ERA) | 5.00 | 5.00 | 7.00 |
| அழகியல் கல்வி | 1.00 | 1.00 | 1.00 |
| சுகாதாரம் மற்றும் உடற் கல்வி | 2.05 | 2.05 | 2.05 |
| இணைப் பாடவிதான செயற்பாடுகள், கூட்டம் மற்றும் இடைவேளை | 4.20 | 3.25 | 3.25 |
| **மொத்தம்** | **23.45** | **27.30** | **30.00** |

## 2.1.9 கனிஷ்ட இடைநிலைப் பருவம் (தரம் 6-9)

### நோக்கம்: வாழ்க்கைக்கான அடித்தளம்

கட்டாயமான கனிஷ்ட இடைநிலைக் கல்வியை நிறைவு செய்வதற்கு வழிவகுக்கும் இலங்கை கல்வி முறைமையின் கனிஷ்ட இடைநிலைக் கலைத்திட்டமானது, வாழ்க்கைக்கான அடித்தளத்தை உருவாக்கும் முக்கிய நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. நான்கு வருடங்களுக்கான கற்கையானது, வேகமாக மாறிவரும் வாழ்க்கை மற்றும் கணிக்க முடியாத எதிர்காலத்தின் சவால்களை எதிர்கொள்ள தேவையான திறன்களை கற்பவர்களுக்கு வழங்குவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பருவத்தின் பதினான்கு அத்தியாவசியப் பாடங்கள் வழங்கப்படுகின்றன. இந்தக் கட்டத்திற்கான கற்றல் அனுபவங்கள் மூன்று பிரிவுகளின் கீழ் ஒழுங்கமைக்கப்படும், அவை: அத்தியாவசியக் கற்றல், மேலதிக கற்றல் மற்றும் நிலைமாற்றுத் திறன்கள் என்பனவாகும். கலைத்திட்டம் மற்றும் அறிவுறுத்தல் சாதனங்களை உருவாக்குவதில், அத்தியாவசியக் கற்றல் என்பது ஒவ்வொரு மாணவரும் இந்தக் கட்டத்தில் கற்றுக்கொள்ள எதிர்பார்க்கப்படும் பாடத்தைக் குறிக்கிறது, அதே நேரம் மேலதிக கற்றல் என்பது ஒரு குறிப்பிட்ட பாடத்தில் மேலதிக கல்வியைத் தொடர ஆர்வமாக இருந்தால், ஒரு பாடத்தின் கீழ் அவர் கற்றுக்கொள்ள வேண்டிய மேலதிக பாடத்தைக் குறிக்கிறது. அதற்கு மேல், நிலைமாற்றுத் திறன்களை விருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட மொடியுல்கள், கற்பவர்களுக்கு அவர்களின் சமூக-மனவெழுச்சித் திறன்கள், தலைமைத்துவம், குழுக்களை ஏற்படுத்திக் கொள்ளல் மற்றும் தொடர்பாடல் திறன்களை மேம்படுத்தும் செயல்பாடுகளில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளை வழங்கும், மேலும் அவர்கள் கற்றுக்கொண்ட பாடத்தை உண்மை வாழ்க்கை சூழ்நிலைகளுக்குப் பயன்படுத்தும் திறனையும் வழங்கும்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல, இந்தப் பருவத்தில், மாணவர்கள் ஈடுபட வேண்டிய

கற்றலின் அளவைப் பிரதிபலிக்கும் ஒரு திறன் மட்ட (க்ரெடிட்) அமைப்பின் அடிப்படையில் கலைத்திட்டமானது ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது. கலைத்திட்டம் மற்றும் கற்பித்தல் சாதனங்கள் 10 மணி நேர கற்றல் அலகுகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன, அங்கு ஒவ்வொரு கற்றல் அலகும் ஒரு பாடசாலை திறன் மட்டத்திற்கு (கிரெடிட்) சமனானதாக இருக்கும். இந்தப் பாடசாலை திறன் மட்ட (க்ரெடிட்) முறைமையானது, நிலையான பாடசாலை திறன் மட்ட முறைமையுடன் ஒப்பிடப்படாவிட்டாலும், ஒரு மாணவர் எவ்வளவு கற்றலை மேற்கொள்கின்றார் என்பதைக் குறிக்கிறது, இதனால் அறிக்கையிடல் செயல்முறை அர்த்தமுள்ளதாக்கப்படுகின்றது. அதன்படி, உதாரணமாக, ஒரு மாணவரின் சுயவிவரம் ஒரு கல்வியாண்டில் (தரம்) ஒரு குறிப்பிட்ட பாடத்திற்கு 9 திறன் மட்டங்களைப் பெற்றுள்ளதாகக் கூறினால், அந்த குறிப்பிட்ட பாடத்திற்கு 90 மணித்தியாலக் கற்றலை மேற்கொண்டுள்ளார் என்பது புலனாகின்றது. ..இத்தகைய அர்த்தமுள்ள அறிக்கையிடல், மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் கல்வி முகாமையாளர்கள், உதாரணமாக, அவர்கள் வேறொரு பாடசாலையில் (உள்நாட்டிலும் வெளிநாட்டிலும்) அனுமதிக்க உத்தேசிக்கும் போது, மாணவர்களை சரியாக அனுமதி பெற்றுக் கொள்வதற்கு உதவும்.

இந்த பருவத்தில், ஒரு மாணவர் ஒரு பாடசாலைத் தவணையில் ஆகக்கூடியது 350 மணித்தியாலங்கள் கற்றலில் ஈடுபட வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இது ஒரு தவணையில் ஆகக்கூடியது 35 திறன் மட்டங்களாகும் (கிரெடிட்டுக்கள்).

### கற்றல் துறைகள்

கனிஷ்ட இடைநிலை கலைத்திட்டத்தில் பாட விநியோகம் அட்டவணை 2.3 இல் வழங்கப்பட்டுள்ளது.

**அட்டவணை 0.3 கனிஷ்ட இடைநிலைப் பருவத்திற்குரிய பாடங்கள் மற்றும் மொடியுல்கள் (தரம் 6-9)**

| அத்தியாவசியமான பாடங்கள் | திறன் மட்டம் (கிரெடிட்) | மேலதிக கற்றல் மொடியுல்கள் | நிலைமாற்றுத் திறன் மொடியுல்கள் |
|---|---|---|---|
| 1. தாய் மொழி மற்றும் இலக்கியம் (சிங்களம்/ தமிழ்) | 3 | மாணவர்கள் **மூன்று** மேலதிக கற்றல் மொடியுல்களைத் தெரிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு மொடியுலும் **ஒரு திறன் மட்டத்திற்குரியதாகும்**<br><br>மாணவரின் ஆர்வம், திறமை மற்றும் எதிர்கால விருப்பங்களைப் பொறுத்து எந்தவொரு அத்தியாவசியப் பாடத்திலும் மேலதிக கற்றல் மொடியுல்களைத் தெரிவு செய்ய முடியும் | மாணவர்கள் **இரண்டு** மொடியுல்களைத் தெரிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு மொடியுலும் ஒரு திறன் மட்டத்திற்குரியதாகும்<br><br>1. இலக்கிய இரசனை<br>2. ஊடக கல்வி (தரம் 8 முதல்)<br>3. கைத்தொழிற்துறைப் புழக்கம் *(தரம் 8 முதல்)*<br>4. சேவைத் துறைசார் கல்வி *(தரம் 8 முதல்)*<br>5. உலகளாவிய கற்கைகள்<br>6. சமூக சேவைகள்<br>7. சுகாதாரம் மற்றும் விளையாட்டு (தரம் 8 முதல்)<br>8. அழகியல் இரசனை *(தரம் 8 முதல்)* |
| 2. ஆங்கில மொழி | 3 | | |
| 3. இரண்டாம் தேசிய மொழி | 1 | | |
| 4. கணிதம் | 3 | | |
| 5. விஞ்ஞானம் | 3 | | |
| 6. சுகாதாரம் மற்றும் உடற் கல்வி | 2 | | |
| 7. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | 2 | | |
| 8. வாழ்க்கைக்கான தொழில்நுட்பம் | 2 | | |
| 9. புவியியல் | 1 | | |
| 10. வரலாறு | 2 | | |
| 11. குடியுரிமைக் கல்வி | 1 | | |
| 12. சமயம் மற்றும் விழுமியக் கல்வி* | 2 | | |

| அத்தியாவசியமான பாடங்கள் | திறன் மட்டம் (கிரெடிட் ) | மேலதிக கற்றல் மொடியுல்கள் | நிலைமாற்றுத் திறன் மொடியுல்கள் |
|---|---|---|---|
| 13. அழகியல் கல்வி<br>14. முயற்சியாண்மை மற்றும் நிதிசார் அறிவு<br>15. விளையாட்டு , நூலகம் கழகங்கள் மற்றும் சங்கங்கள் (பங்கேற்பு மாத்திரம்) | 2<br>1<br>2 | | 9. தொழில் தயார்நிலைக்கான அடிப்படை |
| **மொத்த திறன் மட்டங்கள்** | **30** | **3** | **2** |

* பின்வரும் சமயங்கள் தனித் தனியாக கற்பிக்கப்படும். பௌத்த சமயம், இந்து சமயம், கிறிஸ்தவம், இஸ்லாம். கத்தோலிக்க சமயம், சைவநெறி

### அத்தியாவசியமான பாடங்கள்

இந்தப் பிரிவில் 15 பாடங்கள் வழங்கப்படுகின்றன. இந்தப் பிரிவில் உள்ள **விளையாட்டு, நூலகம் கழகங்கள் மற்றும் சங்கங்கள்** என்ற பாடத்தில், மாணவர்கள் பங்கேற்பதன் மூலம் ஒரு தவணையில் இரண்டு திறன் மட்டங்களைப் பெற முடியும். இந்தப் பிரிவின் கீழ் ஒரு மாணவர் அடைந்துகொள்ளும் மொத்த திறன் மட்டங்களின் எண்ணிக்கை 30 ஆகும், இது 300 மணித்தியால கற்றலுக்கு சமமானதாகும்.

### மேலதிக கற்றல் மொடியுல்கள்

ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு தணையினுள் அடைந்துகொள்ள வேண்டிய அத்தியாவசிய எண்ணிக்கையிலான திறன் மட்டங்கள் இருந்தாலும், எதிர்காலத்தில் அந்தப் பாடத்தை மேலும் கற்க விரும்பும் மாணவர்களுக்கு உதவும் நோக்கில் அந்தப் பாடத்தில் மேலதிக கற்றல் மொடியுல்கள் வழங்கப்படும். மாணவர்கள் தங்கள் ஆர்வம், திறன் மற்றும் எதிர்கால அபிலாஷைகளின் அடிப்படையில் ஒரு தவணையில் ஏதேனும் மூன்று மொடியுல்களை தெரிவு செய்ய சுதந்திரம் உள்ளது. இந்த மொடியுல்கள், அவற்றைத் தெரிவு செய்யும் மாணவர்களுக்கு சம்பந்தப்பட்ட பாடத்தைப் பற்றிய சிறந்த புரிதலை வழங்குகின்றன, இதனால் படிப்படியாக அவர்கள் தெரிவு செய்த பாடங்களை மேலும் கற்றுக்கொள்ளத் தயாராகிறார்கள். மாணவர்கள் விரும்பினால், ஒவ்வொரு தவணையிலும் தாங்கள் கற்றுக்கொள்ள விரும்பும் பாடங்களை மாற்றிக்கொள்ளலாம்.

### நிலைமாற்றுத் திறன் மொடியுல்கள்

இந்தப் பிரிவின் கீழ் வழங்கப்படும் மொடியுல்கள் மாணவர்களின் விமர்சன ரீதியான சிந்தனை, தொடர்பாடல் திறன், படைப்பாற்றல், தலைமைத்துவம், சமூக மனவெழுச்சிசார் திறன்கள் மற்றும் பிற தொடர்புடைய குணாம்சங்களை மேம்படுத்த உதவுகின்றன. இந்தப் பிரிவில் இருந்து மாணவர்கள் இரண்டு திறன்மட்டங்களை மாத்திரமே பெறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுவதால், கனிஷ்ட இடைநிலையின் நிறைவில் அவர்கள் நன்கு வளர்ந்த நபர்களாக வளரும் வகையில், இந்த மொடியுல்களில் பலவற்றை தொடர்வதற்கு அவர்களுக்கு வாய்ப்பு உள்ளது.

## கணிப்பீடு மற்றும் மதிப்பீடு

### அமைப்பு மதிப்பீடு

தொகுதி அடிப்படையிலான அமைப்பு மதிப்பீடு என்பது வகுப்பறை ஆசிரியர்களால் முன்னரே தீர்மானிக்கப்பட்ட ரூப்ரிக்ஸின் அடிப்படையில் நடத்தப்படும் ஒரு செயல்முறையாகும்.

### கூட்டு மதிப்பீடு

கூட்டு மதிப்பீடானது மொடியுலினுள் தொகுதிக்குள் உட்பொதிக்கப்பட்டுள்ளதால், மாணவர்கள் பரீட்சைச் சுமையிலிருந்து விடுபடுகிறார்கள், எனவே இந்த பருவத்தில் ஒரு குறிப்பிட்ட தவணை இறுதிப் பரீட்சையை நடத்த வேண்டிய அவசியமில்லை.

### திறன் மதிப்பீடு

கனிஷ்ட இடைநிலையை நிறைவு செய்யும் மாணவர்கள் தரம் 9 நிறைவில் திறன் மதிப்பீட்டிற்கு தோற்ற வேண்டும். என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேலே கலந்துரையாடப்பட்டதன் பிரகாரம், முன்மொழியப்பட்ட திறன் மதிப்பீட்டின் நோக்கங்கள் அ) எழுத்தறிவு மற்றும் எண் திறன்கள் மற்றும் ஆ) ஒரு குறிப்பிட்ட கற்றல் துறையில் ஈடுபடுவதற்கான தொழில் ஆர்வத்தை தீர்மானிப்பதாகும். கல்வியறிவு மற்றும் எண்கணித மதிப்பீடு, மாணவர்கள் தங்கள் உயர்கல்வி மற்றும் பாடசாலைக்குப் பின்னரான வாழ்க்கையைத் தொடரத் தேவையான அடிப்படை எழுத்தறிவுத் திறன்களைப் பெற்றுள்ளார்களா என்பதைத் தீர்மானிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இதில் அவர்களின் வயதுக்கு ஏற்ற கல்வி எழுத்தறிவு, விஞ்ஞானம் சார் அறிவு, கணித அறிவு, தொடர்பாடல், விமர்சன சிந்தனை போன்றவை அடங்கும். இத்தகைய மதிப்பீடானது மாணவர்கள் கனிஷ்ட இடைநிலையிலிருந்து சிரேஷ்ட இடைநிலைக்கு தடையின்றி மாறுவதற்கு உதவும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விஞ்ஞானம், கணிதம், சமூக விஞ்ஞானம், மானுடவியல் அல்லது தொழில்நுட்ப அல்லது தொழில் திறன்கள் போன்ற ஒரு குறிப்பிட்ட கற்றல் துறையை நோக்கிய மாணவரின் போக்கு/பல போக்குகளைப் புரிந்து கொள்வதற்காக, தரம் 9 இறுதியில் மேலே குறிப்பிடப்பட்ட தொழில் ஆர்வ பரீட்சைக்கு அவர்கள் தோற்ற வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தத் பரீட்சையானது நிகழ்நிலை மற்றும் காகித அடிப்படையிலான முறைகளில் கிடைக்கும், இதனால் மாணவர்கள் தங்களுக்கு விருப்பமான முறையைத் தெரிவு செய்யலாம். இந்தத் பரீட்சையானது மாணவர்களுக்கு ஒரு உதவியாக மாத்திரமே கருதப்படும் என்பதுடன், மாணவர்களது கற்றல் பாதையை தெரிவு செய்வதற்கு இதற்கு எந்த அதிகாரமும் இல்லை.

மாணவர்கள் தங்கள் கனிஷ்ட இடைநிலைக் கல்வியை நிறைவு செய்த பின்னர், அவர்களின் எழுத்தறிவு, எண் அறிவு மற்றும் போக்கு ஆகியவற்றிற்காக மதிப்பீடு செய்யப்பட்ட பிறகு, சிரேஷ்ட இடைநிலைக் கல்விப் பருவத்திற்கு செல்வார்கள்.

## 2.1.10 சிரேஷ்ட இடைநிலைப் பருவம் (தரம் 10 முதல் 13 வரை)

பொதுக் கல்வி முறைமையின் சிரேஷ்ட இடைநிலைக் கல்விக்குரிய பருவமானது தரம் 10 முதல் தரம் 13 வரை நான்கு வருடங்களை கொண்டது. இந்த பருவத்தில், மாணவர்கள் தங்கள் விருப்பத்தேர்வுகள் மற்றும் கனிஷ்ட இடைநிலை பருவத்தில் அவர்களது செயலாற்றுகையைப் பொறுத்து மேலதிகக் கல்விக்கான விசேட பாடத்தைத் தெரிவு செய்வதற்கான வாய்ப்பைப் பெறுகிறார்கள். பாடத் துறைகளைத் தெரிவு செய்வதில் அதிக நெகிழ்வுத்தன்மையையும், மேலதிக கல்விக்கு சுமுகமான மாற்றத்தையும் உறுதி செய்வதற்காகவும், இந்த பருவமானது இரண்டு கட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது: **கட்டம் 1 மற்றும் கட்டம் 2.**

### சிரேஷ்ட இடைநிலைப் பருவம் - கட்டம் 1
### (தரம் 10 மற்றும் 11)

இந்தக் கட்டத்தின் நோக்கம், "மேலதிக கல்வி மற்றும் தொழில் தயார்நிலைக்கான அடித்தளத்தை" அமைப்பதாகும், ஏனெனில் இது மேலதிக கல்வி அல்லது தொழில் வாழ்க்கைக்கான அடித்தளமிடும் பருவமாக செயல்படுகிறது.

### கற்றல் துறைகள்

இந்த பருவத்தில் மூன்று முக்கிய கூறுகள் இருக்கும்: (i) பிரதான கலைத்திட்டம் (ii) மேலதிக கற்றல் கலைத்திட்டம், மற்றும் (iii) மொத்த கலைத்திட்டத்தில் முறையே அண்ணளவாக 50%, 40% மற்றும் 10% என வழங்கப்படும் நிலைமாற்றுத் திறன்கள்.

இந்த சிரேஷ்ட இடைநிலை பருவமானது, ஐந்து பொதுவான பிரதான பாடங்கள் மற்றும் இரண்டு விருப்பப் பாடங்களின் தரப்படுத்தப்பட்ட, தேசிய அளவிலான மதிப்பீட்டை இலக்காகக் கொண்ட G.C.E. (சா/த) பரீட்சை, தரம் 11 இன் 2வது தவணை நிறைவில் நடைபெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**பிரதான கலைத்திட்டம்**

இந்தப் பிரிவின் கீழ் மாணவர்கள் ஐந்து பாடங்களை தொடர வேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்தப் பிரிவின் கீழ் மாணவர்கள் ஒரு தவணையில் 18 திறன் மட்டங்களைப் (கிரெடிட்) பெறலாம், இது 180 மணிநேர கற்றலுக்குச் சமமானதாகும். இது ஐந்து தவணைகளிலும் இந்தப் பிரிவிலிருந்து பெறப்பட்ட மொத்த திறன் மட்டங்களின் (கிரெடிட்) எண்ணிக்கையை 90 ஆகவும் (ஒரு தவணைக்கு 18 திறன் மட்டங்கள் x 5 தவணைகள்), மொத்த கற்றல் மணித்தியாலங்களின் எண்ணிக்கையை 900 ஆகவும் (180 கற்றல் மணித்தியாலங்கள் x 5 தவணைகள்) மாற்றும்.

பிரதான கலைத்திட்டத்தின் கீழ், அட்டவணை 2.4 இன் நிரல் 1 இல் வழங்கப்பட்ட ஐந்து கட்டாயப் பாடங்களிலிருந்து மாணவர்கள் தெரிவு செய்வார்கள். மேலதிகமாக, நிரல் 3 இலிருந்து இரண்டு விருப்பப் பாடங்களை மாணவர்கள் தெரிவு செய்வார்கள்.

**அட்டவணை 0.4 சிரேஷ்ட இடைநிலைப் பருவத்திற்கான பிரதான கலைத்திட்டம் - கட்டம் 1 (தரம் 10-11)**

| கட்டாய பாடங்கள் | திறன் மட்டம் (கிரெடிட்) | ஒவ்வொன்றிலும் 2 திறன் மட்டங்கள் வீதம் தெரிவுப் பாடங்கள்<br>2 பாடங்களைத் தெரிவு செய்தல் |
|---|---|---|
| 1. தாய்மொழி மற்றும் இலக்கியம் (சிங்களம்/ தமிழ்) | 3 | 1. இரண்டாம் தேசிய மொழி (சிங்களம்/ தமிழ்)<br>2. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT)<br>3. வரலாறு |
| 2. ஆங்கில மொழி | 3 | 4. புவியியல் |
| 3. கணிதம் | 3 | 5. குடியுரிமைக் கல்வி |
| 4. விஞ்ஞானம் | 3 | 6. சுகாதாரம் மற்றும் உடற் கல்வி |
| 5. சமயம் மற்றும் விழுமியக் கல்வி | 2 | 7. கீழைத்தேய மொழிகள் (பாளி, சமஸ்கிருதம்)<br>8. வெளிநாட்டு மொழிகள் (சீனா, பிரேஞ்சு, ஜெர்மன், யப்பானிய மொழி, ரஷ்ய மொழி, கொரியா மொழி, அரபு)<br>9. இலக்கிய இரசனை (சிங்களம்/ தமிழ்/ ஆங்கிலம்/ அரபு)<br>10. தொழில்நுட்பம் (விவசாய முகாமைத்துவ தொழில்நுட்பம்/ வடிவமைப்பு மற்றும் பொறியியல் தொழில்நுட்பம்/ உணவு மற்றும் நுகர்வுத் தொழில்நுட்பம்/ வடிவமைப்பு மற்றும் கலை உற்பத்தி தொழில்நுட்பம்/ நீரியல் உயிர்மூலங்கள் தொழில்நுட்பம்/ உயிர் முறைமைகள் தொழிர்நுட்பம்)<br>11. அழகியல் கல்வி (கீழைத்தேய/ மேலைத்தேய/ கர்நாடக சங்கீதம், நடனம், பரத நாட்டியம், சித்திரம், நாடகமும் அரங்கியலும்)<br>12. முயற்சியாண்மை மற்றும் நிதிசார் அறிவு |
| **மொத்த திறன் மட்டங்கள்** | **14** | **4** |

| கட்டாய பாடங்கள் | திறன் மட்டம் (கிரெடிட்) | ஒவ்வொன்றிலும் 2 திறன் மட்டங்கள் வீதம் தெரிவுப் பாடங்கள்<br>2 பாடங்களைத் தெரிவு செய்தல் |
|---|---|---|
| (கிரெடிட்டுக்கள்) | | |

**மேலதிக கற்றல் கலைத்திட்டம் (ஒரு தவணைக்கு 14 திறன் மட்டங்கள்)**

இந்தப் பிரிவின் கீழ் பல்வேறு மொடியுல்கள் வழங்கப்படுகின்றன, மேலும் அவை இரண்டு முக்கிய பாதைகளின் கீழ் வகைப்படுத்தப்படுகின்றன: கல்வி மற்றும் திறன்கள். கல்விப் பாதை மேலும் (i) விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம், (ii) மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம், மற்றும் (iii) முகாமைத்துவம் என உப பிரிவுகளாகவும் பிரிக்கப்பட்டுள்ளது. முயற்சியாண்மை மற்றும் வணிகக் கல்வி. திறன் பாதையாந்து (i) நிர்மாணம் மற்றும் உட்கட்டமைப்பு, (ii) படைப்பாற்றல் கைத்தொழில்கள், (iii) முதன்மைத் கைத்தொழில்கள், (iv) சமூக மற்றும் சனசமூக சேவை, மற்றும் (v) உற்பத்தி மற்றும் தொழில்நுட்பம் (அட்டவணை 2.5) ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

முதல் ஐந்து தவணைகளில், மாணவர்கள் ஏழு மேலதிக கற்றல் பாடங்களை தொடரலாம் என்றும், இந்தப் பிரிவில் உள்ள பாடங்களிலிருந்து ஒரு தவணையில் 14 திறன் மட்டங்களைப் பெறுவார்கள் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது, இது ஒரு தவணைக்கு 140 கற்றல் மணித்தியாலயங்களாகும். இது ஐந்து தவணைகளில் 70 திறன் மட்டங்களை (700 கற்றல் மணித்தியாலங்கள்) மாணவர்களுக்கு வழிவகுக்கும். மாணவர்கள் தொடரும் வழங்கிய அதே பாடங்களை விருப்பப் பாடங்களாக தொடர முடியாது. திறன் மதிப்பீட்டு செயல்முறையின் ஒரு பகுதியாக, தரம் 9 இறுதியில் நடத்தப்படும் தொழில் ஆர்வ மதிப்பீட்டின் பெறுபேறுகளின் அடிப்படையில் பாடங்களைத் தெரிவு செய்வதற்கு, தொழில் வழிகாட்டல் மற்றும் ஆலோசனை நிபுணர்களால் மாணவர்கள் வழிநடத்தப்படுவார்கள். இந்தக் பருவத்தில், தரம் 12 இல் தங்களது சிறப்புப் பாடத்துறை தொடர்பில் மாணவர்கள் தகவலறிந்த முடிவை எடுக்க முடிவதை உறுதி செய்வதற்காக, மாணவர்கள் தங்கள் திறன் மற்றும் ஆர்வத்தைப் பொறுத்து பல்வேறு பாடத்துறைகளிலிருந்து பாடங்களைத் தெரிவு செய்வதற்கு ஊக்குவிக்கப்படுகிறார்கள்.

**அட்டவணை 0.5 சிரேஷ்ட இடைநிலைப் பருவம் கட்டம் 1 இற்குரிய பாடங்களுக்கான மேலதிக கற்றல் மொடியுல்கள் (தரம் 10-11)**

| பாதை | பாடத்துறை | உத்தேச பாடங்கள் | | திறன் மட்டங்கள் |
|---|---|---|---|---|
| கல்வி | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | 1. உயர் கணிதம்<br>2. உயிரியல்<br>3. இரசாயனவியல்<br>4. பௌதீகவியல்<br>5. சுகாதாரம் மற்றும் உடற் கல்வி<br>6. கணிணி விஞ்ஞானம்<br>7. தரவு விஞ்ஞானம்<br>8. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் (ICT)<br>9. விவசாய விஞ்ஞானம் | 10. வடிவமைப்பு மற்றும் பொறியியல் தொழில்நுட்பம்<br>11. உணவு மற்றும் நுகர்வுத் தொழில்நுட்பம்<br>12. வடிவமைப்பு மற்றும் கலை உற்பத்தி தொழில்நுட்பம்<br>13. நீரியல் விஞ்ஞானம்<br>14. உயிர் பொறியியல் தொழில்நுட்பம் | ஒவ்வொரு மொடியுலுக்கும் 2 திறன் மட்டங்கள் வீதம் |

| பாதை | பாடத்துறை | உத்தேச பாடங்கள் | | திறன் மட்டங்கள் |
|---|---|---|---|---|
| | | | 15. விமானத் துறைக்கல்வி | |
| | மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் | 1. மொழி மற்றும் இலக்கியம்<br>2. ஊடகம் மற்றும் தொடர்பாடல்<br>3. வெளிநாட்டு மொழிகள் (யப்பானிய மொழி, சீன மொழி, கொரிய மொழி, ஹிந்தி, பிரெஞ்சு, ஜெர்மன், ரஷ்யன், அரபு)<br>4. கீழைத்தேய மொழிகள் (பாளி மற்றும் சமஸ்கிருதம்)<br>5. குடியியல் கல்வி<br>6. வரலாறு<br>7. புவியியல்<br>8. பொருளியல் | 9. கணிதம்<br>10. அளவையியல் மற்றும் விஞ்ஞானக் கற்கைகள்<br>11. அழகியல் கல்வி (கீழைத்தேய சங்கீதம், மேலைத்தேய சங்கீதம், கர்நாடக சங்கீதம், நடனம் – சிங்களம், நடனம் – பரத நாட்டியம், கலை, நாடகமும் அரங்கியலும்)<br>12. திரைப்படக் கற்கைகள் | |
| | முகாமைத்துவம், முயற்சியாண்மை மற்றும் வணிகக் கல்வி | 1. கணக்கீடு<br>2. வணிகக் கல்வி<br>3. வணிக புள்ளிவிபரவியல்<br>4. பொருளியல்<br>5. முயற்சியாண்மை மற்றும் நிதிசார் அறிவு | 6. வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்<br>7. கணிதம்<br>8. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் | |
| திறன்கள் | தொழிற் கல்வி | 1. கற்புல மற்றும் கைத்தொழிற் துறைக் கலைகள்<br>2. அரங்கியல் மற்றும் ஊடக கலை<br>3. விருந்தோம்பல் மற்றும் ஆளணி சேவைகள்<br>4. சுகாதாரம் மற்றும் சமூக சேவைகள்<br>5. விவசாயம் மற்றும் நீரியல் வளங்கள்<br>6. உலோகம் மற்றும் ஒளி பொறியியல் | 7. ஜவுளி மற்றும் ஆடைகள் கல்வி<br>8. மின் மற்றும் இலத்திரனியல் கல்வி<br>9. நிர்மானம் மற்றும் கட்டட சேவைகள்<br>10. ஏற்பாட்டியல் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்<br>11. இயந்திரவியல் கல்வி<br>12. டிஜிட்டல் மற்றும் நிறுவன திறன்கள் | |

**நிலைமாற்றுத் திறன்கள் (ஒரு தவணைக்கு 3 திறன் மட்டங்கள்)**

இந்தப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள மொடியுல்கள், மாணவர்களின் ஒட்டுமொத்த விருத்தியை உறுதி செய்வதையும், வேலைவாய்ப்பு மற்றும் வாழ்க்கைக்குத் தேவையான திறன்களைப் பெறக்கூடிய வளமான அடித்தளத்தை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளன. இந்தப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ள மொடியுல்கள் கனிஷ்ட இடைநிலையிலிருந்து தொடர்வதால், பாடசாலைக் காலத்தில் நிறைவான கற்றல் அனுபவத்தைப் பெறுவதற்காக, மாணவர்கள் இந்தப் பிரிவில் இருந்து முடிந்தவரை பல மொடியுல்களை முயற்சிக்க வாய்ப்பு கிடைக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. அட்டவணை 2.6 நிலைமாற்று மொடியுல்களை வழங்குகிறது.

**அட்டவணை 0.6 சிரேஷ்ட இடைநிலைப் பருவம் – கட்டம் 1 இற்கான நிலைமாற்றுத் திறன்கள் (தரம் 10-11)**

| **மொடியுல்கள்**<br>(விளையாட்டு, நூலகம், கழகங்கள் மற்றும் சங்கங்கள் உட்பட 3 மொடியுல்களைத் தெரிவு செய்யவும்.) | | **திறன் மட்டம் (கிரெடிட்)** |
|---|---|---|
| 1. ஊடக கல்வி<br>2. கைத்தொழிற்துறைப் புழக்கம்<br>3. சேவைத் துறைகள் கற்கை<br>4. உலகளாவிய கல்வி<br>5. சமூக சேவைகள்<br>6. சுகாதாரம் மற்றும் விளையாட்டு | 7. அழகியல் இரசனை<br>8. திரைப்பட இரசனை<br>9. தொழில் தயார் நிலைக்கான அடிப்படை<br>10. டிஜிட்டல் குடியுரிமை<br>11. விளையாட்டு,நூலகம் கழகங்கள் மற்றும் சங்கங்கள் * | ஒரு மொடியுலுக்கு 1 திறன் மட்டம் வீதம் |

*கட்டாய மொடியுல்

**அட்டவணை 0.7** சிரேஷ்ட இடைநிலைக் பருவத்தில் மேலதிக கற்றல் மொடியுல்களை தெரிவுசெய்வதற்கான நிபந்தனைகள் - கட்டம் 1 (தரம் 10 - 11)

| **கட்டாயமான 14 திறன்மட்டங்கள்** | **தெரிவுக்குரிய 4 திறன் மட்டங்கள்** | **மேலதிக கற்றலுக்குரிய மொடியுல்கள் 14 திறன் மட்டங்கள்** | **நிலைமாற்றுத் திறன் மொடியுல்கள் 3 திறன் மட்டங்கள்** |
|---|---|---|---|
| 5 பாடங்கள் | தெரிவுப் பாடங்களுள் இரண்டு பாடங்கள் | **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பாடத்துறை**<br>1. பாடத்துறையிலிருந்து அதிகபட்சம் நான்கு<br>2. மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பாடத்துறையிலிருந்து அழகியல் கல்வி மற்றும் வரலாறு*<br>3. தொழிற் கல்விப் பாடத்துறையிலிருந்து ஒரு பாடம்<br>**மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பாடத்துறை**<br>1. பாடத்துறையிலிருந்து அதிகபட்சம் நான்கு | விளையாட்டு, நூலகம் கழகங்கள் மற்றும் சங்கங்களிலிருந்து ஒரு கட்டாய திறன் மட்டம் மற்றும் பிற பாடத்துறைகளிலிருந்து 2 திறன் மட்டங்கள்:<br><br>1. ஊடக கல்வி<br>2. கைத்தொழிற் துறை புழக்கம் |

| கட்டாயமான 14 திறன்மட்டங்கள் | தெரிவுக்குரிய 4 திறன் மட்டங்கள் | மேலதிக கற்றலுக்குரிய மொடியுல்கள் 14 திறன் மட்டங்கள் | நிலைமாற்றுத் திறன் மொடியுல்கள் 3 திறன் மட்டங்கள் |
|---|---|---|---|
| | | 2. **விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்ப பாடத்துறை**யிலிருந்து தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் தொழில்நுட்பம் **<br>3. தொழிற் கல்விப் பாடத்துறையிலிருந்து ஒரு பாடம்<br><br>**முகாமைத்துவம் மற்றும் வணிகக் கல்வி பாடத்துறை**<br>1. பாடத்துறையிலிருந்து அதிகபட்சம் நான்கு<br>2. மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானப் பாடத்துறையிலிருந்து அழகியல் கல்வி மற்றும் வரலாறு *<br>3. தொழிற் கல்விப் பாடத்துறையிலிருந்து ஒரு பாடம்<br><br>**தொழிற் கல்விப் பாடத்துறை**<br>1. பாடத்துறையிலிருந்து அதிகபட்சம் நான்கு<br>2. மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானத் துறையில் அழகியல் கல்வி மற்றும் வரலாறு *<br>3. விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பப் பாடத்துறையில் இருந்து ICT அல்லது தொழில்நுட்பம் ** | 3. சேவைத் துறைக் கல்வி<br>4. உலகளாவிய கல்வி<br>5. சமூக சேவைகள்<br>6. சுகாதாரம் மற்றும் விளையாட்டு<br>7. அழகியல் இரசனை<br>8. திரைப்பட இரசனை<br>9. தொழில் தயார் நிலைக்கான அடிப்படை<br>10. டிஜிட்டல் குடியுரிமை<br>11. விளையாட்டு, நூலகம் கழகங்கள் மற்றும் சங்கங்கள் |

* ஒரு மாணவர் அழகியல் கல்வி அல்லது வரலாற்றை விருப்பப் பாடங்களாகத் தெரிவு செய்தால், அவர் மேலதிக கற்றல் மொடியுல்களிலிருந்து அழகியல் கல்வி அல்லது வரலாற்றைத் தெரிவு செய்தலாகாது. அவர்கள் மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பாடங்களின் பட்டியலிலிருந்து வேறு எந்த மொடியுல்களையேனும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

** ஒரு மாணவர் தொழில்நுட்பம்/ICT பாடத்தை விருப்பப் பாடமாகத் தேர்ந்தெடுத்திருந்தால், அவர் மேலதிக கற்றல் மொடியுல்களிலிருந்து தொழில்நுட்பம்/ICT பாடத்தைத் தேர்ந்தெடுக்கக் கூடாது. மேலதிக கற்றல் மொடியுல்களின் பட்டியலிலிருந்து வேறு எந்தப் மொடியுல்களையேனும் தேர்ந்தெடுக்க வேண்டும்.

**அட்டவணை 0.8 சிரேஷ்ட இடைநிலை பருவம் - கட்டம் 1 (தரம் 10 - 11) க்கான கலைத்திட்டத்தின் அடிப்படையில் மேலதிக கற்றல் மொடியுல்களை தேர்ந்தெடுப்பதற்கான முறை.**

| மாணவர்களின் முதன்மைப் பாடத்துறை | விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் | மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் | தொழிற் கல்வி |
|---|---|---|---|---|
| விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் | 4 | 2 | 0 | 1 |
| மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் | 2 | 4 | 0 | 1 |

| | | | | |
|---|---|---|---|---|
| மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் | 0 | 2 | 4 | 1 |
| தொழிற் கல்வி | 0 | 2 | 1 | 4 |

## சிரேஷ்ட இடைநிலைப் பருவம் - கட்டம் 2
## (தரம் 12 மற்றும் 13)

**நோக்கம்: கல்வி மற்றும் தொழில் வாழ்க்கைக்கான அடித்தளம்**

உயர்தரப் பரீட்சைக்கு தாங்கள் தொடர விரும்பும் விசேட துறை தொடர்பான உறுதியான புரிதலுடன், சிரேஷ்ட இடைநிலைப் பருவத்தின் கட்டம் 1 ஐ நிறைவு செய்யும் மாணவர்கள், தரம் 12 இல் வகுப்பில் நுழைகிறார்கள், இது பாடசாலைக் கல்வியின் உச்சக்கட்டமாகும். ஒவ்வொரு பாடத்துறைகளுக்குமுரிய பாடங்கள் அட்டவணை 2.9 இல் வழங்கப்பட்டுள்ளன. இருப்பினும், எதிர்காலத்தில் நிகழவிருக்கும் உயர்கல்வி மறுசீரமைப்புக்களைக் கருத்தில் கொண்டு, பாடங்கள், பாட சேர்க்கைகள் மற்றும் பிற விவரங்கள் இன்னும் நிறைவு செய்யப்படாமல் உள்ளன என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**அட்டவணை 0.9 சிரேஷ்ட இடைநிலைப் பருவம் – கட்டம் 2 இற்கான உத்தேச பாடங்கள் (தரம் 12 மற்றும் 13)**

| **வழி** | **துறை** | **உத்தேச பாடங்கள்** |
|---|---|---|
| கல்விசார் | விஞ்ஞானம் | 1 பிரயோக கணிதம்<br>2 தூய கணிதம்<br>3 உயிரியல்<br>4 இரசாயனவியல்<br>5 பௌதீகவியல்<br>6 கணிணி விஞ்ஞானம்<br>7 தரவு விஞ்ஞானம்<br>8 விவசாய விஞ்ஞானம்<br>9 நீரியல் விஞ்ஞானம் |
| | தொழில்நுட்பம் | 1 பொறியியல் தொழில்நுட்பம்<br>2 தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம்<br>3 உயிர் பொறியியல் தொழில்நுட்பம்<br>4 உணவு மற்றும் நுகர்வோர் தொழில்நுட்பம்<br>5 கலைசார் உற்பத்தி தொழில்நுட்பம் |
| | முகாமைத்துவம், முயற்சியாண்மை மற்றும் வணிகக் கல்வி | 1 பொருளியல்<br>2 கணக்கீடு<br>3 வணிகக் கல்வி<br>4 வணிகப் பொருளியல்<br>5 முயற்சியாண்மை மற்றும் நிதிசார் அறிவு<br>6 கணிதம்<br>7 வழங்கல் சங்கிலி முகாமைத்துவம் |
| | மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம் | 1. மொழி மற்றும் இலக்கியம்<br>2. வெளிநாட்டு மொழிகள் (யப்பான், சீனா, கொரியா, ஹிந்தி, பிரெஞ்சு, ஜேர்மன், ரஷ்யன் மற்றும் அரபு ஆகிய மொழிகள்) |

| | | |
|---|---|---|
| | | 3. கீழைத்தேய மொழிகள் (பாளி மற்றும் சமஸ்கிருதம்)<br>4. ஊடக கல்வி மற்றும் தொடர்பாடல்<br>5. பௌத்த சமயம்<br>6. பௌத்த நாகரீகம்<br>7. இந்து சமயம்<br>8. இந்து நாகரீகம்<br>9. கிறிஸ்தவ சமயம்<br>10. கிறிஸ்தவ நாகரீகம்<br>11. இஸ்லாம்<br>12. இஸ்லாமிய நாகரீகம்<br>13. அரசியல் விஞ்ஞானம்<br>14. வரலாறு<br>15. புவியியல்<br>16. பொருளியல்<br>17. கணிதம்<br>18. சமூகவியல்<br>19. அளவையியல் மற்றும் விஞ்ஞானக் கற்கை<br>20. கீழைத்தேய சங்கீதம்<br>21. மேலைத்தேய சங்கீதம்<br>22. கர்நாடக சங்கீதம்<br>23. நடனம் (சிங்களம்)<br>24. நடனம் (பரத நாட்டியம்)<br>25. சித்திரம்<br>26. நாடகமும் அரங்கியலும்<br>27. திரைப்படக் கற்கைகள்<br>28. தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பம் |
| திறன்கள் | தொழிற் கல்வி | 1. கற்புல மற்றும் கைத்தொழிற்றுறைக் கலைகள்<br>2. அரங்க மற்றும் ஊடக கலை<br>3. விருந்தோம்பல் மற்றும் ஆளணி சேவைகள்<br>4. சுகாதாரம் மற்றும் சமூக வேலைகள்<br>5. விவசாயம் மற்றும் நீரியல் வளங்கள்<br>6. உலோகம் மற்றும் ஒளிப் பொறியியல்<br>7. ஜவுளி மற்றும் ஆடைகள் கல்வி<br>8. மின் மற்றும் இலத்திரனியல் கல்வி<br>9. நிர்மாணம் மற்றும் கட்டட<br>10. ஏற்பாட்டியல் மற்றும் வழங்கல் சங்கிலி முகாமைத்துவம்<br>11. இயந்திரவியல் கல்வி<br>12. டிஜிட்டல் மற்றும் நிறுவனத் திறன்கள் |

பின்வரும் அளவுகோல்களின் அடிப்படையில் பாடங்கள் தெரிவு செய்யப்படும்.

**சிறப்புத் தேர்ச்சி**

இந்தப் பிரிவின் கீழ் வழங்கப்படும் பாடங்களிலிருந்து மாணவர்கள் மூன்று பாடங்களைத் தெரிவு செய்வார்கள்.

ஒவ்வொரு பாடத்திற்கும் ஒரு தவணைக்கு 90 மணிநேரம் ஒதுக்கப்படும், இதன் மூலம் இரண்டு ஆண்டுகளுக்கு 540 மணிநேர கற்றல்

இடம்பெறும் (ஒரு தவணைக்கு ஒரு பாடத்திற்கு 90 மணிநேரம் x 6 தவணைகள்).

தெரிவு செய்யப்பட்ட மூன்று பாடங்களுக்கான மொத்த கற்றல் நேரம் இரண்டு ஆண்டுகளில் 1620 மணிநேரமாக இருக்கும் (ஒரு பாடத்திற்கு 540 மணிநேரம் x 3 பாடங்கள்).

**வளப்படுத்தல் மொடியுல்கள்**

வளப்படுத்தல் மொடியுல்கள் என்பது தெரிவு செய்யப்பட்ட மூன்று விசேட பாடங்களைத் தவிர்த்து, மாணவர்கள் ஒரே பாடத்துறையிலிருந்து தெரிவு செய்யக்கூடிய மொடியுல்களாகும்.

சிரேஷ்ட இடைநிலை 2ம் கட்டத்தில் வழங்கப்படும் ஒவ்வொரு பாடமும் அதனுடன் ஒரு வளப்படுத்தல் மொடியுலைக் கொண்டிருக்கும்.

இந்தப் பிரிவின் கீழ் ஒரு தவணையில் 30 மணித்தியால கற்றல் நேரம் ஒதுக்கப்படும்.

**இடைநிலை மொடியுல்கள்**

மாணவர்கள் தாங்கள் தெரிவு செய்த பாடப்பிரிவிலிருந்து அல்லாமல், பிற பாடப்பிரிவுகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட எண்ணிக்கையிலான மொடியுல்களில் புழக்கத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தப் பிரிவின் கீழ் ஒரு தவணையில் 30 மணித்தியால கற்றல் நேரம் ஒதுக்கப்படும்.

**கட்டாயமான மொடியுல்கள்**

பொது ஆங்கிலம் மற்றும் பொது தகவல் தொழில்நுட்பம் (GIT) ஆகியன கட்டாய மொடியுல்களாக வழங்கப்படும்.

பொது ஆங்கிலப் பாடத்திற்கு ஒரு தவணைக்கு 20 மணித்தியாலங்கள் ஒதுக்கப்படும். GIT பாடத்திற்கு ஒரு தவணைக்கு 10 மணித்தியாலங்கள் ஒதுக்கப்படும். பொது ஆங்கிலம் மற்றும் GIT பரீட்சைகளை எழுத விரும்புவோருக்கு அப் பரீட்சைகளுக்குத் தோற்ற முடியும்.

## 2.2 மனித வள அபிவிருத்தி

இத்தகைய பணியுடன் தொடர்புடைய மனித வளங்களை விருத்தி செய்வதில் கவனமாக கவனம் செலுத்தாமல், இவ்வளவு பெரிய கல்வி நிலைமாற்றத்தை முயற்சிக்க முடியாது. எனவே, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு, இலங்கை ஆசிரியர் சேவை (SLTS), இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை (SLTES), இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS), இலங்கை அதிபர் சேவை (SLPS) மற்றும் இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை (SLTAS) ஆகிய ஐந்து கல்விச் சேவைகளையும் வலுப்படுத்துவதில் கவனம் செலுத்தும், இதனால் அவர்கள் புதிய கல்வி மறுசீரமைப்புக்களுடன் தொடர்புடைய சவால்களுக்கு பதிலளிக்க முடியும். குறிப்பாக, பின்வரும் அம்சங்களில் கவனம் செலுத்தப்படும்:

- முன்மொழியப்பட்ட புதிய மறுசீரமைப்புக்கள் குறித்து இலங்கை ஆசிரியர் சேவை (SLTS), இலங்கை ஆசிரியர் கல்வியியலாளர் சேவை (SLTES), இலங்கை கல்வி நிர்வாக சேவை (SLEAS), இலங்கை அதிபர் சேவை (SLPS) மற்றும் இலங்கை ஆசிரியர் ஆலோசகர் சேவை (SLTAS) உறுப்பினர்களுக்கு பயிற்சி அளித்தல்.
- தேசிய கல்வியியல் கல்லூரிகளின் தற்போதைய மாணவர்-ஆசிரியர்களுக்கு முன்மொழியப்பட்ட புதிய மறுசீரமைப்புக்கள் குறித்த பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.
- கல்வித் துறையின் எதிர்காலத் தேவையைப் பூர்த்தி செய்யத் தேவையான திறன்களுடன் ஆசிரியர்களை சித்தப்படுத்துவதற்கு ஆரம்ப ஆசிரியர் தகைமைகளை மேம்படுத்துதல்.
- ஆசிரியர்களின் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்யும் பயிற்சியை வழங்குவதற்காக கல்வியில் பட்டப்படிப்பு திட்டங்களின் தற்போதைய கலைத்திட்டத்தை மேம்படுத்துதல்.
- ஆசிரியர்களின் வாண்மைத்துவ வாழ்க்கைச் சுழற்சியின் ஒவ்வொரு கட்டத்தின் இயக்கவியலையும் கருத்தில் கொண்டு ஒரு விஞ்ஞான ரீதியான

ஆசிரியர் விருத்தி சட்டகத்தை விருத்தி செய்தல்.

- புதிய மறுசீரமைப்புக்களில் வழங்கப்படவுள்ள புதிய பாடங்களில் ஏற்கனவே உள்ள ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளித்தல் மற்றும் புதிய பாடங்கள் பொருத்தமான தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கு ஒதுக்கப்படுவதை உறுதி செய்தல்.

ஆசிரியர் பயிற்சி அமர்வுகள் தொடர்பான மேலதிக விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

- தரம் 1 முதல் தரம் 11 வரையிலான ஆசிரியர்களுக்கான பயிற்சி அமர்வுகள் படிமுறை மாதிரியைப் பயன்படுத்தி நடத்தப்படும், இதில் பிராந்தியங்களைச் சேர்ந்த ஆசிரியர் ஆலோசகர்கள் மற்றும் வளவாளர்கள் தேசிய கல்வி நிறுவகத்தின் மூத்த கல்வியாளர்களால் நேரடியாகப் பயிற்றுவிக்கப்படுவார்கள். இந்த கல்வியியலாளர்கள் பின்னர் அந்தந்த பிராந்திய ஆசிரியர்களுக்கான பிராந்திய பயிற்சித் திட்டங்களை நடத்துவதற்குப் பொறுப்பாவார்கள்.
- இந்தப் பயிற்சி அமர்வுகள், இந்த நோக்கத்திற்காகவே பிரத்தியேகமாக வடிவமைக்கப்பட்ட பயிற்சி கையேடுகளைப் பயன்படுத்தி குறிப்பிட்ட பாட அடிப்படையிலான பயிற்சியை வழங்குகின்றன.
- ஒவ்வொரு பயிற்சி அமர்வும் புதிய கல்வி மறுசீரமைப்புக்கள் குறித்த பொதுவான அறிமுகத்துடன் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் பாடம் சார்ந்த பயிற்சிக்குச் செல்லும்.
- பிராந்திய மட்டத்தில் பயிற்சி அமர்வுகள் நடத்தப்படும்போது, NIE-யின் கல்வியியலாளர்கள் தங்கள் நிபுணத்துவத்தை நிகழ்நிலை மூலம், பிராந்திய மட்டத்தில் கிடைக்கச் செய்யப்படும் தேசிய வள மையங்கள் மூலம் வழங்குவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
- பிராந்திய ஆசிரியர் பயிற்றுவிப்பாளர்களுக்கு நிகழ்நிலைத் தொழில்நுட்பம் மூலம் NIE இன் மூத்த பயிற்றுவிப்பாளர்களது தொடர்ச்சியான ஆதரவு வழங்கப்படும்.
- சிரேஷ்ட இரண்டாம் கட்டத்தில் (கட்டம் 2) கற்பிப்பதில் ஈடுபடும் ஆசிரியர்களின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், அவர்களுக்கு NIE நேரடியாகப் பயிற்சி அளிக்கும்.
- சிறப்புத் தேவைகள் உள்ள மாணவர்களின் கல்வி குறித்து ஆசிரியர்கள் மற்றும் பிற முக்கிய பங்குதாரர்களுக்கு பயிற்சி அளித்தல். அத்தகைய தேவைகள் உள்ள மாணவர்கள் பொருத்தமான வழிகளில் பிரதான வகுப்பறைகளில் ஒருங்கிணைக்கப்படுவதை உறுதி செய்வதற்கு இந்தப் பயிற்சி அவசியம். இதேபோன்ற சவால்களை எதிர்கொள்ளக்கூடிய ஊழியர்களை ஆதரிப்பதிலும் இந்தப் பயிற்சி முயற்சிகள் கவனம் செலுத்த வேண்டும்.

இந்த தலையீடுகள் இலங்கை அரச, தனியார் மற்றும் பிரிவேனா கல்வி முறையின் ஐந்து கல்வி சேவைகளின் அங்கத்தவர்களையும் புதிய கலைத்திட்ட மறுசீரமைப்புக்களுக்கு தயார்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.3 உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல் மற்றும் கல்வி நிர்வாக மறுசீரமைப்பு

### 2.3.1 உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தல்

கல்விக்கான அணுகலை விரிவுபடுத்துவதில் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் இருந்தபோதிலும், இலங்கையின் பொதுக் கல்வி முறை போதுமான உள்கட்டமைப்பு இல்லாமை மற்றும் காலாவதியான நிர்வாக நடைமுறைகள் தொடர்பான சவால்களை தொடர்ந்து எதிர்கொள்கிறது. பல பாடசாலைகள் போதுமான வகுப்பறைகள், ஆய்வுகூடங்கள், நூலகங்கள் மற்றும் சுகாதார வசதிகளுடன் இயங்குகின்றன, அதே நேரத்தில் சமகால டிஜிட்டல் வளங்களின் ஒருங்கிணைப்பு பிராந்தியங்களில் சீரற்றதாகவே உள்ளது. அதே நேரத்தில், நிர்வாக செயல்முறைகள் பெரும்பாலும் துண்டு துண்டாக, காகித அடிப்படையிலானவை மற்றும் கற்பவர்கள், ஆசிரியர்கள் மற்றும் சமூகங்களின் மாறும் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் மெதுவாக இருக்கும். இந்த வரம்புகள் கல்வி வழங்கலின் தரம் மற்றும் சமத்துவத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்துகின்றன, நகர்ப்புற மற்றும் கிராமப்புற பாடசாலைகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளை விரிவுபடுத்துகின்றன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு, உட்கட்டமைப்பு வசதிகளை விருத்தி செய்தக் மற்றும் நிர்வாக முறைமைகளின் மறுசீரமைப்பிற்கு முன்னுரிமை அளிக்கும் ஒரு விரிவான கொள்கைசார்ந்த பதில் தேவைப்படுகிறது, இது அதிக வினைத்திறன், வெளிப்படைத்தன்மை மற்றும் தகவமைப்புத் தன்மையை உறுதி செய்கிறது. இந்த மறுசீரமைப்புக்கள் அனைத்தும் சேர்ந்து, மிகவும் உட்படுத்தப்பட்ட, பொறுப்புணர்வு மற்றும் எதிர்காலத்திற்குத் தயாராக இருக்கும் கல்வி முறைமைக்கு அடித்தளம் அமைக்கும்.

உட்கட்டமைப்பைப் பொறுத்தவரை, கல்வி, உயர்கல்வி மற்றும் தொழிற்கல்வி அமைச்சு, அடிப்படை உட்கட்டமைப்பு (வகுப்பறைகள், சுகாதார வசதிகள் போன்றவை) மற்றும் புத்தாக்க ஆய்வுகூடங்கள், விஞ்ஞான ஆய்வுகூடங்கள், மொழியியல் கூடங்கள் போன்ற உயர்நிலை கற்றல் இடங்களை வலுப்படுத்தும்.

விசேட தேவைகளைக் கொண்ட மாணவர்களின் கல்விக்கு வசதியளிப்பதற்காக, மாணவர்கள் மற்றும் பணியாளர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய, பௌதீக அணுகலை மேம்படுத்துதல் மற்றும் பொருத்தமான உபகரணங்கள் மற்றும் பௌதீக இடங்களை வழங்குவதில் விசேட கவனம் செலுத்தப்படும்.

### 2.3.2 கல்வி நிர்வாக மறுசீரமைப்பு

கல்வி நிர்வாகத் துறையில் தற்போதைய சவால்களை எதிர்கொள்ள பின்வரும் நடவடிக்கைகள் முன்மொழியப்பட்டுள்ளன.

- ஆசிரியர் பயிற்சி செயன்முறையை நவீனமயமாக்கவும், நெறிப்படுத்தவும் ஒரு கல்விச் சபையினை நிறுவுதல்.
- சமகால தேவைகள் மற்றும் வாண்மைத்துவம் சார் நியமங்களை பிரதிபலிக்கும் வகையில் ஆசிரியர் சேவைப் பிரமாணக் குறிப்பில் திருத்தங்களை செய்தல்.
- முன்பிள்ளைப் பருவக் கல்வி (ECE) மற்றும் பொதுக் கல்வித் துறைகளுக்குப் பொறுப்பான தேசிய மற்றும் மாகாண அளவிலான நிறுவனங்களின் வகிபாகங்கள் மற்றும் பொறுப்புகளை மீளாய்வு செய்தல்.
- வெளிப்படைத்தன்மை, போட்டித்தன்மை மற்றும் தேசிய தர நியமங்கள் மற்றும் மதிப்பீடுகளுடன் இணக்கத்தை உறுதி செய்வதன் மூலம் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வு செயன்முறைகளை வலுப்படுத்துதல்.
- மனித வளங்களை உகந்த முறையில் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்காக தேசிய மற்றும் மாகாண பாடசாலைகளுக்கு இடையில் ஒரு

கட்டமைக்கப்பட்ட ஆசிரியர் இடமாற்ற பொறிமுறையை அறிமுகப்படுத்துதல்.

- தரவை முகாமை செய்வதற்கும் பயனுள்ள பரிமாற்றங்களுக்கு வசதியளிப்பதற்கும் வெளிப்படையான, டிஜிட்டல் முறைமையினால் ஆதரிக்கப்படும் தேசிய மற்றும் மாகாண அதிகாரிகளை உள்ளடக்கிய ஆசிரியர் நிலைப்படுத்தல் சபையினை நிறுவுதல்.
- அதிக கவனம் செலுத்தி தனிப்பயனாக்கப்பட்ட கற்பித்தலுக்கு வசதியளிப்பதறு, ஒரு வகுப்பறையில் மாணவர்களின் எண்ணிக்கையை அதிகபட்சமாக 35 ஆகக் கட்டுப்படுத்துவதற்காக மாணவர் எண்ணிக்கையை படிப்படியாகக் குறைத்தல்.
- ஆசிரியர்கள் பூரணப்படுத்த வேண்டிய தேவையற்ற காகித வேலைகளை நீக்குவதற்கு ஒரு தகவல் தொழில்நுட்ப திட்டத்தை செயல்படுத்துதல்.
- வகுப்பறையின் அளவு, ஒரு பாடசாலையில் வகுப்பறைகளின் எண்ணிக்கை, புவியியல் மற்றும் சமூக-பொருளாதார சூழல் போன்றவற்றின் கொள்கைகளைக் கருத்தில் கொண்டு பாடசாலை முறைமையினை நியாயமானதாக்குதல். தேவைப்பட்டால், வளங்கள், அணுகல், மக்கள் தொகை அடர்த்தி மற்றும் பிற காரணிகளின் அடிப்படையில் பாடசாலைகளை கொத்தணிகளாக்கு பாடசாலைக் கொத்தணி முறைமையை உருவாக்குவதும் இதில் உள்ளடங்கியுள்ளது.
- டிஜிட்டல் மயமாக்கப்பட்ட அமைப்பின் ஆதரவுடன் கல்வியின் அனைத்து நிலைகளிலும் ஆதாரங்களை மையமாக கொண்ட கொள்கைகள் மற்றும் செயல்படுத்தல் உத்திகளை நிறுவுதல். இந்த முறைமையானது கல்வி முறைமையில் ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டை ஊக்குவிக்கும், MoE, NIE, DoE, NEC, ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களுக்கிடையில் பங்குடைமைகளை நிறுவுகின்றது.
- சமூகக் கருத்துகளின் அடிப்படையில் செயலாற்றுகையை மேம்படுத்துவதற்காக, கல்வி நிறுவனங்களில் (பாடசாலைகள், ஆசிரியர் கல்வி நிறுவனங்கள், முதலியன) தற்போது நிலவும் அமைப்பை வலுப்படுத்துதல்.
- பால் நிலை, இயலாமை போன்றவற்றில் நிபுணர்களுடன் இணைந்து பணியாற்றுதல், இதன் மூலம் சமமான, உட்படுத்தப்பட்ட மற்றும் சூழலுக்கு ஏற்றவாறு பதிலளிக்கக்கூடிய முடிவெடுப்பதை சாத்தியமாக்குதல்.

## 2.4 கணிப்பீடு மற்றும் மதிப்பீடு

### 2.4.1 பொதுக் கோட்பாடு

இந்தப் பிரிவு, பொதுப் பரீட்சைகள், பண்புத் தர மதிப்பீடு (QA), தேசிய மதிப்பீடு போன்ற பல்வேறு கூறுகளின் அடிப்படையில், அரசாங்கப் பாடசாலைகள், தனியார் பாடசாலைகள் மற்றும் பிரிவேனாக்களுக்கு சிறப்பு கவனம் செலுத்தி, இலங்கை பாடசாலை முறைமையின் ஒட்டுமொத்த மதிப்பீட்டு செயன்முறை தொடர்பிலும் கலந்துரையாடுகின்றது

பொதுக் கல்வியில் மதிப்பீட்டு முறையை மறுசீரமைப்பதற்கான முன்மொழிவுகள்/ பரிந்துரைகளையும் இது வழங்குகிறது. இந்தப் பிரிவில், மதிப்பீடு என்ற சொல் மாணவர்களின் செயலாற்றுகை மற்றும் கற்றல் விளைவுகளை அடைவது குறித்த தீர்ப்புகளை வழங்கும் முறையான மதிப்பீட்டு செயல்முறையைக் குறிக்கிறது.

கணிப்பீடு மற்றும் மதிப்பீடு பாடசாலைக் கல்வியின் அத்தியாவசிய தூண்களாக அமைகின்றன, கற்பித்தல்-கற்றல் செயல்முறை பொறுப்புணர்வுடனும் தொடர்ச்சியான முன்னேற்றத்தை நோக்கியதாகவும் இருப்பதை உறுதி செய்கிறது. மதிப்பீடு என்பது மாணவர் கற்றல் குறித்த ஆதாரங்களை முறையாக

சேகரிப்பதைக் குறிக்கிறது, அதே நேரத்தில் மதிப்பீடு என்பது மாணவர் முன்னேற்றம், கலைத்திட்ட வினைத்திறன் மற்றும் ஒட்டுமொத்த கற்பித்தல் தரம் குறித்து தகவலறிந்த முடிவுகளை எடுக்க இந்த ஆதாரங்களை விளக்கும் செயல்முறையாகும். ஒன்றாக, அவை சான்றுகள் சார்ந்த கல்வித் திட்டமிடல் மற்றும் முடிவெடுப்பதற்கான அடித்தளத்தை வழங்குகின்றன.

### அமைப்பு மற்றும் கூட்டு மதிப்பீடுகள்

பாடசாலை முறைமையில், மதிப்பீடுகள் பரவலாக அமைப்பு மற்றும் கூட்டு என்பதாக வகைப்படுத்தப்படுகின்றன. உலகளவில், அமைப்பு மதிப்பீடுகள் பயனுள்ளதாக இருக்கும் என்பது பரவலாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது, ஏனெனில் அவை மாணவர்களின் முன்கூட்டிய ஈடுபாடின்மை மற்றும் கூட்டு மதிப்பீடு சார்ந்த பரீட்சைகளில் அதிகப்படியான தத்துவார்த்த நோக்குநிலை போன்ற சிக்கல்களைத் தொடர்ந்து கண்காணித்து நிவர்த்தி செய்ய அனுமதிக்கின்றன, அவை பெரும்பாலும் மனப்பாடம் செய்வதையே சார்ந்துள்ளது. கற்பித்தல்-கற்றல் செயல்முறைக்குள் உட்பொதிக்கப்பட்ட அமைப்பு மதிப்பீடுகள், கூட்டு கற்றல், விமர்சன ரீதியான கலந்துரையாடல் மற்றும் பெறுமதிகளின் உள்மயமாக்கலை ஊக்குவிக்கின்றன.

கல்வி அடைவுகளுக்கு மட்டுமல்லாமல், சுய பிரதிபலிப்பு, சிக்கல் தீர்க்கும் திறன் மற்றும் சுய கட்டுப்பாடு போன்ற முக்கியமான கற்பவர் பண்புகளின் விருத்திக்கு அமைப்பு மதிப்பீடு பங்களிப்புச் செய்கின்றது

இதற்கு நேர்மாறாக, கூட்டு மதிப்பீடுகள் பொதுவாக ஒரு மொடியுல், தவணை அல்லது கல்விச் சக்கரத்தின் நிறைவில் நடத்தப்படுகின்றன, பரிந்துரைக்கப்பட்ட கற்றல் விளைவுகள் எந்த அளவிற்கு அடையப்பட்டுள்ளன என்பதைத் தீர்மானிக்க. இந்த மதிப்பீடுகள் சான்றிதழ், பதவி உயர்வு மற்றும் சாதனை நிலைகளை அறிக்கையிடல் போன்ற நோக்கங்களுக்கு உதவுகின்றன.

இந்தக் கொள்கைச் சட்டகம், அமைப்பு மதிப்பீட்டின் பங்கிற்கு ஒரு குறிப்பிட்ட முக்கியத்துவத்தை அளிக்கும் அதே வேளையில், பாடசாலைக் கல்வியில் தரம், உட்படுத்தப்பட்ட தன்மை மற்றும் வினைத்திறனை உறுதி செய்வதற்கு அமைப்பு மற்றும் கூட்டு மதிப்பீடுகளின் சமநிலையான ஒருங்கிணைப்பு அவசியம் என்பதை இது அங்கீகரிக்கிறது.

### 2.4.2 தேசிய மட்ட மதிப்பீடுகள்

இரண்டு தேசிய மட்ட மதிப்பீடுகள் காணப்படும்

1. க.பொ.த சாதாரண தர (சா/த) பரீட்சை, கட்டம் 1 (தரம் 11) இன் முதல் ஐந்து தவணைகளின் நிறைவில், மாணவர்கள் ஐந்து கட்டாய பாடங்களுக்கும் இரண்டு விருப்பப் பாடங்களுக்கும் தோற்ற வேண்டும்.
2. அவர்கள் தெரிவு செய்த சிறப்புப் பாடத்தில் க.பொ.த உயர்தர (உ/த) பரீட்சை தரம் 13 இன் இறுதியில் நடைபெறும்.

### 2.4.3 பாடசாலை மட்ட கணிப்பீடு

தேசிய கல்விக் கொள்கை சட்டகத்திற்கமைய (2020-2030), தரம் 6 ஆம் முதல் மொடியுல் அளவிலான, பாடசாலை அடிப்படையிலான கணிப்பீடுகள் நடைமுறைப்படுத்தப்படும். இந்த மதிப்பீடுகள் தொடர்ச்சியானவை, அமைப்பு அடிப்படையிலானவை மற்றும் கற்றலுக்கு ஆதரவானவை ஆகும், மதிப்பீடு கல்வி அடைவினை மட்டுப்படுத்துவதற்குப் பதிலாக வலுப்படுத்துவதை உறுதி செய்கிறது.

ஆசிரியர்கள் ஒரு சமநிலையான மதிப்பீட்டு அணுகுமுறையை நடைமுறைப்படுத்துவார்கள், அமைப்பு மதிப்பீடுகளை (தொடர், வகுப்பறை செயல்பாடுகள் மற்றும் பின்னூட்டல்) கூட்டு மதிப்பீடுகளுடன் (மொடியுலின் நிறைவில் மதிப்பீடுகள்) இணைப்பார்கள். அமைப்பு மதிப்பீடுகள் 70% ஆக இருக்கும், கூட்டு மதிப்பீடுகள் 30% ஆகும். புள்ளிகாள், தரங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட GPVகள் கீழே உள்ள அட்டவணை 2.10 இல் வழங்கப்பட்டுள்ளன.

**அட்டவணை 0.10 தரப்படுத்தல் முறைமை**

| புள்ளிகள் | தரம் | தரப் புள்ளி மதிப்பு (GPV) | தர விவரிப்பு | பெற்றுக் கொண்ட திறன் மட்டங்கள் |
|---|---|---|---|---|
| 80 - 100 | A | 4.00 | சிறப்பு | ஆம் |
| 75 - 79 | A- | 3.67 | மிக மிக நன்று | ஆம் |
| 70 - 74 | B+ | 3.33 | மிக நன்று | ஆம் |
| 65 - 69 | B | 3.00 | நன்று | ஆம் |
| 60 - 64 | B- | 2.67 | ஓரளவு நன்று | ஆம் |
| 55 - 59 | C+ | 2.33 | திருப்திகரமானது | ஆம் |
| 50 - 54 | C | 2.00 | ஓரளவு திருப்திரகமானது | ஆம் |
| 45 - 49 | S | 1.67 | சித்தி | ஆம் |
| 40 - 44 | D | 1.33 | துணைச் சித்தி | ஆம் |
| 35 - 39 | E | 1.00 | பலவீனம் | இல்லை |
| 0 - 34 | F | 000 | மிகப் பலவீனம் | இல்லை |

ஒரு மாணவர், ஒவ்வொரு பாடத்திலும் எவ்வாறு செயல்பட்டார் என்பதைப் பொருட்படுத்தாமல், கூட்டு மற்றும் அமைப்புக் கூறுகளிலிருந்து 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்றிருந்தால், அவர் ஒரு பாடத்தில் சித்தியடைந்தவராக கருதப்படுவார். குறைந்தபட்சம் 1.33 சராசரி புள்ளியுடன் 10 மணிநேர கற்றலை நிறைவு செய்த எந்தவொரு மாணவரும் ஒரு திறன் மட்டத்தைப் பெற்றவராக கருதப்படுவார்.

ஒவ்வொரு மொடியுல் மற்றும் பாடத்திற்கும் மாணவர் முன்னேற்றம் தரங்களுக்குரிய புள்ளி சராசரியாக (GPA) தெரிவிக்கப்படும், இது மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு கற்றலைக் கண்காணிக்கவும், இடைவெளிகளைக் கண்டறியவும், அடைவு மட்டங்களை மேம்படுத்த சரியான நேரத்தில் நடவடிக்கைகளை எடுக்கவும் ஒரு வெளிப்படையான வழிமுறையை வழங்குகிறது.

புதிய மதிப்பீட்டு நடைமுறைகளின் முக்கிய குறிக்கோள்கள் மற்றும் அம்சங்கள் பின்வருமாறு:

1. **மாணவர் மையக் கற்றலை மேம்படுத்துதல்**: மதிப்பீடுகள் வெறும் செயலாற்றுகை தரவரிசைக்கு அப்பால் சென்று, புரிதல், விமர்சன சிந்தனை, படைப்பாற்றல் மற்றும் அறிவைப் பயன்படுத்துதல் ஆகியவற்றில் கவனம் செலுத்துகின்றன.
2. **சமத்துவம் மற்றும் உட்படுத்தலை ஊக்குவித்தல்**: மதிப்பீட்டு நடைமுறைகள் பல்வேறு கற்றல் தேவைகள், மொழியியல் பின்னணிகள் மற்றும் சமூக-கலாச்சார சூழல்களை பூர்த்தி செய்யும், அனைத்து மாணவர்களுக்கும் வெற்றிபெற நியாயமான வாய்ப்புகள் இருப்பதை உறுதி செய்யும்.
3. **21ம் நூற்றாண்டு மற்றும் அதனைத் தாண்டிய திறன்களை விருத்தி செய்தல்**: மாணவர்கள் சிக்கல் தீர்க்கும் திறன், ஒத்துழைப்பு, விளைதிறனுடன் கூடிய தொடர்பாடல், டிஜிட்டல் அறிவு மற்றும் பிரஜைக்குரிய பொறுப்பு போன்ற திறன்களை விருத்தி செய்துகொள்வார்கள்
4. **ஆசிரியர் வாண்மைத்துவத்தை வலுப்படுத்துதல்**: தொடர்ச்சியான பயிற்சி மற்றும் இயலளவு விருத்தியினூடாக மதிப்பீடுகளை விளைதிறன்மிக்க வகையில் வடிவமைக்கவும், நிர்வகிப்பதற்கும், விளக்கமளிப்பது தொடர்பிலும் ஆசிரியர்கள் வலுவூட்டப்படுவார்கள்.
5. **பொருத்தம், வினைத்திறன் மற்றும் வாழ்நாள் முழுவதும் கற்றல் ஆகிய கொள்கை இலக்குகளை ஆதரித்தல்.** பாடசாலை அடிப்படையிலான அமைப்பு மதிப்பீடுகள் உயர்தர கல்வி, சிறந்த கற்றல் விளைவுகள் மற்றும் உயர்கல்வி, வேலைவாய்ப்பு மற்றும் முனைப்புடன் கூடிய குடியுரிமை ஆகியவற்றிற்கு கற்பவர்களை தயார்படுத்துவதற்கு பங்களிக்கும்..

இந்த முயற்சியானது மதிப்பீட்டு நடைமுறைகளில் ஒரு முன்னுதாரண மாற்றத்தை பிரதிபலிக்கிறது, கலைத்திட்டத்தில் அமைப்பு மதிப்பீட்டை உட்பொதித்து, வேகமாக வளர்ந்து வரும் உலகளாவிய சூழலில் நம்பிக்கையான, திறமையான மற்றும் பொறுப்பான கற்பவர்களை வளர்ப்பதற்கான இலங்கையின் அர்ப்பணிப்புடன் ஒத்துப்போகிறது.

### 2.4.4 சான்றுப்படுத்தல் முறைமை

புதிய சான்றிதழ் முறைமையானது மாணவரின் கற்றல் பயணத்தின் அனைத்து அம்சங்களையும் முறையாக அங்கீகரிக்கும். பாடசாலை இறுதிச் சான்றிதழ்கள், நிறைவு செய்துள்ள பாடங்கள் மற்றும் பாடத்துறைகள் மாத்திரமல்லாமல், பெற்ற அனைத்து புள்ளிகள், மேலதிக வளப்படுத்தல்கள் மற்றும் பல்வேறு துறைகளுக்கு இடையேயான தொகுதிகள் மற்றும் இணைப் பாடவிதானம் சார் அடைவுகள் ஆகியவற்றையும் விவரிக்கும். இந்த அணுகுமுறையானது கல்வி மற்றும் தொழிற்கல்வி கற்றல் சமமாக மதிப்பிடப்படுவதையும், ஒவ்வொரு மாணவரின் முழு அளவிலான திறன்களும் தொழில் வழங்குனர்கள், கல்லூரிகள் மற்றும் பயிற்சி நிறுவனங்களுக்குத் தெரியும் என்பதையும் உறுதி செய்கிறது.

மேலும், புதிய மதிப்பீட்டு முறைமையானது தேசிய கல்வி முகாமைத்துவ தகவல் முறைமை (NEMIS) மூலம் மையப்படுத்தப்படும், இது மாணவர், ஆசிரியர் மற்றும் பாடசாலை சுயவிவரங்களுடன் மதிப்பீட்டுத் தரவை ஒருங்கிணைக்கும். ஒருங்கிணைந்த தேசிய கல்வி தரவு அமைப்பானது NEMIS உள்ளக அமைப்புகளுடன் (LMS) இணைக்கப்படும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.5 பொது மக்கள் விழிப்புணர்வு மற்றும் மேம்பாடு

நாட்டின் கல்வி மறுசீரமைப்புக்களை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதானது, பொதுமக்கள் அதை எந்த அளவிற்கு உரித்தாக்கிக் கொள்கின்றார்கள் பொறுத்ததாகும். எனவே, கொள்கை வகுப்பாளர்கள், பாட நிபுணர்கள் மற்றும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ள ஏனைய பயிற்சியாளர்கள் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களின் அபிலாஷைகளுக்கு உணர்திறன் உடையவர்களாக இருக்க வேண்டும். மேலதிகமாக, கல்வி முறைமையில் அறிமுகப்படுத்தப்படும் மாற்றங்கள் நாட்டின் அபிவிருத்திப் பாதையை வழிநடத்த வேண்டும் என்பதால், சமூகத் தலைவர்கள், இளைஞர்கள், தொழில்துறைத் தலைவர்கள் மற்றும் சர்வதேச சமூகத்தின் கருத்துக்களைக் கேட்பது முக்கியம்.

# பகுதி 3: கண்காணிப்பு, மதிப்பீடு மற்றும் மீளாய்வு

கல்வி நிலைமாற்றத்திற்குரிய செயன்முறையை முறையாகவும் தொடர்ச்சியாகவும் கண்காணித்து மதிப்பீடு செய்வது அதன் வெற்றிக்கு முக்கியமாகும். நடைமுறைப்படுத்தும் நிறுவனங்கள் தங்களுக்கென கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டு வழிமுறைகளை உருவாக்கும் அதே வேளையில், கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டில் மூன்றாம் தரப்பினரை ஈடுபடுத்துவது அவசியம். மறுசீரமைப்புக்களை நடைமுறைப்படுத்துவதை தேசிய கல்வி ஆணைக்குழு முழுமையாக கண்காணித்து மதிப்பீடு செய்யும். இச் செயற்பாட்டின் போது செல்லுபடியாகும் மற்றும் நம்பகமான நடவடிக்கைகள் பயன்படுத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது, இதனால் பெறப்பட்ட தரவு வெற்றிகரமான கல்வி நிலைமாற்றத்திற்கான அடிப்படையாக அமையும்.


மேலும், தொடர்புடைய நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களுடன் உண்மையான நேரத்தில் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்வது மிக முக்கியமானது என்று வலியுறுத்தப்படுகிறது, ஏனெனில் இது ஒவ்வொரு ஆண்டும் தரங்களை பராமரிக்கவும் உயர்த்தவும் தர உறுதிப்பாட்டில் ஈடுபட பயிற்சியாளர்களை வழிநடத்த கண்காணிப்பு மற்றும் மதிப்பீட்டை நிறுவனம் எடுத்துக்கொள்ள உதவும்.

**நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்றிட்ட முகாமைத்துவ அலகு (PPMU)**

இந்தக் கல்வி மறுசீரமைப்பின் அளவு, சிக்கலான தன்மை மற்றும் தேசிய முக்கியத்துவம் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு, அனைத்து மறுசீரமைப்புக் கூறுகளிலும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்வதற்காக முழு செயல்முறையும் மையப்படுத்தப்பட்ட முறையில் நிர்வகிக்கப்படுவது அவசியம். எனவே, செயற்றிட்டத்தை மேற்பார்வையிடவும், ஒருங்கிணைக்கவும், வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதை உறுதி செய்யவும் ஒரு பிரத்தியேக நிகழ்ச்சித்திட்டம் மற்றும் செயற்றிட்ட முகாமைத்துவ அலகு (PPMU) நிறுவப்படும். PPMU பின்வருவனவற்றை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது:

- வாண்மைத்துவ மற்றும் மீள்தன்மையுடன் கூடிய நிகழ்ச்சித்திட்ட முகாமைத்துவ செயற்பாட்டை நிறுவனமயமாக்குதல்.
- அனைத்து மறுசீரமைப்புத் தூண்களிலும் தாமதங்கள், பணிநீக்கங்கள் மற்றும் செயல்படுத்தல் இடைவெளிகளைக் குறைத்தல்;
- தரவு சார்ந்த கொள்கை முடிவுகள் மற்றும் இடர் குறைப்பை நிகழ்நேர டேஷ்போர்டுகள் மூலம் செயல்படுத்துதல்
- எதிர்கால துறைசார் மறுசீரமைப்புக்களை முகாமை செய்வதற்கு கல்வி அமைச்சின் நீண்டகால உள்ளக இயலளவினை வலுப்படுத்துதல்.

## பின்னிணைப்பு 1: இலங்கையின் கல்வி முறையில் முன்னேற்றப் பாதைகள்



# பின்னிணைப்பு 2: பொதுக் கல்விக்கான கலைத்திட்ட சட்டகம்

சிரேஷ்ட இடைநிலைக் கல்வி மட்டம் 2

**க.பொ.த (உ./த) பரீட்சை**

**தரம் 13**

**தரம் 12**

**தரம் 12 மற்றும் தரம் 13 இற்கு தவணைக்குரிய பாடங்கள் மற்றும் மொடியுல்கள்**

**(கிடைக்கக்கூடிய பாடங்கள் மற்றும் மொடியுல்களுக்கு அட்டவணை 2.9 ஐப் பார்க்கவும்.)**

**ஐந்து பாடத்துறைகளிக் ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும் (விஞ்ஞானம்; தொழில்நுட்பம்; முகாமைத்துவம், முயற்சியாண்மை மற்றும் வணிக கல்வி; மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞானம்; மற்றும் தொழிற்கல்வி)**

விசேட பாடங்கள்: 03(27 திறன் மட்டங்கள்)
வளப்படுத்தல் மொடியுல்கள்: 03 (03 திறன் மட்டங்கள்)
துறைகளுக்கிடையேயான மொடியுல்கள்: 03 (03 திறன் மட்டங்கள்)
பொது ஆங்கிலம் 01 (02 திறன் மட்டங்கள்)
பொது தகவல் தொழில்நுட்பம்: 01(01 திறன் மட்டங்கள்)

சிரேஷ்ட இடைநிலைக் கல்விப் பருவம் 1

Students select either **Academic Learning Path** or **Skills Learning Path,** and accordingly they select Further Learning Modules

T6

மாணவர்கள் தரம் 12 மற்றும் தரம் 13 இல் வேறு பாடத்துறைகளைத் தொடர முடிவு செய்தால், அவர்களின் கற்றல் பாதையை மாற்றிக்கொள்ளவும், தொடர்புடைய

க.பொ.த (சா/த) பரீட்சை (கட்டாய பாடங்கள் மற்றும் விருப்பப் பாடங்களுக்கு மட்டும்; மொத்தம் 7 பாடங்கள்)

**தரம் 11**

**தரம் 10**

T5

T4

T3

T2

T1

**தரம் 10 மற்றும் 11 இல் தவணைக்குரிய பாடங்கள் மற்றும் மொடியுல்கள் (தவணை 1 முதல் 5 வரை)**

**(கிடைக்கக்கூடிய பாடங்கள் மற்றும் தொகுதிகள் மற்றும் பரீட்சைக்கான நிபந்தனைகளுக்கு அட்டவணை 2.4, 2.5, 2,6 மற்றும் 2.7 ஐப் பார்க்கவும்.)**

கட்டாய பாடங்கள்: 05 (14 திறன் மட்டங்கள்)
தெரிவுப் பாடங்கள்: 02 (04 திறன் மட்டங்கள்)
மேலதிக கற்றல் மொடியுல்கள் *: 07 (14 திறன் மட்டங்கள்)
நிலைமாற்றுத் திறன் மொடியுல்கள்: 03 (03 திறன் மட்டங்கள்)

**தவணைக்கான மொத்த திறன் மட்டங்கள் (கிரெடிட்):: 35**
**தவணைக்கான மொத்த கற்றல் மணித்தியாலங்கள்: 350**
**தவணைகளின் எண்ணிக்கை: 5**
**மொத்த கற்பித்தல் காலம்: 1750**

* மேலதிக கற்றல் மொடியுல்களை தேர்ந்தெடுப்பதற்கான

**தேசிய திறன் மதிப்பீடு**

**(மாணவர்கள் தங்கள் எதிர்கால கல்வி மற்றும் தொழில் பாதைகள் குறித்து தகவலறிந்த முடிவுகளை**

**தரம் 9**

**தரம் 8**

**தரம் 7**

**தரம் 6**

**தரம் 5**

**தரம் 4**

**தரம் 3**

**தரம் 2**

**தரம் 1**

Students select **Further Learning Modules** from 3 Subjects

முதன்மை நிலை 3

முதன்மை நிலை 2

முதன்மை நிலை 1

ஆரம்பக் கல்விப் பருவம்

**தரம் 6 முதல் தரம் 9 வரை தவணைக்கான பாடங்கள் மற்றும் மொடியுல்கள்**

**(கிடைக்கக்கூடிய பாடங்கள் மற்றும் மொடியுல்களை அட்டவணை 2.3 ஐப் பார்க்கவும்.)**

அத்தியாவசிய பாடங்கள்: 14 (28 திறன் மட்டங்கள்)

விளையாடு, கழகங்கள் மற்றும் சங்கங்கள்*: 01 (02 திறன் மட்டங்கள்)

மேலதிக கற்றல் மொடியுல்கள்**: 03 (03 திறன் மட்டங்கள்)

நிலைமாற்றுத் திறன் மொடியுல்கள்: 02 (02 திறன் மட்டங்கள்)

**தவணைக்கான மொத்த திறன் மட்டங்கள்: 35**

**தவணைக்கான மொத்த கற்பித்தல் காலம்: 350**

**ஒரு தரம் அல்லது வகுப்பிற்கான தவணைகளின் எண்ணிக்கை: 3**

**ஒரு வகுப்பு அல்லது தரத்திற்கான மொத்த கற்றல் மனித்தியாலங்கள்: 1050**

* விளையாட்டு, நூலகம் கழகங்கள் மற்றும் சங்கங்கள் என்பது மாணவர்கள் தங்கள் வழக்கமான கல்விக் கலைத்திட்டத்திற்கு வெளியே பங்கேற்கும் மாணவர்களின் ஈடுபாட்டைக் குறிக்கிறது. விளையாட்டு, கழகங்கள், தன்னார்வத் தொண்டு, பொழுதுபோக்குகள்

**ஆரம்பக் கல்விக்கான கற்றல் துறைகள்**

1. தாய் மொழி
2. ஆங்கில மொழி
3. இரண்டாம் தேசிய மொழி
4. கணிதம்
5. அடிப்படை விஞ்ஞானம் மற்றும் சுற்றாடல் சார் செயற்பாடுகள்
6. சமயம் மற்றும் விழுமியக் கல்வி,
7. ஒருங்கிணைக்கப்பட்ட அழகியல் கல்வி

**ஒவ்வொரு கற்றல் பகுதிக்கும் வாரத்திற்கு கற்பித்தல் மணிநேரங்களுக்கு**

**ஆரம்பக் கல்வி பின்வருவனவற்றை விருத்தி செய்வதில் கவனம் செலுத்துகிறது::**

1. அவரது அண்மித்த வீட்டு சமூகத்தைப் பற்றிய விழிப்புணர்வு மற்றும் புரிதல், படிப்படியாக தேசிய மற்றும் உலகளாவிய சூழல்களுக்கு இட்டுச் செல்கிறது.
2. வாழ்க்கையை சுவாரஸ்யமாகவும், துடிப்பாகவும், பயனுள்ளதாகவும் மாற்றும் கலாச்சார, சமூக, பௌதீகவியல், உயிரியல், சுற்றாடல், சூழலியல் மற்றும் புவியியல் பன்முகத்தன்மை பற்றிய ஆழமான புரிதல்.
3. 21 ஆம் நூற்றாண்டு மற்றும் அதற்குப் பிந்தைய காலத்தின் தேவைகளுக்கு ஏற்ற ஒரு பரவலான வாழ்க்கை முறையை வளர்ப்பதற்குத் தேவையான எழுத்தறிவு, எண் அறிவு மற்றும் சமூக மற்றும் கலாச்சாரத் திறன்கள்.
4. ஆரோக்கியமான வாழ்க்கை முறை, குணாதிசயம் மற்றும் குடியுரிமை தொடர்பான அடிப்படை வாழ்க்கைத் திறன்கள் பற்றிய புரிதல், மற்றும் 21 ஆம் நூற்றாண்டுக்குத் தயாராக இருக்கும் குடிமகனை உருவாக்க உதவும் நிதி கல்வியறிவின் அடிப்படைகள், மற்றும்
5. சமூக-மன்வெழுச்சித் திறன்கள் மற்றும் பல நுண்ணறிவுகளால் வளப்படுத்தப்பட்ட சமநிலையான ஆளுமைக்கான அடித்தளம்.

# இணைப்பு 3: பங்களிப்பாளர்களின் பட்டியல்

**இலங்கையில் பொதுக் கல்வியை நிலைமாற்றம் செய்வதற்கான கொள்கை ஆவணத்தைத் தயாரிப்பதில் பங்களித்தவர்களின் பட்டியல் -2025**

1. கலாநிதி ஹரிணி அமரசூரிய, கௌரவ பிரதமர் மற்றும் கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சர்
2. வைத்தியர், மதுர விதானகே, கௌரவ பிரதி அமைச்சர், கல்வி மற்றும் உயர் கல்வி பிரதி அமைச்சர்
3. திரு. நளின் ஹேவகே, கௌரவ பிரதி அமைச்சர், தொழிற் கல்வி பிரதி அமைச்சர்
4. திரு. நாலக களுவெவ, செயலாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
5. பேராசிரியர், மஞ்சுளா விதானபத்திரன, பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்
6. பேராரிசியர் சரத் ஆனந்த, தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு
7. திருமதி. எம்.ஏ.வீ.எஸ் எதிரிசூரிய, மேலதிக செயலாளர், கல்வி மறுசீரமைப்பு
8. திரு. நிஷாத் ஹந்துண்பத்திரன, ஓய்வுபெற்ற மேலதிக செயலாளர், கல்விப் பண்புத் தர விருத்தி
9. திருமதி. யூ.டீ திக்கும்புற, மேலதிக செயலாளர், இணைப் பாடவிதானம், ஆரம்பக் கல்வி அபிவிருத்தி
10. திருமதி. எம்.பீ.ஆர் காரியவசம், மேலதிக செயலாளர், பாடசாலை செயற்பாடுகள், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
11. திருமதி. எம்.ஏ.எச்.எம்.கீ.டீ.எஸ் சமரகோன், மேலதிக செயலாளர், கல்விப் பண்புத்தர விருத்தி

12. திருமதி. சுஜாதா குலேந்திரகுமார், மேலதிக செயலாளர், கொள்கை திட்டமிடல் மற்றும் செயலாற்றுகை மீளாய்வு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
13. திரு. கமல் ஆரியசிங்ஹ, மேலதிக செயலாளர், கல்விச் சேவைகள் ஆணைக்குழு, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
14. திரு. ஏ.ஜே.எஸ்.எஸ் எதிரிசூரிய, மேலதிக செயலாளர், தாபனம், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
15. திருமதி. பீ.டீ இரோஷினீ கே. பரனகம, பிரதம ஆணையாளர், ஆசிரியர் கல்விகல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
16. திருமதி. ரமணி நாலிகா தொடம்பெகமகே, பணிப்பாளர் நாயகம், திட்டமிடல், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
17. திருமதி சமந்தி சேனாநாயக்க, மேலதிக செயலாளர் தொழிற் பயிற்சி, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
18. திருமதி. எச்.டீ.சீ ஜானகி, மேலதிக செயலாளர், அரச சார்பற்ற உயர் கல்வி, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
19. திரு. ஹிமாலி அதாவுதகே, மேலதிக செயலாளர், தொழிற் கல்வி, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு
20. திருமதி ஏ.கே.எஸ் இந்திகா குமாரி லியனகே, பரீட்சை ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம்
21. திருமதி டீ.ஏ சுபாஷினி தெமட்டகொட, கல்வி வெளியீட்டு ஆணையாளர் நாயகம், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்
22. திரு. கே. ரஞ்சித் பத்மசிரி, பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

23. கலாநிதி. எஸ்.ஏ.டீ சமரவீர, பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

24. திருமதி. எம்.பீ.ஆர் தனவர்தன, பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

25. கலாநிதி. பீ.எச். குசுமாவதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

26. கலாநிதி. ஏ.டீ.ஏ. டீ சில்வா, பிரதிப் பணிப்பாளர் நாயகம், தேசிய கல்வி நிறுவகம்

27. பேராசிரியர் ஆர்.ஏ.எஸ்.பீ ரனபாஹு சேனாநாயக்க, தாவரவியல் மற்றும் மூலக்கூற்று உயிரியல், களணி பல்கலைக்கழகம்

28. **பேராசிரியர். சாலுகா ரணசிங்ஹ கொடிதுவக்கு, புள்ளி விபரவியல் மற்றும் கணிணி விஞ்ஞானம், விஞ்ஞான பீடம், பேராதெனிய பல்கலைக்கழகம்**

29. பேராசிரியர். ஆர்.எம் தம்மிக பண்டார ஹேரத், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

30. கலாநிதி. மேனகா லியனகே, சிரேஷ்ட விரிவுரையாளர், கணிதத் துறை, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகம்.

31. கலாநிதி அஸ்மரா ரொமோலா ரசூல், பணிப்பாளர், பட்டப் பின் ஆங்கிலக் கல்வி நிறுவனம் (PGIE), இலங்கை திறந்த பல்கலைக்கழகம்.

32. **திருமதி.ஏ.எம்.டீ யூ.எஸ் அமரதுங்க மகரகம தேசிய கல்வியியல் கல்லூரி**

33. சிரேஷ்ட பேராசிரியர், கே.எல் வசந்த குமார, தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

34. கலாநிதி ரமணி ஜயதிலக, ஓய்வு பெற்ற இணைப்பு பேராசிரியர், கொழும்பு பல்கலைக்கழகம்

35. கலாநிதி, சுமுதி சுரவீர, சங்கீத விடயங்களுக்குரிய பணிப்பாளர்

36. கலாநிதி. எம். திருவரங்கன், சிரேஷ்ட விரிவுரையாளர், மொழியியல் மற்றும் ஆங்கிலத் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

37. திரு. யூ.வீ மொலியகாந்தி, ஓய்வு பெற்ற வலயக் கல்விப் பணிப்பாளர், ஹொரணை

38. பேராசிரியர் டீ.டீ கருணாரத்ன, கொழும்பு பல்கலைக்கழக கணிக் கல்லூரி

39. திருமதி. சிராணி வீகா லீலா மில்ஸ், நிறைவேற்று பணிப்பாளர், பெண்கள் கல்வி மற்றும் ஆராய்ச்சி நிலையம்

40. திரு. முர்தஷா ஏ.எச் யூசுபலி, குழுப் பணிப்பாளர், ஹேமாஸ் ஹோல்டிங் பீ.எல்.சீ

41. திரு. மஹமூத் ரியாத் அமீன், சபை அங்கத்தவர், தேசிய கல்வி நிறுவகம்

42. திரு. திலக் வத்துஹேவா, மேலதிக ஆணையாளர் நாயகம், பரீட்சைத் திணைக்களம்

43. திருமதி டப்.ஏ.எஸ் புத்திகா பெரேரா, பரீட்சை ஆணையாளர், நிர்வாகம் மற்றும் விசாரணை

44. திரு. டி.எஃப்.பி.எஸ்.டி. பெரேரா, கல்விப் பணிப்பாளர், கலைத்திட்ட மறுசீரமைப்பு

45. திரு. எம்.டீ.வீ மலிந்த, கல்விப் பணிப்பாளர், டிஜிட்டல் கல்வி மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அபீருத்தி

46. திரு. கே.ஏ.யூ.எஸ் சிசிரபந்து, கல்விப் பணிப்பாளர், கல்வி நிர்வாக மறுசீரமைப்பு

47. திரு. வருண அலஹகோன், கல்விப் பணிப்பாளர், அழகியல்

48. திருமதி. எச்.எச்.வீ.எம் சஞ்ஜீவனி, கல்விப் பணிப்பாளர், தொழில்நுட்பக் கல்வி

49. திரு. கே.டீ பந்துல குமார, கல்விப் பணிப்பாளர், விஞ்ஞானம்

50. திருமதி டப்.கே.எஸ்.எஸ் பெரேரா, கல்விப் பணிப்பாளர், திட்டமிடல் மற்றும் இயலளவு விருத்தி

51. திருமதி என்.வீ.டீ.எச் குணவர்தன, ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

52. செல்வி, டீ.எம்.ஏ.எஸ் தென்னகோன், பிரதி ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

53. திருமதி. ஈ.டப்.ஜி சஞ்ஜீவனி, பிரதி ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

54. செல்வி, ஏ.டப்.எஸ் ராஜகருணா, பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

55. திருமதி. டப்.ஏ.எஸ்.டப். விஜேசூரிய, பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

56. திருமதி. எஸ். ஆர் வசீர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

57. திரு. சூலங்க பெரேரா, பிரதான தொழில்நுட்ப உத்தியோகத்தர், ஹேமாஸ் பீ,எல்.சீ

58. திரு. ஜீ.எஸ்.கே.என் ஹேவகே, பிரதிக் கல்விப் பணிப்பாளர்

59. திரு. எஸ்.எம் வரகாகொட, பிரதி ஆணையாளர், பரீட்சைகள் திணைக்களம்

60. திருமதி. கே.டீ.டீ விமலசிரி, பிரதி ஆணையாளர், பரீட்சைகள் திணைக்களம்

61. கலாநிதி துமினா லெல்லுபிட்டிய, சிரெஷ்ட விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

62. திருமதி ப்ரமிலா இலுக்குமுர, உதவி விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

63. திருமதி அமானி குணவர்தன தகவல் தொழில்நுட்பம், ஆலோசகர்

64. திருமதி சுரன் சிரிவர்தன, பணிப்பாளர், விநியோகம்

65. திரு. கே.டீ. எல். சந்திரசிரி, பிரதி ஆணையாளர், கல்வி வெளியீட்டுத்

திணைக்களம்

66. திருமதி. கே.டீ ஹிமந்தி குமாரி, பிரதி ஆணையாளர், கல்வி வெளியீட்டுத்

திணைக்களம்

67. திருமதி. எச்.ஐ.டீ.டீ ஹெட்டியாரச்சி, கல்விப் பணிப்பாளர், விவசாயம், கல்வி

உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

68. கலாநிதி அஜித் பொல்வத்த, பிரதிப் பணிப்பாளர் நாயகம், மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு

69. திருமதி. எம்.எஸ்.டீ.எம் யஹம்பத் , உதவிப் பணிப்பாளர் (பயிற்சி), தொழிற்

பயிற்சி ஆணைக்குழு

70. கலாநிதி. எஸ். யூ.பீ ஜினதாஸ, பீடாதிபதி, FEM, சமுத்திர பல்கலைக்கழகம்

71. திருமதி. கே.ஜீ.எல் நிரீஷா, பிரதி ஆணையாளர், கல்வி வெளியீட்டுத்

திணைக்களம்

72. பேராசிரியர், ஜீ.எல்.டீ விக்ரமசிங்ஹ, தலைவர், மூன்றாம் நிலை மற்றும் தொழிற்

கல்வி ஆணைக்குழு

73. திருமதி ஏ.எச்.ஜீ.ஆர்.ஈ குணவர்தன, பரீட்சைத் திணைக்களம்

74. திருமதி எச்.பீ.பீ ரணசிங்ஹ, பிரதிக் கல்விப் பணிப்பாளர், , கல்வி, உயர் கல்வி

மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

75. திரு. டீ.பீ சுபசிங்ஹ, பணிப்பாளர், தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற்

பயிற்சி அதிகாரசபை

76. திரு. திலக் தர்மரத்ன, உதவித் தலைவர், தேசிய கல்வி ஆணைக்குழு

77. திருமதி. டீ.சீ.என் தர்மபால, பணிப்பாளர், சமூக விஞ்ஞானத் துறை, தேசிய கல்வி நிறுவகம்

78. திரு. கே.ஜீ.ஏ ரூபசேன. பணிப்பாளர், அழகியல் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்

79. திரு. கே.ஜீ.டப்.கே கட்டுகுருந்த, பணிப்பாளர், தொழில்நுட்பக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்

80. திரு. எஸ் சண்முகலிங்கம், பணிப்பாளர், தகவல் தொழில்நுட்பத் துறை.

81. திருமதி. எம்.என்.பீ மத்துமகே, விரிவுரையாளர், தகவல் தொழில்நுட்பத் துறை.

82. திருமதி ஜீ.கே வெரோஷா, உதவி விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

83. திருமதி. ஜீ.ஜீ டீ.சீ.டீ கீகியனகே, உதவி விரிவுரையாளர், ஆங்கிலத் துறை, உ, தேசிய கல்வி நிறுவகம்

84. திருமதி. ஜே.எம்.வீ குமாரி, உதவி விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

85. திரு. கைலாசம்பிள்ளை, விரிவுரையாளர், வணிகத் துறை, தேசிய கல்வி நிறுவகம்

86. திரு. எஸ். ஆர். ரத்னஜீவ, விரிவுரையாளர், வணிகத் துறை, தேசிய கல்வி நிறுவகம்

87. திரு. ஜீ.கே கமகே, சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

88. திரு. ஜீ.ஆர்.பீ.எம் சமநாயக்க, உதவி விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

89. திரு. ஈ.ஏ.சீ.என் பெரேரா, சிரேஷ்ட விரிவுரையாளர் தேசிய கல்வி நிறுவகம்

90. வண. உடுகம சுதஸ்சி தேரோ, சமயம் மற்றும் விழுமியக் கல்வித் துறை, தேசிய கல்வி நிறுவகம்

91. திரு. ஜீ.பீ.எச். ஜகத் குமார, பணிப்பாளர், கணிதத்துறை, தேசிய கல்வி நிறுவகம்

92. திருமதி, மெதிவக, உதவி விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

93. திரு. எம்.எம்.எஸ் விக்ரமசிங்ஹ, விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

94. திருமதி. எச்.எம் மாபா குணரத்ன, சிரேஷ்ட விரிவுரையாளர், தேசிய கல்வி நிறுவகம்

95. திருமதி. டீ.ஜே.வை பதிரனகே, பணிப்பாளர், தேசிய கல்வி நிறுவகம்

96. திருமதி. ஆர்.எம்.கே டீ சில்வா, பணிப்பாளர், ஆரம்பக் கல்வி, தேசிய கல்வி நிறுவகம்

97. திருமதி. எச்.பீ ருக்மலீ, பிரதிக் கல்விப் பணிப்பாளர், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளை, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

98. கலாநிதி. வண. கே குக்குரம்பொல ஞானவிமல தேரர், பணிப்பாளர், சிங்கள மொழித் துறை, தேசிய கல்வி நிறுவகம்.

99. திருமதி. எம்.ஏ.எம்.டீ.யூ கே அமரசிங்க, கல்விப் பணிப்பாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

100. திரு. எஸ் ஜெயகுமர்ர், பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

101. திரு. டீ.பீ.கே.எம் விஜேசிங்ஹ, உதவிக் கல்விப் பணிப்பாளர், , கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

102. திருமதி எஸ். மனோகரன், பிரதிக் கல்விப் பணிப்பாளர், ஆர்மபக் கல்வி, , கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

103. திரு. கோதம காரியவசம், ஆணையாளர் (அபிவிருத்தி)

104. திருமதி ஜே.எச்.பீ ஆரியரத்ன, பிரதிக் கல்விப் பணிப்பாளர், வணிக கல்வி, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

105. திரு. ஜே நாணயக்கார,

106. திரு. பீ.ஏ.எல் ரெஜினோல்ட், ஓய்வுபெற்ற பிரதிக் கல்விப் பணிப்பாளர்

107. திரு. பீ.ஏ.எஸ். பீ ஜயலத், SESIP, கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

108. திரு. சுமித் பராக்ரமவன்ச, கல்விப் பணிப்பாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

109. திரு. டப்.டீ.டீ ஜயவர்தன, பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

110. திருமதி. டப்.டப்.டப்.ஏ.பீ நில்மினி, சிரேஷ்ட கொள்கை ஆராய்ச்சி உத்தியோகத்தர், தேசிய கல்வி ஆணைக்குழு

111. திரு. எம்.பீ அபேநாயக்க, பிரதிக் கல்விப் பணிப்பாளர் /சமயம் மற்றும் விழுமியக் கல்வி

112. திரு. ஏ.எச்.எம் பாஸில், பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

113. கே.கே.டீ.எம்.எஸ்.எஸ். சமரதிவாகர, பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

114. திரு. ஆர்.எம்.ஜே.சீ குமார, பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

115. திரு. எம்.எம்.வீ.எஸ் குணதிலக, கல்விப் பணிப்பாளர், (முறைசாரா மற்றும் விசேட கல்வி), கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

116. பேராசிரியர். வசந்த ரத்னாயக்க– உப வேந்தர் – இலங்கை சமுத்திரப் பல்கலைக்கழகம்

116. கலாநிதி. எல்.டப்.எஸ் குலரத்ன – உப வேந்தர் – வாழ்க்கைத் தொழில்சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்

117. திரு. எஸ். ஏ. சத்தார் – தலைவர் – தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழில் பயிற்சி அதிகாரசபை

118 திரு. வீ.பீ வீரதுங்க – தலைவர் – தொழிற் பயிற்சி அதிகாரசபை

119. கலாநிதி கே.ஏ. லலித்ததீர - பணிப்பாளர் நாயகம் – மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழு

120. கலாநிதி ஜே.ஏ.டீ.ஜே ஜயலத் – சிரேஷ்ட விரிவுரையாளர் –வாழ்க்கைத்தொழில் சார் தொழில்நுட்ப பல்கலைக்கழகம்

121. திரு. எஸ். சீ ஜகத் - பணிப்பாளர் நாயகம் - தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்

122. திரு. சன்ன சபசிங்ஹ – பணிப்பாளர் - தேசிய பயிலுனர் மற்றும் கைத்தொழிற்துறைப் பயிற்சி அதிகாரசபை

Authority

123. திருமதி பீ,ஜீ.ஐ. களனி ஹேமாலி – கல்விப் பணிப்பாளர் (ஆரம்பக் கல்வி) கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

124. திருமதி. பீ.பீ நிரோஷி - கல்விப் பணிப்பாளர் – (கணிதம்) , கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

125. திருமதி. என்.ஏ பதுரலிய - கல்விப் பணிப்பாளர் – (ஆங்கிலம் மற்றும் வெளிநாட்டு மொழிகள்),

கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

126. திரு. பாலித லியனகே - கல்விப் பணிப்பாளர் (தேசிய மொழிகள் மற்றும் மானுடவியல்) கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

127. லெப்.கேர்னல் ஜீ ஜீ அனுர அபேவிக்ரம – கல்விப் பணிப்பாளர் (உடற் கல்வி மற்றும் விளையாட்டு) கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

128. திருமதி. டபிள்யூ.எம்.டி. குமாரி – பணிப்பாளர் (திட்டமிடல்) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களம்)

129. திருமதி திமுது சந்திரசிறி, பணிப்பாளர், தொழிற் கல்வி

130. திருமதி. ஏ.டீ. பாலபடபெந்திகே, பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

131. திரு. டப்.டீ. தில்ருக் ஜயவர்தன, பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு

132. திரு. டப்.ஏ.கே ஜயசிங்ஹ, பிரதி ஆணையாளர், பரீட்சைகள் திணைக்களம்

133. திருமதி. ஜீ.எம்.ஏ.டீ.என் முஹந்திரம், பிரதி ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

134. திரு. பீ.கே சாந்த குமார உதவிக் கல்விப் பணிப்பாளர்

135. திருமதி. சீ.டீ ரத்னவீர, உதவி ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

136. மேஜர் ஜெனரல் ப்ரியந்த வீரசிங்ஹ, பணிப்பாளர் நாயகம், இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை

137. திரு. பீ.ஜீ.ஜீ மிலிந்த, பணிப்பாளர் (திறன் விருத்தி)

138. திருமதி. என்.சீ தசனாயக்க, பிரதி ஆணையாளர், கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

139. திரு. எம். தரிந்து விஜேரத்ன, பிரதிக் கல்விப் பணிப்பாளர், கல்வி, உயர் கல்வி மற்றும் தொழிற் கல்வி அமைச்சு